
கல்கி

பொழுதுபோக்குச் சிறப்பிதழ்



KALKI 17-11-74 60 காசு







everest/858/SH tm

மெல்லிசையன்று, மின் வேக இசை!

அச்சக் கலை மூன்றாண்டுகள் பயின்று டிப்ளோமா (L.P.T.) வாங்கிய இளைஞர் ஏ. வி. ரமணன் இன்று ஆயிரக்கணக்கான ரசிகர்களைத் தமது இசை முழக்கத்தால் மனம் மகிழச் செய்கிறார். அவரது இசை கேட்க வருவோரெல்லாம் இளைஞர்கள் அன்று; கிழவர்களும் வயதான பாட்டிகளும்கூட வந்து ரசிக்கிறார்கள்! ராமகிருஷ்ண மிஷன் உயர்நிலைப் பள்ளியில் பயிலும்போதே பாடிப் பரிசுகள் பெற்றுள்ளார்!

''பொதுமக்கள் முன் முதன்முதலாக நீங்கள் எப்போது மேடை ஏறிப் பாடினீர்கள்?'' என்று கேட்கிறேன்.

''அண்ணாமலை மன்றத்தில் ஆறு வருடங்களுக்கு முன்பு காமேஷ் — ராஜாமணி இசைக் குழுவில் எஸ். டி. பர்மனின் 'ஆராதனா' படப் பாடலைப் பாடினேன். லயோலாவில் புகுமுக வகுப்பில் படித்துக் கொண்டிருந்த போதே அடிக்கடி இசை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டேன். அதுவே என் படிப்பைத் தொடரக் குந்தகமாக அமைந்தது. படிப்பை நிறுத்திவிடும்படி ஆயிற்று.''

''நீங்கள் தனியாக 'மியூசியானோ' என்ற பெயரில் ஒரு குழுவை அமைத்துக் கச்சேரி செய்ய ஆரம்பித்தது எப்போது?''

''1973-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 'நவரச' சபையின் ஆதரவில், மயிலாப்பூர் கிளைவ் ஆர்ட்ஸ் அரங்கில்தான் எனது குழுவின் முதல் நிகழ்ச்சி நடைபெற்றது. உமா வேங்கடராமனும் — டி. எல். ராமச்சந்திரனும் என் குழுவில் பாடுகிறார்கள். எங்கள் குழுவில் பாடுபவர்களும் இசைக் கருவிகள் வாசிப்பவர்களுமாகச் சேர்ந்து மொத்தம் பதினேழு பேர். அவர்களுள் பதினைந்து பேர் பட்டதாரிகள். எல்லாரும் மிகவும் அந்நியோந்நியமாக மனம் விட்டுப் பேசிப் பழகுவோம்.''

''இசை நிகழ்ச்சிகளுக்கு நீங்கள் எத்தகைய பாடல்களைத் தேர்ந்தெடுக்கிறீர்கள்? எந்த அடிப்படையில்?''

''கேட்க இனிமையான பாடல்களை — Sweet Tempo — இருக்கிற பாடல்களாகத் தேர்ந்தெடுக்கிறோம். ஆபாசமான கருத்தமைந்த பாடல்களை ஒதுக்கிவிடுகிறேன். வெற்றிகரமாக ஓடும் திரைப்படங்களில் இடம் பெறும் நல்ல பாட்டுக்களை 'செலக்ட்' செய்கிறோம். 'விவித் பாரதி' மூலம் அதிகமாகப் 'பாப்புலர்' ஆன பாடல்களை நாங்கள் நிச்சயம் தேர்ந்தெடுக்கிறோம். எவ்வளவுதான் நல்ல பாட்டாக இருந்தாலும் 'பாப்புலர்' ஆகாத பாடல்களுக்குக் கைதட்டல் இருப்பதில்லை.''

''உங்களது நிகழ்ச்சிகளில் ரசிகர்கள் மிகவும் விரும்பும்பாடல்களைக்குறிப்பிட முடியுமா?''

படம்: ராமச்சந்திரன்





கணக்கில் கெட்டிக்காரரான ஒரு பட்டதாரிக்குச் சிறிது ஞாபக மறதி உண்டு. ஒரு சமயம் ஒரு கணக்குப் போட்டுக் கொண்டிருந்தார். அப்போது தாம் எழுதிய மூன்று எண்களைக் கூட்ட வேண்டுமா? அல்லது ஒன்றுடன் ஒன்று பெருக்க வேண்டுமா என்ற சந்தேகம் வந்துவிட்டது.

ஏனென்றால், அந்த மூன்றையும் ஒன்றுடன் ஒன்று கூட்டிப் பார்த்தாலும், ஒன்றால் ஒன்றைப் பெருக்கிப் பார்த்தாலும் ஒரே விடைதான் வந்தது.

அந்த மூன்று எண்களும் என்னென்ன ?

விடை: 1, 2, 3.



◇

விசில் மாறாட்டம்!

1960ல் ரோமில் ஒலிம்பிக் ஹாக்கிப் போட்டி நடந்து கொண்டிருந்தது. பெல்ஜியத்துக்கும் பிரான்ஸுக்கும் நடந்த பந்தயத்தில் விசில் சத்தம் கேட்டு பெல்ஜியம் ஆட்டக்காரர் பிரான்ஸ் ஆட்டக்காரர் கோலுக்கு அருகில் முன்னேறுவதைத் தடுப்பதை விட்டு அமர்ந்து நின்றார்! அம்பயர் 'கோல்' என்று அறிவித்துவிட்டார்! உண்மை என்னவென்றால் அந்த விசில் சத்தம் அம்பயரிடமிருந்து எழவில்லை; காலரிக்கு நின்ற போலீஸ்காரரிடமிருந்து எழுந்தது. இதை பெல்ஜியம் 'கோஷ்டி'யினர் ஆட்சேபித்தனர். ஆட்ட நீதிபதிகள் ஆட்டத்தை நிர்ணயிப்பதற்கு அம்பயருக்கே உரிமை என்று பெல்ஜியம் கோரிக்கையை நிராகரித்து விட்டனர்!



''பாம்பே டு கோவா' என்ற ஹிந்திப் படத்தில் வரும் 'தேகானு' என்ற பாடலை ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் பாடுவேன். 'ஆப்பி கடைம்' படத்தில் வரும் 'ஜே ஜே சிவசங்கர'வும் ரசிகர்களுக்குப் பெரிதும் உற்சாகம் அளிக்கிறது. 'மனிதருள் மாணிக்கம்' படத்தில் இடம் பெறும் I will sing for you என்ற பாடலை டி. எஸ். ராமச்சந்திரன் பாடும் போது அவையோர் மிக்க மகிழ்ச்சி அடைவார்கள். 'மல்லிகை-என் மன்னன் மயங்கும்' என்ற 'தீர்க்கசுமங்கலி' பாடலை உமா வெகு அழகாகப் பாடுவார்'' என்கிறார் ரமணன்.

குமாரி உமா, பழநி விஜயலக்ஷ்மியிடம் ஆறு வருட காலம் கர்நாடக சங்கீதம் பயின்றுள்ளார். டி. எஸ். ராமச்சந்திரன், களக்காடு ராமநாராயண அய்யரிடம் கர்நாடக இசை பயின்று வருகிறார். ''பி. எஸ்ஸி. படித்து முடித்து விட்டேன். வேலை தேடிக் கொண்டிருக்கிறேன்'' என்கிறார் அவர்.

''உங்களைப்போல் மெல்லிசை நிகழ்ச்சிகள் பலர் நிகழ்த்துகிறார்கள். பொதுவாக இது போன்ற நிகழ்ச்சிகளுக்குக் கூட்டமும் நிரம்ப வருகிறது. இதனால் கர்நாடக சங்கீதம் பாதிக்கப்படுமா?''

''நான் பாடுவது மெல்லிசையே இல்லை, சார்! அசுர வேகத்தில் பாடுகிறோம். முன் வரிசைகளில் உட்காருகிறவர்கள் சிலர் 'காதைத் துளைக்கிறதே' என்று கூறும் அளவுக்குப் பல இசைக் கருவிகள் முழங்குகின்றன. எனவே இதனை மெல்லிசை என்று கூறுவதை நான் ஒப்புக் கொள்ளமாட்டேன். நமது கர்நாடக சங்கீதம் அழிவே இல்லாதது. கர்நாடக சங்கீதம் இதனால் சற்றும் பாதிக்கப்படாது. மேலும் எங்கள் நிகழ்ச்சிகளில் இடம் பெறும் பாடல்கள் பல Carnatic base உள்ளவை. திரு எம். எஸ். விசுவநாதன் இசை அமைக்கும் பாடல்கள் பெரும்பாலும் கர்நாடக இசையை அடிப்படையாகக் கொண்டவையே. அந்தப் பாடல்கள்தாம் இப்போது மிகவும் 'பாப்புலர்' ஆக உள்ளன'' என்று தமது கருத்தை விளக்குகிறார் ரமணன்.

பேட்டி: பாணன்





ரமணன்

1961

1961ம் வருடம். இந்த எண்ணைப் பல கோணங்களிலும் பாருங்கள். ஒரு குறிப்பிட்ட கோணத்தில் பார்த்தால் ஒரு விந்தையான அமைப்புத் தெரிய வரும். அது என்ன?

(2) அதே போல் அமையக்கூடிய மற்றொரு வருடம் எப்போது வரும்?

விடை: (1) 1961ஐ தலை கீழாகத் திருப்பிப் பார்த்தால் அதே 1961 மாதிரி இருக்கும். (2) இன்னும் 4035 ஆண்டுகளுக்குப் பின்னர் வரும் 6009ம் ஆண்டைத் திருப்பிப் பார்த்தால் அந்த வருடமும் அதே மாதிரி இருக்கும்.

★ ★ ★ ★ ★ ★ ★

''அறிவாளியின் பொழுது எப்படிப் போகிறது?''

''காலை நேரம் சூதாட்டத்தில் போகிறது. பகல் நேரம் பெண் பேச்சில் போகிறது. இரவு நேரம் திருடனைப் பற்றிய பேச்சில் போகிறது!'' - விகண்டையாக விடையளிக்கிறார் பண்டைய வடமொழிக் கவிஞர் ஒருவர்.

''அறிவாளிகளைக் கேலியா செய்கிறீர்கள்?''

''அபசாரம்! அப்படிச் செய்வேனா நான்? காலை நேரத்தில் பாரதம் படிக்கிறார்கள் சூதாட்டம்தானே அத்தனை பெரிய பாரதத்துக்குக் காரணம்? பகலில் ராமாயணம் படிக்கிறார்கள். சீதை என்றும் பெண்ணுக்காக எழுந்தது தானே ராமாயண காவியம்? இரவு பாகவதம் படிக்கிறார்கள். உள்ளங்கவர் கள்வன் கண்ணனின் கதையைக் கூறும் காவியம் அல்லவா பாகவதம்! அதைத்தான் இப்படிச் சொன்னேன்!'' என்கிறார் அந்தக் கவிஞர்.



—ரா.வி.

What do seven different tyre companies have in common?

M		F		G		
A		I		O	P	
N	**I**	**R**	**C**	**O**	**R**	**D**
S	N	E	E	D	E	U
F	C	S	A	Y	M	N
I	H	T	T	E	I	L
E	E	O		A	E	O
L	K	N		R	R	P
D		E				

That's it. Nircord - India's first nylon tyre cord. Nircord is the super-strengthener for all better-grade tyres made in India today.

nircord®

® Regd. Trade Mark

Nirlon Synthetic Fibres & Chemicals Ltd.

Nirlon House, 254-B, Dr. Annie Besant Road, Bombay-400 025.

Interpub/NIR-C/46A/74

ஆனந்த. கார்த்திகை 2 நவம்பர் 17. '74

★

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

கல்கி
அடுத்த வாரம்:



ஒற்றர் ஜாக்கிரதை

சித்திரக் கதை

கதை: நாடோடி

சித்திரம்: ராஜு



ஒவ்வொரு நாளும் உங்கள் சருமம் சிறிது ஈரப்பசை - யையும், சிறிது இளமையையும் இழக்கின்றது.



புதிய ஜான்ஸன்ஸ்* பேபி லோஷன் ஒவ்வொரு நாளும் ஏற்படுகின்ற அந்த இழப்பை ஈடுசெய்கின்றது.

ஒரு பெண்மணியின் விலை யில்லாப் பொக்கிஷம் அவளது சருமம். எனினும், வயதாக ஆக, அதை அழகாகவே வைப்பது கடினமாகும். வருங் காலத்தில் உங்கள் சருமத்தை அழகாக வைக்கவேண்டு மானால், அதை இன்று முதலே நன்று பராமரிக்கவேண்டும். ஆகையால்தான் உங்களுக் குத் தேவை புதிய ஜான்ஸன்ஸ் பேபி லோஷன். இந்த விசேஷ அழகு லோஷன் சருமத்திற்கு இன்றியமையாத ஈரப் பசையை நிலை நிறுத்துகிறது.

அதோடு, கடுமையான குளிர் மாதங்களில் உங்கள் சருமத்தை மிருதுவாகவும், இளமையுடனும், அழகொளி வீசும்படியும் வைக்கிறது— ஆண்டு முழுவதும் கூட. எனவே, ஒவ்வொரு காலையிலும் இரவிலும் புதிய ஜான்ஸன்ஸ் பேபி லோஷன் உபயோகியுங்கள். உங்கள் முகம், கழுத்து மற்றும் கைகளில் உபயோகித்து, உங்கள் சருமத்திற்குப் பனிபோன்ற புதுமையைப் அளித்திடுங்கள்.



புதிய ஜான்ஸன்ஸ் பேபி லோஷன்

உங்கள் சருமத்தை மிருதுவாக, இளமை தவழ, அழகொளி வீச வைக்கின்றது.

ஜெயப்பிரகாசரின் சிந்தனைக்கு!

கல்கி

மலர் 34

இதழ் 16

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

மக்களின் போராட்டமாக ஆரம்பமான பீகார் இயக்கம் இன்று தலைவர்களிடையே ஒரு கௌரவப் பிரச்னையாக மாறிவிட்டிருக்கிறது. அதனால்தான் இந்திரா காந்தியும் ஜெயப்பிரகாசரும் சந்தித்து நீண்ட நேரம் உரையாடிய பின்னரும் ஒரு நல்ல முடிவுக்கு அவர்களால் வர முடியவில்லை. தலைவர்களின் பிடிவாதத்துக்கு நாடு பலியாகிக் கொண்டிருக்கிறது.

'லஞ்ச ஊழல் எல்லா மட்டங்களிலும் மலிந்து விட்டது: பீகார் மந்திரி சபை ராஜிநாமா செய்ய வேண்டும்; சட்டசபை கலைக்கப்பட வேண்டும்' என்கிறார் ஜெயப்பிரகாசர். இந்திரா காந்தியோ, 'ஜனநாயக ரீதியாக, சட்டரீதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபையை எப்படிக் கலைப்பது? ஆளும் கட்சி பெரும்பான்மை பலம் பெற்றிருக்கும்போது அதைப் பதவி நீங்குமாறு எப்படி சொல்லலாம்?' என்று கேட்கிறார்.

'சட்டசபை கலைக்கப்படாத வரை போராட்டம் நீடிக்கும்' என்கிறார் ஜெயப்பிரகாசர். அது மட்டுமா? புது தில்லியிலும் இந்திராவின் யதேச்சாதிகாரத்தை எதிர்த்துப் போர்க் கொடி உயர்த்தியிருக்கிறார். இந்த இயக்கம் இதர மாநிலங்களுக்கும் பரவும் என்று எச்சரிக்கிறார்.

இந்த இயக்கத்துக்கு எதிர் இயக்கமாக ஜனநாயகத்தைக் காக்கும் இயக்கத்தை ஆளும் காங்கிரஸ் தோற்றுவித்திருக்கிறது! இதில் கம்யூனிஸ்டுகளும் சேர்ந்து கொண்டிருக்கிறார்கள்! ஜனநாயகத்தைக் காப்பதாகக் கூறிக் கொண்டு ருத்திராட்சப் பூனை புறப்பட்டிருக்கிறது!

இரு சாராரின் பிடிவாதத்துக்கிடையில் பீகார் மாநிலம் பரிதவிக்கிறது. கதவடைப்பு, வேலைநிறுத்தம் என்றால் கஷ்டமும் நஷ்டமும் சம்பந்தப்பட்டவர்களுக்கு மட்டுமில்லை. மக்களுக்கும் தான்; தேசத்துக்கேதான். ராணுவத்தை உதவிக்கு அழைக்கும் அரசாங்கத்தின் அடக்குமுறை ஒருபுறமும், வன்முறையில் இறங்கும் சதிகாரர்களின் தண்டவாளம் பெயர்ப்பது, பொது இடங்களுக்குத் தீ வைப்பது போன்ற அக்கிரமங்கள் மறுபுறமுமாக நாட்டின் கௌரவமே பாழாகிக் கொண்டிருக்கிறது.

ஜெயப்பிரகாசர் பீகாரில் நிலவுவதாகச் சுட்டிக்காட்டும் நிலைமைகள் இந்தியா முழுவதுமே உள்ளன. ஆட்சியில் லஞ்ச ஊழல், தேர்தல் ஊழல், பொருளாதார நெருக்கடி, விலைவாசி உயர்வு இவற்றால் தேசத்தின் மூலைமுடுக்குகளிலெல்லாம் மக்கள் பாதிக்கப்பட்டு விசனிக்கின்றனர். இதையெல்லாம் ஜனநாயகத் தர்மத்துக்கு இசைய மாற்றி அமைத்தே ஆக வேண்டும். அதற்கு என்ன வழி?

எதிர்க்கட்சித் தலைவர்கள் ஒன்றுகூடி ஆலோசிக்க வேண்டும். பணத்தின் செல்வாக்குப் பயனற்றுப் போகும் விதத்தில் தேர்தலை எப்படி நடத்தலாம் என்று வழிவகுத்துக் காட்ட வேண்டும். எதிர்க்கட்சியினர் இதில் இணைந்து செயல்பட்டால் அவர்கள் யோசனையை ஏற்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளும் கட்சியும் தேர்தல் கமிஷனும் உள்ளாகும்.

இதன் பின், எதிர்க் கட்சித் தலைவர்கள் சிறந்ததொரு பொருளாதார மாற்றுத் திட்டத்தைத் தயாரித்து மக்கள் முன் சமர்ப்பித்து அவர்களின் ஒப்புதல் பெறட்டும். அத்துடன் நேர்மையானவர்கள் என்று பெயரெடுத்தவர்களை மட்டுமே அபேட்சகர்களாய் நிறுத்தி, லஞ்ச ஊழலற்ற நல்ல ஆட்சியை வழங்கப் போவதாக அறிவிக்கட்டும்.

இவ்விதம் எதிர்க் கட்சிகள் இணைந்து ஒற்றுமையாகச் செயல்பட்டால் வருகிற தேர்தலில் மக்கள் நிச்சயம் அவர்களுக்குப் பெருவாரியான ஆதரவு அளிப்பார்கள். இந்திரா அரசிடம் மக்களுக்கு இன்று அத்தனை ஏமாற்றம் இருக்கிறது.

எதிர்க் கட்சிகளின் ஒருமைப்பாட்டுக்கு ஜெயப்பிரகாசர் ஓர் இயக்கம் நடத்தட்டும். இது அவரால் சாதிக்க முடியாதது அல்ல. இதன் விளைவாகச் சரித்திரம் அவரை ஜனநாயகச் சிற்பி எனப் போற்றும்.


என்னுங்க புலியை வளக்க-
றீங்களே?
இந்த ஆட்டுக்
குட்டியைக்
காப்பாத்தத்தான்!
கம்யூனிஸ்ட் கட்சி
ஜனநாயகம்
இதோ, உன்னை
உதைத்துத் தள்ளுகிறேன் பார்!
தேர்தலில்
பணபலம்
அரசு
மீசை ஒட்டமாட்டேங்குதா?
மீசை
அரசு
கடத்தல்
பேர்வழி

மல்லிகை மணமும் மெய்யானதே!

தமிழ்ப் படத்துக்குத் தங்கப் பதக்கம் கிடைக்காதது பற்றித் திரை உலகப் பிரமுகர்கள் சிலர் இந்த இதழில் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். தங்கப் பதக்கத்துக்குத் தகுதியுள்ள தமிழ்த் திரைப் படம் அண்மைக் காலத்தில் வெளியாகியிருக்கிறதா இல்லையா என்ற பிரச்னை ஒருபுறமிருக்கட்டும். இது வரை தங்கப் பதக்கம் பெற்றுள்ள படங்களைப் பற்றிப் பரவலாகக் கூறப்படும் ஒரு குறையை நாம் அலட்சியம் செய்வதற்கில்லை. அந்தக் குற்றச்சாட்டு இதுதான்: 'யதார்த்த நோக்கு என்ற பெயரில் ஏழ்மையையும் கற்பு இழப்பதையும் மையமாகக் கொண்டு எடுக்கப்படும் திரைப் படங்களுக்கே தங்கப் பதக்கம் அளித்துக் கௌரவிக்கிறார்கள்.'

'ரியலிஸம்', 'ஐடியலிஸம்', 'நியூவேவ்' முதலியனவெல்லாம் இன்று மிகவும் தப்பர்த்தம் ஏற்பட்டுள்ள வார்த்தைகளாகிவிட்டன.

உதாரணமாகக் காந்திஜியின் வாழ்க்கையை எடுத்துக் கொண்டால் அது லட்சிய வாழ்க்கைதான். ஆனால் அந்த லட்சிய வாழ்வை அவர் நம் கண்ணுக்கு மெய்யாக வாழ்ந்து காட்டினதால் அது ரியலிஸமும் கூடத்தான். பல சந்தர்ப்பங்களில் அவரது லட்சிய அறைகூவலை மக்கள் மதிக்காமல் தாறுமாறாக நடந்து கொண்டு அவரை வேதனைக்கு உள்ளாக்கினார்களே, அங்கே யதார்த்த நோக்கினை அழுத்தமாகக் காண்கிறோம்.

நாலாபுறமும் லஞ்சம் வாங்கிக் கொண்டிருப்பவர்களால் சூழப்பட்டிருந்தாலும் பிடிவாதமாக ஆசைக்கு அடிமையாகாமல் இருக்கும் அரசாங்க உத்தியோகஸ்தர்கள் சிலர் இன்றைக்கும் இருக்கத்தான் செய்கிறார்கள். அந்தச் சிலரின் வாழ்க்கையும் மெய்யானதுதான். 'ரியல்' தான்.

எனவே முழுக்க முழுக்க உயர்ந்த கருத்துக்களைக் கொண்ட நூல் அல்லது திரைப் படம் லட்சியநோக்கு உடையது என்றும் மட்டரகமான சம்பவங்கள் சில புகுந்து கொண்டிருந்தால் அது யதார்த்த நோக்கென்றும் முத்திரை குத்தி விடுவது முறையாகாது.

திரைப் படங்களைப் பொறுத்தவரை முக்கியமாகக் கவனத்தில் கொள்ள வேண்டியது அது ரியலிஸமா, ஐடியலிஸமா; கமர்ஷியலா, நான்கமர்ஷியலா என்பன அல்ல. 'இப்படம் மக்களுக்கு நலன் பயக்குமா?' என்பதுதான்.

ஏனெனில் திரைப் படம் மிகச் சிறந்த பொழுதுபோக்குச் சாதனமாக மட்டுமின்றி மக்களிடம் மிகுந்த செல்வாக்குடைய, அவர்களின் மனங்களைப் பக்குவப்படுத்தும் ஆற்றலுடைய சாதனமாக விளங்குகிறது. அந்தச் சாதனத்தைத் திறம்படப் பயன்படுத்தினால் நாட்டில் அற்புதங்களைச் சாதிக்கலாம்.

இந்த நோக்கில் பார்க்கும்போது ஏழ்மையைப் படம் பிடித்துக் காட்டும் படத்துக்கும் கற்பு இழப்பதைப் பிரதான காட்சியாகக் கொண்டுள்ள படத்துக்கும் அரசாங்கமே தங்கப் பதக்கம் வழங்கிக் கௌரவிப்பதை நாம் பாராட்ட முடியவில்லை. அவை எவ்வளவுதான் திறமையான உத்திகளையும் நடிப்பாற்றலையும் கொண்டு தயாரான படங்களானாலும், நாட்டுக்கோ அல்லது மக்களுக்கோ அவற்றால் என்ன பயன்? சொல்லப் போனால் தீமைதான்.

நாடு இன்றுள்ள நிலையில் ஏழ்மையுடன் ஒருவன் போராடி வெற்றி காண்பதையல்லவா திரைப்படமாக்க வேண்டும்! அத்தகைய படத்துக்கல்லவா தங்கப் பதக்கம் தர வேண்டும்?

'உடலால் உழைப்பேனே தவிர, உடலை விற்க மாட்டேன்' என்று பிடிவாதத்துடன் வாழ்க்கைப் போராட்டம் நடத்தும் பெண்ணின் கதையை நமது படாதிபதிகள் படம் எடுக்கட்டும். இன்னும் விஞ்ஞானிகளைப் பற்றியும், விவசாயிகளைப் பற்றியும் யதார்த்த நிலையை மறவாத லட்சியப் பிடிப்புள்ள கதைகளை எழுதிப் படம் தயாரிக்கட்டும். அவை தங்கப் பதக்கம் பெறுமளவில் சிறக்க விளங்கட்டும். மக்களுக்கு வாழ்க்கையில் பிடிப்பும் தைரியமும் நம்பிக்கையும் ஏற்படட்டும்.

யதார்த்த நிலை என்பது மல்லிகை மணத்திலும் உண்டு. சாக்கடை நாற்றத்தில் மட்டும்தான் இருப்பதாக எண்ண வேண்டாம்!

ராஜாஜி சிந்தனை

சர்வாதிகார ஆட்சியாகக் கூடாது!

1947ல் நாம் விடுதலை பெற்றோம். ஆனால் 1954 முதல் நமது சுதந்திரங்களை ஒன்றன் பின் ஒன்றாக இழந்து வருகிறோம். நமது அரசியல் சாசனத்தில் அழிக்க முடியாத உரிமைகள் என்று நிர்ணயிக்கப்பட்டிருந்த சுதந்திரங்களை இழந்து வருகிறோம். ஒழுக்கமான வாழ்க்கைக்கு அரசாங்கத்தின் கட்டுப்பாடு அவசியம்தான். ஆனால் அது அளவோடு நிற்க வேண்டும். சர்வாதிகாரமாக மாறக் கூடாது. பிரஜையின் திறமைகளும் சாமர்த்தியங்களும் நன்றாகச் செயல்படத் தாராளமாக இடமிருக்க வேண்டும். அப்போதுதான் அரசின் கட்டுப்பாடு கொடுங்கோன்மையாயிராமல் சமூகத்தின் நலனுக்கான கருவியாக விளங்கும். ஆனால் கட்டுப்பாடே மிகுதியாகிச் சுதந்திரம் அபூர்வமான விஷயமாகிவிட்டால் நிலைமை தலைகீழாக மாறுகிறது. கொடுங்கோன்மை பொது நிலவரமாகிச் சுதந்திரம் அரசின் தயவை எதிர்பார்த்துக் காத்திருக்கும் காரியமாகி விடுகிறது. இந்நிலை அந்நியரிடம் அடிமைப்பட்டுக் கிடப்பது போன்று அதே அளவுக்கு மோசமானதுதான்.

சுயராஜ்யா, ஜூலை 27, .1963

களை கட்டியது!



மேற்கிந்தியத் தீவு கோஷ்டியினர் மூன்று மாத காலம் இந்திய மண்ணில் கிரிக்கெட் ஆட பம்பாயில் வந்து இறங்கி விட்டார்கள்! கிரிக்கெட் சீஸன் களை கட்டிவிட்டது! கன்ஹாய்க்குப் பிறகு மேற்கிந்தியத் தீவு கோஷ்டியின் காப்டன் பதவி வகிக்கும் லாய்ட் நெடிதுயர்ந்த மனிதர்; பல சதங்கள் எடுத்துக் குவித்தவர்; ஃபீல்டிங்கிலும் சூரர்! பல கௌரவங்களைப் பெற்றவர். 1966ம் வருஷம் இந்தியாவுக்கு வந்து ஆடிப் பழக்கப்பட்டவர்.

அவரது குழு பெரும்பாலும் இளைஞர்கள் அடங்கியது. காளிசரண், ரோவி, கிரீனிட்ஜ், ஃப்ரெடரிக்ஸ் போன்ற நல்ல பாட்ஸ்மன்கள் இருக்கிறார்கள். சுழல் பந்து வீச்சுக்கு கிப்ஸும், வேகமான பந்து வீச்சுக்கு ராபர்ட்ஸ் ஹோல்டர், பாய்ஸ் ஆகியோரும் உள்ளனர். இவர்கள் இந்தியக் கோஷ்டிக்குத் 'தலைவலி' தரவிருக்கிறார்கள்.

''பௌன்ஸர்' போடுவார்களா?'' என்று கேட்டதற்கு காப்டன் லாயிட், ''சந்தர்ப்பம் நேர்ந்தால் நிச்சயம் பௌன்ஸர் பந்து வீசத்தான் செய்வார்கள்'' என்று கூறிவிட்டார். அப்புறம் போனால் போகட்டும் என்பதுபோல் ''ஆனால் ஒன்று, மனிதர்களை அடித்து வீழ்த்தவோ, காயப்படுத்தவோ நாங்கள் இந்தியா வரவில்லை'' என்றும் சேர்த்துக் கொண்டிருக்கிறார்!

அதாவது, மைதானத்துக்கு உள்ளே போராட்டம் ஆரம்பமாவதற்கு முன்பாகவே மைதானத்துக்கு வெளியே மனத்தத்துவ ரீதியில் போராட்டத்தை லாயிட் ஆரம்பித்துவைத்து விட்டார் எனலாம்.



இந்தச் சந்தர்ப்பத்தில் இந்தியக் கோஷ்டியின் காப்டனாக நல்ல அனுபவமுள்ள பட்டோடி நவாப் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டது மனத்துக்கு ஆறுதல் தருகிறது. இந்திய ஆட்டக் குழுவினர் காப்டனுக்கு முழு ஒத்துழைப்பும் தந்து பாடுபடட்டும்.

இந்த இதழின் இன்னொரு பக்கத்தில் 'மிடில் ஸ்டம்ப்' எழுதியுள்ளது போல் விளையாட்டுத்தான் முக்கியம்; வெற்றியல்ல. வெற்றி பெற வேண்டுமே என்ற கவலை மனத்தை ஆட்கொள்ள விடக் கூடாதுதான். ஆனால் கவலையை விட்டொழிக்கிற சமயத்தில், வெற்றி பெறும் ஆர்வத்தையும் விட்டொழித்துவிடக் கூடாது அல்லவா?

மேற்கிந்தியத் தீவுக் கோஷ்டியினரை வரவேற்று மகிழ்வதுடன் நல்ல கிரிக்கெட், விறுவிறுப்பான கிரிக்கெட் அமைய இரு கோஷ்டியினரும் பாடுபடுவார்கள் என்று எதிர்பார்ப்போம்!

'நாரதர்' சீனிவாச ராவ்

இளம் கலைஞர்களை ஊக்கப்படுத்துவதிலும் பெரிய கலைஞர்களைப் பாராட்டி மேலும் சோபிக்கச் செய்வதிலும் நாரதர் சீனிவாச ராவ் அருமையான பணி புரிந்து வந்தார். நல்ல ரசிகர்களையும் உருவாக்கினார். அவர் பத்திரிகை ஆசிரியர், நாடக ஆசிரியர், நடிகர், புகைப்பட நிபுணர். ''ஆனந்த விகடன்'' நிறுவனத்தில் ''நாரதர்'' பத்திரிகை பிரசுரிக்கப்பட்டு வந்தபொழுது அதன் ஆசிரியராயிருந்தவர் திரு சீனிவாச ராவ். பிறகு தாமே அந்தப் பத்திரிகையைச் சொந்தப் பொறுப்பில் நடத்தி வந்தார். ''ராவுஜீ'' என்ற புனைபெயரில் பல புகைப்படங்களைப் பத்திரிகையில் பிரசுரித்திருக்கிறார். பொது வாழ்விலும், கலைத் துறையிலும் தமிழகத்தில் அவருக்குத் தெரியாதவர்கள் யாருமே இருக்க மாட்டார்கள். முகமலர்ச்சியுடனும், உற்சாகமாகவும் அனைவருடனும் பேசிப் பழகுவார். தாமே ஒரு நாடகக் குழுவை நிறுவிச் சிறப்பாக நடத்தி வந்ததோடு அதில் தாமே முக்கிய பாகங்களில் நடித்தும் வந்தார். தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம் ''கலைமாமணி'' என்ற விருதை வழங்கிக் கௌரவித்தது.



தமது அறுபத்தேழாவது வயதில் மறைந்து விட்ட நாரதர் சீனிவாச ராவ் இறுதி மூச்சு உள்ளவரையில் சோம்பல் என்பதையே அறியாதவராய் விளங்கினார். அவரது மறைவில் கலைத் துறை ஓர் அரிய நண்பரை இழந்தது; தமிழகமோ துணிச்சலும், உற்சாகமும் கொண்ட பத்திரிகையாளரை இழந்து விட்டது.

ஆசாரியாள் மகாலக்ஷ்மியைத் துதிக்கிறபோது ஆகாசத்திலிருந்து அசரீரி கேட்டது. ''இந்த ஏழைப்' பிராம்மண தம்பதிகள் எத்தனையோ ஜன்மங்களாகப் பாவம் செய்தவர்கள். அதற்குத் தண்டனைதான் தாரித்திரியம். பாபம் தொலைகிற காலம் வருகிற வரையில் இவர்களுக்குச் சம்பத்தைத் தருவதற்கில்லை'' என்றது அசரீரி.

உடனே ஆசார்யாள், ''இவர்கள் ஜன்மாந்தரங்களாகச் செய்த பாபம் இப்போது இருப்பதைவிடக்கூட அதிகமாக வேண்டுமானாலும் இருக்கட்டும்; இத்தனை அன்போடு அகத்தில் இருந்த ஒரே பக்ஷ்யமான நெல்லிக்கனியையும் எனக்கு இவள் போட்டிருக்கிறாளே, இந்த அன்பும் தியாகமும் எத்தனை புண்ணியமானவை! சாப்பாட்டுக்கே இல்லாத இவள் எனக்குப் பிக்ஷை போட்ட பலன் எத்தனை பாபத்தையும் சாப்பிட்டு விடுமே!'' என்றார். ''இவளுக்கு இருக்கிற மாதிரி உனக்கும் அன்பு நிறைய இருக்கிறதே. அதனால், ரொம்பக் கண்டிப்போடு நியாயம் மட்டும் வழங்காமல், அன்பைக் காட்டி அநுக்கிரகம் பண்ணம்மா'' என்று லக்ஷ்மியைப் பிரார்த்தித்தார்.

லக்ஷ்மியிடம் அவர் ஏழைப் பிராமண ஸ்திரீக்காக முறையிட்டதற்குக் கனகதாரா ஸ்தோத்திரத்திலேயே உட்சான்று (Internal evidence) இருக்கிறது. ''தத்யாத் தயாநுபவனோ'' என்கிற சுலோகத்தில் இது வெளியாகிறது. ''சாதக பட்சி மழைத் துளிக்கு ஏங்குகிற மாதிரி இவர்கள் சம்பத்துக்காக ஏங்குகிறார்கள். இவர்களுடைய பூர்வ பாபம் மழையே இல்லாத கோடை மாதிரி இவர்களைத் தகிக்கிறது என்பது வாஸ்தவம்தான். ஆனாலும் உன்னிடம் தயை என்கிற காற்று இருக்கிறதல்லவா? அந்தக் காற்றினால் உன் கடாக்ஷ மேகத்தைத் தள்ளிக் கொண்டு வந்து இவர்களுக்குச் செல்வ மழையைப் பொழியம்மா!'' என்கிறார் இந்த சுலோகத்தில்.

இப்படி அவர் ஸ்தோத்திரத்தைப் பாடி முடித்ததும் மகாலக்ஷ்மிக்கு மனம் குளிர்ந்தது. அந்த ஏழைப் பெண் அன்போடு போட்ட ஓர் அழுகல் நெல்லிப் பழத்துக்குப் பிரதியாக அந்த வீட்டு முற்றத்தில் தங்க நெல்லிக் கனிகளை மழையாகப் பொழிந்துவிட்டாள்!

இதனால்தான் அந்த ஸ்தோத்திரத்துக்கு ''கனகதாரா ஸ்தவம்'' என்கிற பேரே உண்டாயிற்று. ''கனகதாரா'' என்றால் பொன் மழை என்று அர்த்தம். ஸ்தவம் என்றாலும் ஸ்துதி என்றாலும் ஒன்றேதான்.

ஆசாரியாள் முதல் முதலாகச் செய்த ஸ்துதி இதுதான் என்பது இதற்கு ஒரு விசேஷமான பெருமை. ஆசாரியாளுடைய அன்பு, பிராம்மண பத்தினியின் அன்பு, மகாலக்ஷ்மியின் அன்பு எல்லாம் இதில் சேர்ந்திருக்கின்றன. அதனால் இதைப் பாராயணம் செய்கிறவர்களுக்கும் துர்ப்பிக்ஷங்கள் நீங்கி, தர்ம நியாயமாகக் காலட்சேபம் நடத்துவதற்குக் குறைவில்லாதபடி சம்பத்து கிடைக்கும்.

ஆசாரியாள் ''எல்லாம் ஒன்றே'' என்று சொன்னவர். முடிவில் ஜீவனுக்கும் ஈசுவரனுக்குமே பேதம் இல்லை என்றவர். அதனால் அவருக்குத் தெய்வங்களிடையே பேத புத்தியே கிடையாது. எல்லாத் தெய்வங்களும் ஒரே பராசக்தியின் ரூபங்கள்தாம் என்று அவர் எப்போதும் வலியுறுத்துவார். அம்மாதிரி ஒரு சுலோகம் இந்த ஸ்தோத்திரத்திலும் இருக்கிறது. ('கீர்தேவதேதி' என்று ஆரம்பிக்கும்.) ''கருடக் கொடியோனை மகாவிஷ்ணுவின் பத்தினி என்று சொல்லப்படுகிற நீயேதான் வாக் தேவியான சரஸ்வதியாகவும், தாவர வளத்தைத் தருகிற சாகம்பரியாகவும், சந்திர மௌளீசுவரனின் பத்தினியான பார்வதியாகவும் இருக்கிறாய். மூன்று லோகங்களுக்கும் குருவாக ஒரு பரமாத்மா இருக்கிறது. அதன் சக்தியே நீ. இருவருமாகச் சேர்ந்து உலக சிருஷ்டி, பரிபாலனம், சம்ஹாரம் என்கிற விளையாட்டை விளையாடிக் கொண்டிருக்கிறீர்கள்'' என்கிறார்.

பராசக்தியான காமாக்ஷி இதே மாதிரியாகப் பொன் மழை பொழிந்து மகாலக்ஷ்மிக்கும் தனக்கும் அபேதத்தைக் காட்டியிருக்கிறாள்.



ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய சுவாமிகள்



சந்திரசேகர்

ஞல் ஒவ்வொர் ஆட்டக்காரரும் உற்சாக உணர்வோடு வந்து திறமையைக் காட்டுவது என்பது போய், பெரிய கவலைச் சுமையுடன் வந்து ஆடுவது என்ருகிவிட்டது. ரஸிகர்கள், கிரிக்கெட் ஒரு விளையாட்டு என்பதை மறந்து, கவனு இமைக்க ஆட்டக்காரரைத் தலைதூக்க விடாமல் அடிப்பது இன்றைய கோளாறுக ளுக்கு ஓர் அடிப்படைக் காரணமாகும்!

ஆட்டத்தில் ஜயிக்க வேண்டுமே என்ற கவலையை ஆட்டக்காரரின் தலையில் சுமத்தி விட்டால் ஆட்டமும் குட்டிச்சுவராகும்; தோல்வியும் கிடைக்கும்; ஆட்டக்காரரின் முன் னேற்றமும் தடைப்படும்!

ஓர் உதாரணம் சொல்கிறேன். 'ஹிந்து' பத்திரிகையில் விளையாட்டுப் பகுதி ஆசிரியர் காலஞ்சென்ற திரு எஸ். கே. குருநாதன் உணர்ச்சியோடு சொன்ன சம்பவம் ஞாபகத் துக்கு வருகிறது: ''பயங்கரமான ஹால், கில்கிரெஸ்ட் பந்து வீச்சை எப்படிச் சமாளிக்


விளையாட்டே முக்கியம்; வெற்றியல்ல!

'மிடில் ஸ்டம்ப்'

நம் கவலைகளை, வீட்டு விவகாரங்களை மறந்துவிட்டு இருப்பதற்காகக் கிரிக்கெட் ஆடத் தொடங்கினும்! விளையாட்டு என்ருலே பொழுது போக்குக்காகத்தான்! ஆனல் கிரிக் கெட்டின் இன்றைய நிலை என்ன? ஆட்டத்தில் 'டென்ஷன்' புகுந்துவிட்டது. தோற்றுப் போனல் என்ன ஆவது என்ற கவலை, ஆட்டத் தில் உள்ள மகிழ்ச்சியைக் குட்டிச்சுவராக்கி விட்டது! பொழுதுபோக்குக்காக ஆடி, பிறரையும் குதூகலிக்க வைத்த ஆட்டக் காரர்கள் 'சீரியஸாக' ஆடத் தொடங்கிய தால் பல தவறுகள் முளைக்கத் தொடங்கின! நன்ருக ஆடி 49 ரன்கள் எடுத்திருப்பார் ஒரு டெஸ்ட் ஆட்டக்காரர்! கடைசியில் ஒரு 'ரன்' எடுப்பதில் அவர் செய்த தவற்றை ரஸி கர்கள் பூதாகாரமாக எடுத்துக் காட்டி, அவ ரைத் தலைகுனிய வைத்து விடுகிருர்கள்! இத கப் போகிறோம் என்று தவிக்கும் நமது இந்திய ஆட்டக்காரர்கள் 'டிரஸ்ஸிங்' அறையில் கண் ணீர் விடாக் குறையாக அமர்ந்திருக்கும் நிலை யைப் பார்த்திருக்கிறேன். வெளியிலோ நம் ரஸிகர்கள் அவர்களது பந்து வீச்சில் நம் ஆட்டக்காரர்கள் தவிப்பதைப் பரிகசிக்கின் றனர். இதுவா நல்ல கிரிக்கெட்? 'டென்ஷன்' உள்ள ஆட்டம் சந்தோஷமான ஆட்டம் ஆகுமா?''

கிரிக்கெட் ஒரு விளையாட்டுத்தான்! அதில் நேர்மை, கண்ணியம், கட்டுப்பாடுதான் முக்கியம்; வெற்றியல்ல என்பது ரஞ்சி டெஸ்ட் கிரிக்கெட்களில் மறைந்துபோய், வெற்றிக் காகப் பல நேர்மைக் குறைவான செயல்கள் தலைதூக்க ஆரம்பித்தால் நல்ல கிரிக்கெட் டின் புகழ் மங்கத்தானே செய்யும்! 'அவுட்' தரப்பட்டவர் தோல்வி மனப்பான்மையினுல் விக்கெட்டை விட்டு விலகாதிருப்பதும், பல தந்திர வழிகளில் 'அவுட்'டாக்க நினைப்பதும் வெற்றிக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்ப திஞல் விளையும் தீமைகள்! விளையாட்டுப் பண்போடு (Sportsmanship) ஆடுகையில் கிட்டும் இன்பம் தந்திரமான வழிகளில் அடை யும் வெற்றியில் கிட்டாது! டெஸ்ட் ஆட்டக் காரர்களின் கூச்சல், நேர்மையற்ற 'அப்பீல்கள்' இவைதாம் நல்ல கிரிக்கெட்டோ என்று டெஸ்ட் பார்க்க வரும் சிறுவர்கள் எண்ணி, அவர்களும் கெட்டுப் போகும் சூழ்நிலை ஏற்பட்டு விடும்!

நம் இந்தியாவில் கிரிக்கெட் வளர்க்கும் நிர்வாகக் கழகங்கள் பல உள்ளன. பள்ளிக்



பாப் இசை உஷா

பாப் இசை ரொம்பப் பிரபலமாக முக் கிய காரணமாய் விளங்கும் ஸ்ரீமதி உஷா பொழுதுபோக்குச் சிறப்பிதழின் மேலட் டையை அலங்கரிக்கிருர்.

8-11-47-ல் பிறந்த இவருக்கு ஹிந்தி, மராட்டி, குஜராத்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகள் தெரியும். பம்பாய் ஜே. ஜே. ஸ்கூல் ஆப் ஆர்ட்ஸ் கல்லூரியில் பயின்ற இவர் சினிமாவிலும் பாடியிருக்கிருர்!

வண்ணப் படம்: திருச்சி மாடர்ன்

கூட நிலையிலிருந்து தொடங்கிச் சர்வ கலா சாலை, ரஞ்சி, திலீப், டெஸ்ட் என்று படிப் படியாகக் கிரிக்கெட் ஆட்டக்காரர்களின் வளர்ச்சிக்கு உதவி வருகின்றன. அப்படி இருந்தும் நம் இந்திய கிரிக்கெட் வளர்ச்சியில் மந்தம் ஏற்படக் காரணம் என்ன? இதில் 'பிட்ச்' பெரும் பங்கு வகிக்கிறது.

முப்பது, நாற்பது வருஷங்களாகவே நமது முக்கியமான கிரிக்கெட் கேந்திரங்களில் உள்ள 'பிட்ச்'கள் மெதுவாகவும் உயிரற்றவையாக வும் இருக்கின்றன! பௌலர்களுக்கு உதவாத 'பிட்ச்'களாகவே பெரும்பாலும் அமைந்திருக் கின்றன! மெர்ச்செண்டுகளும், ஹஸாரேக்களும் பிரமாதமாக இருநூறும், முந்நூறும் ரன்கள் எடுப்பதைக் கண்டு களித்ததில் இந்த உயிரில் லாத 'பிட்ச்'களில் பௌலர்கள் படும் அவஸ் தையை மறந்து விட்டோம்! இதனால் முக்கிய மாக 'ஃபாஸ்ட் பௌலர்' பரம்பரையே அற் றுப் போய்விட்டது! பின் நோக்கி யோசித்துப் பார்த்தால் 1930–35ம் ஆண்டுகளில் நிஸாரே உண்மையான ஃபாஸ்ட் பௌலர், அதற்குப் பின் ஃபாஸ்ட் பௌலர் யாரும் தோன்றவில்லை!

இந்தச் சூழ்நிலையில் 'ஸ்பின்'தான் நமக்குக் கதி என்றாகி விட்டது! ஸ்பின் பௌலிங்கில் உலகத் திறமை படைத்த பௌலர்கள் தோன்றியிருக்கிறார்கள். இது மகிழ்ச்சியான வளர்ச்சி என்றாலும், ஃபாஸ்ட் பௌலர் இல் லாத குறை பெருங் குறை. ஏனென்றால் நம் பேட்ஸ்மன்களுக்கு உண்மையான ஃபாஸ்ட் பௌலரை எதிர்த்து ஆடும் பழக்கமும் திறமை யும் இல்லாமல் போய்விட்டது! இது நமது இங்கிலாந்து தோல்வியில் வெட்டவெளிச்ச மாயிற்று! இது தவிர உண்மையான 'ஃபாஸ்ட் பிட்ச்' கிரிக்கெட் ஆட்டத்துக்கு — முக்கிய மாக பாட்ஸ்மன் வளர்ச்சிக்கு — மிகவும் அவ சியம். இப்பொழுதுள்ள 'ஸ்லோ பிட்ச்'சில் ஆட்டத் திறமை தப்பு வழியில்தான் போகும்! (wrong technique) சரியான திசையில் செல் லாது! உண்மையான 'ஃபாஸ்ட் பிட்ச்'களில் பழகியிருந்தால் ஹால் இல்லை, கில்கிறைஸ்ட் இல்லை, சமீபத்திய ஆண்டி ராபர்ட்ஸ் இல்லை, யாரையும் சமாளித்து பௌலிங்கைத் தவிடு பொடியாக்கலாம்!

நல்ல கிரிக்கெட் வளர்ச்சிக்கு மற்றோர் அடிப்படைத் தேவை திறமையான 'அம்பய ரிங்'. மோசமான 'அம்பயரிங்' முன் னுக்கு வரக்கூடிய ஆட்டக்காரர்களையும் கெடுத்து விடும். நம் நாட்டில் உள்ள அம்ப யர்கள் தம் சக்திக்கு உகந்த முறையில் நன்றாகத் தான் செயலாற்றி வருகிறார்கள்! ஆனால், அவர்கள் சக்தியிலும் ஒரு குறை உண்டு. அம் பயர்களில் பெரும்பான்மையோர் நல்ல கிரிக் கெட் — அதாவது ரஞ்சி கோப்பைப் பந்தயம் அளவுக்காவது — ஆடியவர்கள் இல்லை! இதனால் அம்பயர்களுக்கு நேரடியான அனுபவ அறிவு குறைவுதான்! இங்கிலாந்தில் முதிர்ந்த அனு பவம் பெற்ற ஆட்டக்காரர்களே அம்பயர் களாக வருகிறார்கள். இதனால்தான் உலகி லேயே இங்கிலாந்து அம்பயர்கள் சிறந்தவர் களாகக் கருதப்படுகிறார்கள்.

நம் நாட்டிலும் நமது முதல்தரக் கிரிக்கெட் காரர்கள் (ரஞ்சி கோப்பைப் பந்தயமும், டெஸ்டும் ஆடியவர்கள்) கௌரவக் குறைச்சல் என்று எண்ணாமல் 'அம்பயரிங்' பண்ண முன் வர வேண்டும். அம்பயரிங் பரீட்சையில் தேற வேண்டும். நம் கிரிக்கெட் போர்டும் அவர் களைக் கவர்ந்திழுக்கச் சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும்!

இந்த அடிப்படைக் குறைகளினால்தான் நமது கிரிக்கெட் வளர்ச்சி பாதிக்கப்படுகிறது!

சிறுவர்கள் விஷயத்தில் கவனத்தில் கொள்ள வேண்டிய அம்சம்: அவர்களுடைய திறமை, கட்டுப்பாடு இல்லாது வளர இடம் கொடுத்தோமானால் அவர்களுடைய முழு சாமர்த்தியமும் சுடர் விடும். ஆனால் நாமோ பள்ளிப் பிள்ளைகளுக்குக்கூட டெஸ்ட் மாட்ச் போட்டு 'டென்ஷனை' வளர்த்து விடுகிறோம்! சிறுவர்கள் கிரிக்கெட்டை விளையாட்டாகவே நினைக்கட்டும். அதையும் ஒரு பரீட்சையாக்க வேண்டாம்!

கிரிக்கெட் ஒரு நல்ல தேசப்பயிற்சி; சர்வதேச நேசப்பான்மை வளர்க்கச் சிறந்த சாதனம் என்பது போக, நல்ல காரியங்களுக்குப் பணம் திரட்டித் தரவும் அந்த ஆட்டம் பேருதவி புரிகிறது. அண்மையில் புதுதில்லியில் சினிமா நட்சத்திரங்கள் பிரதமர் முன்னிலையில் கிரிக்கெட் ஆடினார்கள். பிரதமரின் பெயரால் உருவாகியுள்ள கஷ்ட நிவாரண நிதிக்குக் கணிசமான தொகை சேர்ந்தது.






ரூபி டஸ்ட் டீயில் மட்டுமே காணும் மூன்று சிறப்பம்சங்கள்
1. கனத்தில் கிட்டிடும் பானம்
2. தருவதும் செறிந்த மணம்
3. பெருவதோ கோப்பைகள் அதிகம்
RUBY DUST
கெட்டியான டிகாக்ஷன் மட்டுமல்ல; சிக்கனத்தையும் சிறப்பம்சமாய்க் கொண்ட ஒரே டீ-லிப்டன் ரூபிடஸ்ட். முழுமையான தேநீரின் மறு பெயர்தான் லிப்டன் ரூபி டஸ்ட்.
லிப்டன் ரூபி டஸ்ட்
ஒவ்வொரு பாக்கெட்டுக்கும் செறிவு மிக்க அதிகக்கோப்பைகள்
LRDC-10 TAM

விருந்துக்கு முன் விளையாட்டு!

விருந்து ஏழரை மணிக்கு என்றால் நண்பர்களை மாலை ஐந்தரை மணிக்கே வந்து விடச் சொல்லுங்கள். சற்று நேரம் விளையாடிப் பொழுது போக்கட்டும். அப்போதுதான் நன்றாகப் பசிக்கும். நீங்கள் தயாரித்த விருந்து வீணாகாமல் முழுதும் சுபஸ்கரமாகும். இதோ சில எளிய, வேடிக்கையான விளையாட்டுக்கள் :

● வந்துள்ள விருந்தினருக்குச் சிறு காகிதத் துண்டுகளில் பிரசித்தமான இரு சினிமாப் பாடல்களைக் குறித்துக் கொடுக்க வேண்டும். ஒவ்வொருவரிடமும் ஒன்றிரண்டு வரிகள்தாம் இருக்கும். இப்படி இரு பாடல்களைப் பல விருந்தினருக்கு எழுதித் தரவேண்டும். இரு பாடல்களும் முழுமை பெறும்படிக்கு வந்துள்ள விருந்தினர்கள் இரு கோஷ்டிகளாகச் சேர வேண்டும்! எந்தக் குழுவினர் முதலில் தங்கள் பாடல் முழுமையையும் சேர்க்கிறார்களோ, அவர்கள் அந்தப் பாட்டைப் பாட வேண்டும். அந்தக் குழுவுக்குச் சிறு பரிசும் வழங்கிவிடலாம்!

● ஒரு மேஜையின்மீது இருபது வெவ்வேறு பொருள்களை வைத்துத் துணியைப் போட்டு மூடி விடுங்கள். விருந்தினர்களை மேஜையைச் சுற்றி நிற்கச் செய்யுங்கள். கடிகாரப்படி சரியாக ஒரு நிமிஷம் துணியை எடுத்துவிட்டு வெவ்வேறு பொருள்களை எல்லோரும் பார்க்க அனுமதியுங்கள். திரும்ப மூடிவிடுங்கள். பிறகு ஒவ்வொரு விருந்தினரும் அந்த மேஜையின் மீது தான் கண்ட பொருள்களை ஞாபகப்படுத்திக்கொண்டு ஒரு தாளில் குறிக்க வேண்டும். பட்டியல் தயாரித்ததோடு அப்பொருள்களின் விசேஷ குணங்களையும் சுருக்கமாக விவரிப்பவர்களுக்கு அதிகப்படி மார்க் கொடுக்கலாம்! சரியானபடி குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு மார்க்; மேஜையில் இல்லாத பொருளைக் குறிப்பிட்டிருந்தால் இரண்டு மார்க் குறைத்து விட வேண்டும்! விருந்தினர்களின் ஞாபகசக்தி, கூர்மையான பார்வைக்கு இது ஒரு டெஸ்ட்!



● விருந்தினர்களை இரண்டு கோஷ்டிகளாகப் பிரித்து விடவும். இரண்டு பழைய கோட்டு, இரண்டு தொப்பிகளை மேஜைமீது வைக்கவும். கோட்டு இல்லாத போனால் கிழிந்த சட்டை- ஜுல்லாவாக இருந்தாலும் போதும். விசில் ஊதியதும் ஒவ்வொரு கோஷ்டியிலும் முதல்வர் கோட்டை அணிந்து பட்டன்களை யெல்லாம் போட்டு, தொப்பியை வைத்துக் கொள்ள வேண்டும். பிறகு அதைக் கழற்றித் தன் கோஷ்டியின் அடுத்த நபருக்குத் தரவேண்டும். இப்படிக் கோஷ்டியினர் அனை




பங்களாத் தோட்டங்களிலும் பூங்காக்களிலும் புல் வெட்டுவது என்பது ஒரு வேலையல்ல; பொழுது போக்காகவே மாறி விடுகிறது இந்த யந்திர வாகனத்தைப் பயன்படுத்தும் போது! பிரிட்டனில் தயாரான இந்த 'லான் மோவர்' இயந்திரம் 'ஹோவர் க்ராப்ட்' அடிப்படையில் இயங்குவது. ஒரு காற்று மெத்தை மீதாக யந்திரத்தின் புல்வெட்டும் யந்திரம் நகர்கிறது.

அப்பனை மிஞ்சிய மகன்!

விலாங்கு மீன் விழுங்கும் போட்டியில் உலக சாம்பியன் வெல்லி கூல்! அவர் சாதாரண விவசாயி! ஒன்றரை பவுண்டு எடையுள்ள குட்டி விலாங்கு மீன்களை ஒரு நிமிடத்துக்கும் குறைவான நேரத்தில் விழுங்கி விட்டார்! அவர் மகன் பில்லியும் இரண்டடி நீளமுள்ள மாமிச உணவை விழுங்கிச் சிறுவர் போட்டியில் முதன்மையுற்றான்!

வருமே அணிவதும் கழற்றுவதுமாக இருப்பார்கள். முதலில் எந்தக் கோஷ்டியினர் இந்தக் காரியத்தை முடித்து வைக்கிறார்களோ, அவர்களுக்குப் பாராட்டு விழா நடத்தலாம்! விளையாடிப் பாருங்கள், ரொம்ப சுவாரசியமாக இருக்கும். அதுவும் கொஞ்சம் கிழிந்த கோட்டாக இருந்தால் சிரிப்புத் தாங்காது!



● உயரக் குறைவான ஒரு பக்கெட்டைத் தோட்டத்தின் ஒரு மூலையில் வைக்க வேண்டும். ஒவ்வொரு விருந்தினரையும் டென்னிஸ் பந்தை அந்தப் பக்கெட்டில், போய் விழுமாறு குறி பார்த்துக் குறிப்பிட்ட தூரத்திலிருந்து எறியச் சொல்லுங்கள். அப்படி எறிற பந்து பக்கெட்டுக்குள்ளிருந்து எழும்பி வெளியே வந்துவிடக் கூடாது! இதில் கலந்து கொள்பவர்களின் கணுக்கால்களைக் கயிற்றினால் கட்டிவிட்டு, அவர்களைக் குதித்துக் குதித்துச் சென்று 'குறி' பார்த்து எறியச் சொன்னால் ஆட்டம் இன்னும் வேடிக்கையாயிருக்கும்!



● ஒரு மோட்டார் டயரை நடு மத்தியில் வைத்துவிட்டு விருந்தினர்களை வட்டமாகக் குழுமியிருக்கச் சொல்லுங்கள். ஒவ்வொருவரும் மற்றவரைத் தள்ளி மத்தியில் உள்ள டயரை மிதிக்கச் செய்ய வேண்டும். அப்படி டயரை மிதித்தவர் டயரைப் 'பஞ்சர்' செய்து விட்டார் என்று கருதி அவரை ஒதுக்கிவிடலாம். பலசாலிகள், தந்திரசாலிகள் டயரை மிதிக்காமல் குதித்துச் சமாளித்துவிடுவார்கள். யார் கடைசிவரை டயரைப் பஞ்சர் செய்யாமல் இருக்கிறார், பாருங்கள்! இந்தப் பலப் பரீட்சையில் ஆண் விருந்தினர்களே ஈடுபடுதல் நலம்! பெண்களுக்கு இந்தப் போட்டியைத் தனியே நடத்தலாம். 'உமன்ஸ் லிப்' பற்றிப் பேசும் பெண்களானால் ஆண்களோடு சரி நிகர் சமானமாகப் போட்டியிடட்டும், நமக்கு ஆட்சேபனை இல்லை!

● போட்டியில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் தங்கள் ஷூக்களை அல்லது செருப்புக்களைக் கழற்றித் தர வேண்டும். எல்லாவற்றையும் ஜோடி கலைத்து அம்பாரமாகத் தோட்டத்தின் மூலையில் குவித்துவிட வேண்டும்! மற்றொரு மூலையிலிருந்து இந்தப் போட்டியைத் தொடங்க வேண்டும். போட்டியாளர்கள் 'விசில்' ஊதியதும் ஓடிப் போய்த் தங்கள் ஷூக்களைச் சரியாகக் கண்டுபிடித்துக் காலில் அணிந்து கொண்டு முதலில் புறப்பட்ட இடத்துக்கே திரும்ப வந்து சேர வேண்டும்! அவசரத்தில் செருப்புக்களை மாற்றி அணிவதோடு ஒரே காலுக்கான ஷூக்களைக்கூட வெவ்வேறு காலில் அணிந்துகொண்டு போட்டியாளர் ஓடி வந்திருக்கலாம்! இந்தப் போட்டி மிகவும் தமாஷாகவும், வேடிக்கையாகவும் இருக்கும்!

பி எஸ் எம்



பொழுது போகாதவரின் பொழுதுபோக்கு

ஒருமுறை நேருஜி மிகவும் களைத்துப்போய்க் காணப்பட்டார். "நீங்கள் ஓய்வெடுத்துக்கொள்ள எங்கேயாவது போவதுண்டா?" என்று நேருஜியைக் கேட்டார் பிளாக்கெட்.

"அதெல்லாம் ஒன்றும் கிடையாது!" என்றார் நேருஜி.

"இனிமேல் வேலைசெய்ய முடியாது என்ற அளவுக்கு களைத்துப் போய்விட்டீர்களானால் என்ன செய்வீர்கள்?" என்று மீண்டும் கேட்டார் பிளாக்கெட்.

"அப்படிப்பட்ட நிலை ஏற்பட்டால் நான் பெரியதொரு பொதுக்கூட்டத்தில் பேசப் போய்விடுவேன்!" என்றார் நேருஜி.

(நோபல் பரிசுபெற்ற விஞ்ஞானி பிளாக்கெட் 1967ம் ஆண்டு நிகழ்த்திய நேரு நினைவுச் சொற்பொழிவிலிருந்து.)



CMLB.30.162 R TM

விற்பனை ஏஜெண்டுகள்: M/S. ஏ. ஜே. எஸ். படேல் அண்ட் கம்பெனி, 5, கிடங்குத் தெரு, சென்னை-1; 76, கிழக்கு மாரட் தெரு, மதுரை. அதிகாரம் பெற்ற சில்லறை விற்பனையாளர்கள்: M/S. வெங்கடேஷ் 243, 244, என். எஸ். ஸி. போஸ் ரோடு, சென்னை-1. M/S. ஜவ்வரீஸ், 26-பி, மேல கோபுரத் தெரு, மதுரை. M/S. ஆனந்த் டெக்ஸ்டைல்ஸ், பெரிய கடை வீதி, திருச்சி-8.

இருபத்தைந்தாம் அத்தியாயம்

வேஷதாரி

வலது கால் எலும்பு முறிந்து எழுந்திருக்க முடியாதவராய்த் தரையில் விழுந்து கிடந்த ஆயனரண்டையில் வந்து புலிகேசிச் சக்கரவர்த்தி உட்கார்ந்தார்.

''மகா சிற்பியே! மன்னிக்க வேண்டும். உம்முடைய அற்புதச் சிலை வடிவங்களைக் காப்பாற்றுவதற்காகத்தான் இவ்வளவு விரைந்து வந்தேன். நீர் மூர்ச்சை தெளியும் வரையில்கூடக் காத்திராமல் குதிரையின் மேல் உம்மை வைத்துக் கட்டிக் கொணர்ந்தேன். அப்படியும் உம்முடைய சிலைகள் சிலவற்றுக்கு ஆபத்து வந்துவிட்டது. மன்னியுங்கள். ஏதோ மீதமுள்ளவையாவது பிழைத்தனவே என்று சந்தோஷப்படுங்கள்!'' என்றார் புலிகேசி மன்னர்.

ஆயனர் அவருடைய முகத்தை ஆவலுடன் உற்றுப் பார்த்தார். அவருடைய உள்ளத்தில் ஏதோ ஒரு சந்தேகத்தின் நிழல் படர்ந்திருந்தது. இது என்ன விந்தை? வாதாபிச் சக்கரவர்த்தியா இவ்வளவு நன்றாகத் தமிழ் பேசுகிறார்? கொடுமைக்கும் குரூரத்துக்கும் பெயர் போன புலிகேசி மன்னரா தம் அருகில் உட்கார்ந்து இவ்வளவு சாவதானமாக வார்த்தையாடுகிறார்?

இப்படிப்பட்ட நல்ல சுபாவமுடைய மன்னர் சிற்பிகளின் காலையும் கையையும் வெட்டிப் போடும்படி கட்டளையிட்டிருப்பாரா? சிலைகளையும் சிற்பங்களையும் உடைத்துப் போட ஆக்ஞையிட்டிருப்பாரா? — அந்தக் கடுவம் பூனை முகத்துத் தளபதி அப்போது சொன்னது உண்மையா? அல்லது இனிய தமிழ் பாஷையில் இதோ சக்கரவர்த்தியே பேசுவது உண்மையா?

சட்டென்று ஆயனருக்குச் சிவகாமியின் நினைவு வந்தது! ஐயோ! அவள் என்ன ஆனாள்? மற்றதையெல்லாம் மறந்து, ''பிரபு! என் குமாரி சிவகாமியை உங்கள் வீரர்கள் பிடித்துக் கொண்டு போனார்கள். ஐயோ! அவளைக் காப்பாற்றுங்கள். சிவகாமியை மறந்துவிட்டு இந்தப் பாவி சிலைகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறேனே?'' என்று ஆயனர் அலறினார்.

அப்போது புலிகேசி, ''ஆயனரே! கடவுள் அருளால் உம் மகளுக்கு





ஆபத்து ஒன்றும் வராது. பத்திரமாக அவள் வாதாபி போய்ச் சேருவாள்!'' என்றார்.


''ஐயோ! என்ன சொன்னீர்கள்? சிவகாமி வாதாபிக்குப் போகிறாளா? அப்படியானால் இந்தப் பாவி இங்கே எதற்காக இருக்கிறேன்? என்னையும் கொண்டு போய் விடுங்கள்!''

''அப்படித்தான் முதலில் எண்ணினேன். ஆனால், உம்முடைய காலை ஒடித்துக் கொண்டு விட்டீரே? இந்த நிலைமையில் சிறிது நகர்ந்தாலும் உமது உயிருக்கு ஆபத்து வருமே!...''

''பிரபு! அப்படியானால், என் உயிரைப் பற்றித் தங்களுக்குக் கவலை இருந்தால், என் மகளை இங்கே அனுப்பிவையுங்கள்!''

''அது இயலாத காரியம்....''

''ஆ! இதென்ன தாங்களும் ஒரு சக்கரவர்த்தியா? சிற்பிகளின் கால் கையை வெட்டவும், சிலைகளை உடைக்கவும், கன்னிப் பெண்களைச் சிறைப் பிடிக்கவும் கட்டளை போடத்தான் உங்களால் முடியுமா?'' என்று ஆயனர் ஆவேசமான குரலில் கத்தினார்.



அப்போது புலிகேசி, ''ஆயனரே! உம்மிடம் ஒரு முக்கியமான விஷயம் சொல்ல வேண்டும். தயவுசெய்து உம்முடைய சகோதரியை உள்ளே போகச் சொல்லும்!'' என்று சாந்தமான குரலில் கூறி, பக்கத்தில் சொல்ல முடியாத மனக் குழப்பத்தையும் பீதியையும் முகத்தில் பிரதிபலித்துக் கொண்டு நின்ற சிவகாமியின் அத்தையைச் சுட்டிக் காட்டினார்.

''பிரபு! சொல்லுங்கள்! என் சகோதரியின் காது செவிடு. இடி இடித்தாலும் கேளாது!''

''இருந்தாலும், அவளைப் போகச் சொல்லும்!'' என்றார் புலிகேசி.

ஆயனர் சமிக்ஞை காட்ட, அவருடைய சகோதரி முன்னை விட அதிகக் குழப்பத்துடன் உட்சென்றாள்.

புலிகேசி, ''ஆயனரே! நான் சொல்வதை நன்றாய் மனத்தில் வாங்கிக் கொண்டு விடை சொல்லும்: உம்முடைய குமாரி இப்போது வாதாபியை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறாள். ஒரு வேளை நான் விரைந்து வேகமாகச் சென்றால், அவளைக் கண்டுபிடிக்கலாம். கண்டுபிடித்து இவ்விடம் அனுப்பி வைத்தாலும் வைக்கலாம். ஆனால், இன்னொரு விஷயத்தையும் யோசியும். இதோ உம்முடைய அற்புதத் தெய்விகச் சிலைகளை உடைத்ததுபோல, மாமல்லபுரத்து மகா சிற்பங்களையும் உடைத்தெறிவதற்காக ஒரு பெரும் படை போயிருக்கிறது. நான் போனால் அந்தப் படையைத் தடுக்கலாம். உம்முடைய மகளைக் கொண்டு வருவதற்காகப் போகட்டுமா? அல்லது மாமல்லபுரத்துச் சிற்பங்களைக் காப்பாற்றுவதற்காகப் போகட்டுமா?'' என்று கேட்டபோது, ஆயனரின் உள்ளத்தில் ஏற்கனவே நிழல்போல் தோன்றிய சந்தேகம் வலுப்பட்டது.

இவ்வளவு நன்றாகத் தமிழ் பாஷை பேசுகிறவர் புலிகேசிச் சக்கரவர்த்தி தானா? அவரை நன்றாக உற்றுப் பார்த்து, ''ஐயா! தாங்கள்...தாங்கள்'' என்று தயங்கினார்.

புலிகேசிச் சக்கரவர்த்தி உடனே தமது தலையிலிருந்த கிரீடத்தைக் கழற்றிக் கீழே வைத்தார்.

''ஆ! நாகநந்தி அடிகளா?'' என்ற வார்த்தைகள் ஆயனரின் வாயிலிருந்து வெளிவந்தன.

''ஆம், ஆயனரே! அந்த ஏழைப் பிக்ஷுவேதான்!''

''சுவாமி! இது என்ன கோலம்?''

''ஆம்! சிநேகிதர்களுக்கு உதவுவதற்காக இந்தக் கோலம் பூண்டேன். சமயத்தில் உதவியும் செய்ய முடிந்தது.''

''ஆ! இது என்ன அதிசயமான உருவ ஒற்றுமை? தத்ரூபமாக அப்படியே இருக்கிறதே! சுவாமி, தாங்கள் யார்? ஒரு வேளை.....''

''இல்லை, ஆயனரே! இல்லை! வாதாபி புலிகேசிச் சக்கரவர்த்தியும் நாகநந்தி பிக்ஷுவும் ஒருவரல்ல. ஏதோ ஓர் அற்புதமான சிருஷ்டி மர்மத்தினால் எங்கள் இருவருக்கும் கடவுள் அத்தகைய உருவ ஒற்றுமையை அளித்திருக்கிறார். அதைப் பயன்படுத்தி, பரத கண்டத்தின் பாக்கியத்தினால் பிறந்த மகாசிற்பியின் உயிரைக் காப்பாற்றினேன்.''

''ஆ! சுவாமி! என் உயிரைக் காப்பாற்றி என்ன பயன்? என் மகள்... என் மகள் சிவகாமி....!''

''ஆயனரே! நீரே சொல்லும், நான் என்ன செய்யட்டும் என்று. உம்முடைய மகளைத் தேடிக் கொண்டு போகட்டுமா? அல்லது மாமல்லபுரத்துக்குப் போகட்டுமா?''

ஆயனர் வேதனை ததும்பிய குரலில், ''சுவாமி! என் மகளைக் கடவுள் காப்பாற்றுவார். நீங்கள் மாமல்லபுரத்துக்குப் போங்கள்! உடனே புறப்பட்டுப் போங்கள்!'' என்று கதறினார். அவரைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே வேஷதாரி பிக்ஷு அந்தச் சிற்பக் கிருகத்திலிருந்து வெளியே சென்றார்.



உட்புறத்திலிருந்து சிவகாமியின் அத்தை தயங்கித் தயங்கி வந்து ஆயனர் அண்டை உட்கார்ந்து கொண்டாள். ''தம்பி! உனக்கு என்ன உடம்பு?'' என்று கேட்டாள். ஆயனர் அதற்கு மறுமொழி சொல்லவில்லை. அத்தை திடீரென்று பதற்றத்துடன், ''குழந்தை எங்கே? சிவகாமி எங்கே?'' என்று கேட்டாள்.

ஆயனர் நிமிர்ந்து உட்கார்ந்து, ''அந்தச் சிற்ப மண்டபமே அதிரும்படியான உரத்த குரலில், ''அக்கா! சிவகாமி எங்கே? என் மகள் சிவகாமி எங்கே?'' என்று கேட்டார். கேட்டுவிட்டுத் தலை குப்புறப் படுத்துக் கொண்டு விம்மி விம்மி அழுதார்.

ஆயனருடைய குரலைக் கேட்டுக் கொல்லைப்புறத்திலிருந்து ரதியும் சுகரும் உள்ளே ஓடி வந்தனர். ஆயனர் அழுவதைப் பார்த்து விட்டு அந்தப் பிராணிகள் சிலைகளைப் போல் அசையாமல் நின்றன.

இருபத்தாறும் அத்தியாயம்

கர்வபங்கம்

காஞ்சி அரண்மனையின் அந்தரங்க மந்திராலோசனை மண்டபத்தில் மகேந்திர பல்லவர் வீற்றிருந்தார். அவருக்கு எதிரே சேனாதிபதி கலிப்பகை, முதன் மந்திரி சாரங்கதேவர், முதல் அமைச்சர் ரணதீரர், ஒற்றர் தலைவன் சத்ருக்னன், குண்டோதரன் ஆகியவர்கள் நின்றார்கள்.


மகேந்திர பல்லவருடைய முகம் பிரகாசமாய்ப் புன்னகை மலர்ந்து விளங்கிற்று.

''குண்டோதரா! நீயே உன் கண்ணால் பார்த்தாயா? உண்மையாகவே மாமல்லபுரத்திலிருந்து சளுக்கர் படைகள் திரும்பிப் போயினவா? சிற்பங்களுக்கு ஒரு கேடும் நேரவில்லையே? நிச்சயந்தானே?'' என்று கேட்டார்.

''ஆம், பல்லவேந்திரா! எனக்கு அப்போது ஏற்பட்ட ஆச்சரியத்தை என்னவென்று சொல்வேன்? சளுக்க ராட்சதர்கள் இரண்டாயிரம் பேர் கைகளில் கடப்பாரைகளையும் இரும்பு உலக்கைகளையும் எடுத்துக் கொண்டு திடுதிடுவென்று ஓடி வந்தார்கள். ஐயோ! ஆயிரமாயிரம் சிற்பிகள் அரும்பாடு பட்டு வேலை செய்த ஜீவ வடிவங்கள் எல்லாம் ஒரு நொடியில் நாசமாகப் போகின்றனவே என்று என் உள்ளம் பதைத்தது. தாங்கள் அந்தக் கோரக் காட்சியைப் பார்க்கும் போது தங்களுடைய மனம் என்ன பாடுபடும் என்று நினைத்துக் கொண்டேன். அடுத்த நிமிஷம் எங்கிருந்தோ திடீரென்று அந்தப் பாறை உச்சி மீது புலிகேசிச் சக்கரவர்த்தி தோன்றினார். கம்பீரமாகக் கையினால் சமிக்ஞை செய்தார். அவ்வளவுதான்! ராட்சதர்களைப் போல் பயங்கரமாக ஊளையிட்டுக் கொண்டு ஓடி வந்த சளுக்கர்கள் ஸ்தம்பித்து நின்றுவிட்டார்கள். அவ்விடத்தில் அந்த நேரத்தில் வாதாபிச் சக்கரவர்த்தியை அவர்கள் எதிர்பார்க்கவில்லை. அவர் இட்ட கட்டளையை அவரே மாற்றிச் சிற்பங்களை அழிக்காமல் திரும்பிப் போகும்படி கட்டளையிடுவார் என்றும் எதிர்பார்க்கவில்லை. பிரபு! நானே அந்த அதிசயத்தினால் சிறிது நேரம் சிலையாகப் போய்விட்டேன். எல்லோரும் அவ்விடம் விட்டுப் போன பிறகுதான் எனக்குச் சுய நினைவு வந்தது. உடனே புறப்பட்டு ஓடி வந்தேன்'' என்றான் குண்டோதரன்.

சாரங்கதேவர், ''பிரபு! தங்களுடைய மாயாஜால வித்தைகளுக்கு எல்லையே கிடையாதுபோல் இருக்கிறதே! சளுக்க சக்கரவர்த்தி போட்ட கட்டளையை அவரே ஓடி வந்து மாற்றும்படி எப்படிச் செய்தீர்கள்?'' என்று கேட்டார்.

''ஆகா! அந்த மூர்க்கனுடைய மனத்தைத — கலை உணர்ச்சி என்பதே


THE MOST WONDERFUL IDEAS GROW WITH COTTON
TEXTURES
wool-feel...gay silky...cool lineny...
natural-only as cotton
Century-FOR 100% COTTON TEXTILES
THE CENTURY SPG. & MFG. CO. LTD., Bombay 400 025
Adroit-CM-539-P

இல்லாத கசடனுடைய மனத்தை—மாற்ற முடியுமா ? பிரும்மாவினுல்கூட முடியாது!'' என்ருர் மகேந்திரர்.

''அப்படியானுல் இந்த அதிசயம் எப்படி நடந்தது, பல்லவேந்திரா ! மாமல்லபுரத்தை எப்படிக் காப்பாற்றினீர்கள்?'' என்று முதல் அமைச்சர் ரண தீர பல்லவராயர் கேட்டார்.

''சிறு துரும்பும் ஒரு சமயம் உதவும் என்று பழமொழி இருக்கிறதல்லவா ? புத்தபிக்ஷுக்களினுல் பிரயோஜனம் உண்டு என்று நான் எண்ணியது சரியாய்ப் போயிற்று !''

''பிரபு! புதிர் போடுகிறீர்கள். ஒன்றும் விளங்கவில்லை !''

''நாகநந்தி பிக்ஷுவைச் சிறைப்படுத்தி வைத்திருந்தேனல்லவா? இந்த மாதிரி ஒரு சந்தர்ப்பம் நேரலாம் என்று எண்ணித்தான் வைத்திருந்தேன். புலிகேசி இங்கிருந்து போகுமுன் கடைசியாக நாகநந்தி பிக்ஷுவைத்தான் யாசித்தான். ஒரு கணம் என் மனம்கூட சலித்துவிட்டது. ஒரு வழியாக நாகநந்தியையும் புலிகேசியுடன் கூட்டி அனுப்பிவிடலாமா என்று எண்ணினேன். நல்ல வேளையாக அப்படிச் செய்யாமல் அவரை நிறுத்தி வைத்துக் கொண்டேன். அதனுலேதான் இப்போது மாமல்லபுரம் பிழைத்தது!''

சத்ருக்னன், ''தங்களுடைய கட்டளையின் கருத்து எனக்கு இப்போது தான் புரிகிறது ! 'சுரங்கவாசலைத் திறந்து வைத்துக் கொண்டு உட்கார்ந்திரு ! வெளியில் யார் போனுலும் அதிசயப்படாதே! யோக நிஷ்டையிலேயே இருந்துவிடு!' என்று ஆக்ஞையிட்ட சமயம் ஒன்றுமே விளங்கவில்லை. நாகநந்தி வெளியில் வந்தபோது எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. ஓடிப் போய் அந்தக் கள்ள பிக்ஷுவின் கழுத்தைப் பிடித்து நெரித்துவிடலாமா என்று ஒரு கணம் தோன்றியது. தங்களுடைய கண்டிப்பான கட்டளையை எண்ணிச் சும்மா இருந்தேன்'' என்ருன்.

சேனுபதி கலிப்பகை, ''எங்களுக்கெல்லாம் இன்னமும் ஒன்றும் புரியவில்லை! நாகநந்தி பிக்ஷு போய்ப் புலிகேசியை அழைத்துக் கொண்டு திரும்பி வந்து மாமல்லபுரத்தைக் காப்பாற்றியதாகவா சொல்லுகிறீர்கள்?'' என்று கேட்டார்.

''நாகநந்தி புலிகேசியை அழைத்து வரவில்லை; நாகநந்தியே புலிகேசியாகிவிட்டார்!'' என்று மகேந்திர வர்மர் சொன்னதும் ஏக காலத்தில், 'ஆ!' என்ற வியப்பொலி கிளம்பியது.

''உங்களுக்கெல்லாம் முகத்தில் கண்கள் இருக்கின்றன. ஆனுல், இருந்தும் என்ன பிரயோஜனம்? கண்களை நீங்கள் உபயோகிப்பதில்லை. நாகநந்தியின் முகத்துக்கும் புலிகேசியின் முகத்துக்கும் உள்ள ஒற்றுமையை நீங்கள் யாரும் கவனிக்கவில்லையா ? நாகநந்தி தான் புலிகேசியோ என்றுகூட ஒரு சமயம் நான் சந்தேகித்தேன். இல்லையென்று பிற்பாடு தெரிந்தது. இந்த மாதிரிச் சந்தர்ப்பத்தில் உபயோகப்படுவார் என்றுதான் நாகநந்தியைப் பத்திரமாகச் சிறைப்படுத்தி வைத்திருந்தேன். புலிகேசி இங்கு வந்திருந்த போது அவருடைய கிரீடத்தையும் ஆபரணங்களையும்போல் நம் பொற்கொல்லர்களைக் கொண்டு செய்வித்திருந்தேன். அவற்றுடன் நேற்று அவரை அனுப்பினேன். நேரே மாமல்லபுரம் போகச் சொன்னேன்.''



''நாகநந்தி அவ்வளவு சுலபமாகச் சம்மதித்துவிட்டாரா, பிரபு?''

''பிக்ஷுவானுலும், ஒற்றனுனுலும் உயிருக்கும் விடுதலைக்கும் ஆசைப்படாதவர் யார் ?'' என்ருர் மகேந்திரர்.

''ஆனுல், அந்தக் கபட வேஷதாரியிடம் தாங்கள் எப்படி நம்பிக்கை வைத்து வெளியே அனுப்பினீர்கள் ?''

''ஆ ! நாகநந்தி மனிதனேயல்ல; மனித உருவத்தில் உள்ள அரக்கன். விஷம் ஏற்றிய கத்தியை உபயோகிக்கும் பாதகன் ! ஆனுலும் அவன் கலைஞன். அவன் உள்ளத்தில் கலைப் பிரேமை இருப்பதை நான் அறிவேன். நிச்சயமாய் மாமல்லபுரத்தைக் காப்பாற்றுவான் என்றும் எனக்குத் தெரியும். ஆகையினுல் அவனை அனுப்பினேன்.



ஆயனரின் சிற்பக்கிருகத்தையும் காப்பாற்றிவிட்டிருந்தால் அப்புறம் அவன் என்னவாய்ப்போனாலும்கவலை இல்லை!''

இந்த விவரங்களை யெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த முதன் மந்திரி முதலியவர்கள் அளவிறந்த வியப்பில் ஆழ்ந்து மௌனமாக நின்று கொண்டிருந்தார்கள்.

அந்த மௌனத்தைப் பிளந்து கொண்டு வெளியே ஒரு பெண்ணின் அழுகுரல் கேட்டது. காவலன் ஒருவன் உள்ளே ஓடி வந்து தண்டம் சமர்ப்பித்துவிட்டு, ''பிரபு! மன்னிக்கவேண்டும். கண்ணபிரான் பெண்சாதி கமலி வந்து தங்களை உடனே காண வேண்டும் என்கிறாள். நாங்கள் தடுத்ததற்கு அழுது கூக்குரல் போடுகிறாள்'' என்றான். சக்கரவர்த்தியின் முகத்தில் சிறிது கலக்கத்தின் அறிகுறி தென்பட்டது. ''வரச் சொல்!'' என்று உத்தரவிட்டார்.

அடுத்த நிமிஷம் கமலி தலைவிரி கோலமாய் உள்ளே ஓடி வந்து, ''பல்லவேந்திரா! இந்தச் சண்டாளியை மன்னிக்க வேண்டும். பெரிய துரோகம் செய்துவிட்டேன்!'' என்று கதறிச் சக்கரவர்த்தியின் காலில் விழுந்தாள்.

* * *

அன்று காலையில் கமலியின் மாமனார் அசுவபாலர் கமலியைப் பார்த்து, ''எங்கே அம்மா, ஆயனரையும் அவர் மகளையும் காணோம்?'' என்று கேட்டார்.

கமலி சாதுரியமாக, ''அவர்களுக்கு இந்த வீட்டில் பொழுதுபோகவில்லையாம். இந்தப் பச்சைக் குழந்தையின் விஷமம் பொறுக்கவில்லையாம். ஊரில் உள்ள கோயில்களையெல்லாம் பார்த்து வரப் போயிருக்கிறார்கள். அவர்களுக்குத்தான் சிற்பம், சிலைகள் என்றால் பைத்தியமாயிற்றே?'' என்றாள்.

''நல்ல வேளை! கோட்டைக்கு வெளியே போக வேண்டும் என்று சொன்னார்களே? போயிருந்தால் என்ன கதி ஆகியிருக்கும் தெரியுமா? அந்தப் படுபாவி புலிகேசியின் ஆட்கள் ஊர்களையெல்லாம் கொளுத்துகிறார்களாம். சிற்பிகளையெல்லாம் பிடித்துக் காலையும் கையையும் வெட்டுகிறார்களாம். கன்னிப் பெண்களை யெல்லாம் சிறைப்படுத்திக் கொண்டு போகிறார்களாம்.''

இதைக் கேட்டதும் கமலி, ''ஐயோ!'' என்று அலறினாள். அலறிக் கொண்டே அசுவபாலரிடம் விஷயத்தைக் கூறினாள். அவர் கமலியை மனம் கொண்ட வரையில் திட்டிவிட்டு, ''ஓடு! ஓடிப் போய்ச் சக்கரவர்த்தியிடம் நடந்ததைச் சொல்லு!'' என்றார். அதன் படியே தான் கமலி சக்கரவர்த்தியிடம் ஓடி வந்தாள்.

* * *

விம்மலுக்கும் அழுகைக்கும் இடையே தட்டுத் தடுமாறிக் கமலி விஷயம் இன்னதென்று சொல்லி முடித்தபோது, சக்கரவர்த்தியின் முக பாவம் அடியோடு மாறிப் போயிருந்தது. கர்வத்துடன் கூடிய புன்னகைக்கு மாறாகச் சொல்ல முடியாத வேதனை இப்போது அம்முகத்தில் குடிகொண்டிருந்தது. சத்ருக்னனைப் பார்த்து, ''இவள் சொல்வது உண்மையா, சத்ருக்னா! உனக்குத் தெரியுமா?'' என்று கேட்டார்.

சத்ருக்னன் நடுங்கிய குரலில், ''ஆம், பிரபு! நாக நந்தி போய்ச் சற்று நேரத்துக்கெல்லாம் ஒரு ஆடவரும் ஒரு பெண்ணும் வெளிச் சென்றார்கள். ஆயனர், சிவகாமி மாதிரி தோன்றியது. யார் வெளியே போனாலும் அதிசயப்பட வேண்டாம் என்று தாங்கள் ஆக்ஞையிட்டிருந்தபடியால் பேசாமல் உட்கார்ந்திருந்தேன்'' என்றான்.

மகேந்திரர், முதன் மந்திரி முதலியவர்களை நோக்கி, ''சற்று முன்னால் என்னுடைய சாமர்த்தியத்தைப் பற்றி நானே கர்வப்பட்டுக் கொண்டிருந்தேனல்லவா? கடவுள் கர்வபங்கம் செய்துவிட்டார். சிவகாமியைப் பறிகொடுத்துவிட்டு மாமல்லனுடைய முகத்தில் நான் விழிக்க முடியாது. சேனாபதி! உடனே படைகளைத் திரட்டுங்கள்! ஒரு முகூர்த்தப் பொழுதில் நம் படைகள் வடக்குக் கோட்டை வாசலில் ஆயத்தமாயிருக்க வேண்டும்!'' என்றார்.

(தொடரும்)

அரும்பெரும் புதிய ஃபாஷன்.



RADEUS/L-122

லக்மே லிப்ஸ்டிக்ஸ் மற்றும் நெய்ல் இனமல்.

ஆழ்ந்து, பளிச்சிடும் லிப்ஸ்டிக் எங்கே என்ற ஆர்வம் எங்கும். புதிய லக்மே அல்ட்ரா-க்ரீம், அல்ட்ரா-ஃப்ராஸ்ட், அல்ட்ரா-க்ளோ, லிப்ஸ்டிக்ஸ் வருகின்றன, வசீகர ஃபாஷன்களில், சிவப்பு, ஸ்கார்லட், மற்றும் பழுப்பு நிறங்களில்.

அழகுச் சிகரமாக்கும் லக்மே இனமல்— இதைக் கண்டு மயங்குவீர்.



ஸ்பானிஷ் போர்ட்

மனம் மயக்கும் ரோஜா நிற லிப்ஸ்டிக். அதோடு ஸ்பானிஷ் போர்ட் நெயில் இனமல் வேண்டுமெனக் கேளுங்கள்.

பர்கண்டி ரெட்

இந்த உற்சாகமூட்டும் ரெட் லிப்ஸ்டிக் தடவி, ஃபாஷன் உலகில் கிளர்ச்சியூட்டுங்கள். அதற்குப் பொருந்தும் பர்கண்டி ரெட் நெயில் இனமலும் தடவுங்கள்.

கோன்யாக் ப்ரெளன்

இந் நிறம் உங்கள் உதடுகளையும், நகங்களையும் பிறர் போற்றச் செய்யும்.

க்ளாரெட் ரெட்


தூங்கிவழியாமல், விழிப்பூட்டித் துடிப்பூட்டும் இந் நிறத்தில், உதடுகளும், நகங்களும் துறுதுறுவென்றிருக்கும்.

லக்மே லிப்ஸ்டிக்ஸ், ஐரோப்பா, அமெரிக்கா, இன்னும் பல நாடுகளுக்கும் ஏற்றுமதியாகின்றன.



"உங்கள் பொழுதுபோக்கு என்ன?"

"முதல் நாள் உணவுதானிய நடமாட்டத்துக்குத் தடை உத்தரவு போடுவது மறுநாள் அதை ரத்து செய்வது!"



"உங்கள் பொழுதுபோக்கு என்ன?"

"இந்தப் பொழுது போய் '1976' எப்போதான் வருமோ?"




"ஆபீஸிலே பொழுதைப் போக்கி "ரிடைய"ராகி விட்டேன். இப்போ .... பொழுது இப்படித்தான் போகுது."



"பொழுதுபோக்காகக் கடன் வாங்க ஆரம்பிச்சேன். அது பெரிய தொகையா சேர்ந்துடிச்சு!... சிட் பண்ட்ஸ் ஆரம்பிச்சுட்டேன்!"




என் பொழுது போக்கு..
என் பொழுது போக்கு.... ஷேக்ஸ்பியர், ஷெல்லி, கீட்ஸ், பைரன், அகாதா கிறிஸ்டி, ஷெர்லாக் ஹோம்ஸ் இந்த மாதிரி இலக்கியங்கள் படிப்பது...
"பொழுதுபோக்கு மன்றத்தார் உங்களைப் பார்க்க வந்திருக்காங்க."
"நான் 'பிஸி'யாக இருக்கேன்னு சொல்லு!"
போர் அடிக்குது! பொழுதே போக மாட்டேங்குது!
அமைச்சராகவும், ஐ.நா இந்திய தூதுக்குழு உறுப்பினராகவும் பல பொறுப்புள்ள பதவிகள் வகித்த உங்கள் பொழுது போக்கு என்ன?
?!
ஓ.. பப்பிள் கம் சாப்பிடறது தான் பொழுது போக்கா!

பேபி ஃபுட் பற்றாக்குறை யிருந்தால் பாலமுல் உங்களுக்கு உதவ முடியும்

பாட்டிலில் கொடுத்தல்

குழந்தைக்கு மூன்று மாதம் ஆனதும், உணவு தயாரிக்கும் போது, பேபி ஃபுட்



ஸ்பூனால் ஊட்டுதல்

சிறிது பால் அல்லது நீருடன் பாலமுல் கலந்து பசைபோல் ஆக்குங்கள். சுவைக்கு வேண்டிச் சர்க்கரை சேருங்கள். காலையில் பாட்டிலில் கொடுப்பதற்குமுன்

RADEUS/BA/IR

ஒரு ஸ்பூனும், எளிதில் ஜீரணமாகும் பாலமுல் ஒரு ஸ்பூனுமாகக் கலந்து கொடுக்கத் தொடங்குங்கள். பிறகு படிப்படி யாக அதிகமாக்கி,பேபி ஃபுட் பாதியும், பாலமுல் பாதியுமாகக் கொடுங்கள்.



100 கிராம். அமுல்ஸ்ப்ரே, பாலமுல் இரண்டையும் உணவுச் சத்தில் ஒப்பிட்டுப் பாருங்கள்.

	அமுல்ஸ்ப்ரே	பாலமுல்
புரதம்	22.0 கிராம்	22.0 கிராம்
கார்போஹைட்ரேட்ஸ்	50.0 கிராம்	60.0 கிராம்
கொழுப்பு	18.0 கிராம்	7.0 கிராம்
கால்ஷியம்	1.0 கிராம்	1.0 கிராம்
ஃபாஸ்ஃபரஸ்	0.8 கிராம்	0.8 கிராம்
இரும்புச் சத்து	4.0 மி.கிராம்	6.0 மி.கிராம்
வைடமின் A	1500 இ.யு.	1500 இ.யு.
வைடமின் D	400 இ.யு.	300 இ.யு.
வைடமின் B_1	0.6 மி.கிராம்	0.5 மி.கிராம்
வைடமின் B_2	1.0 மி.கிராம்	0.6 மி.கிராம்
வைடமின் B_6	0.3 மி.கிராம்	—
நியாஸினமைட்	6.0 மி.கிராம்	5.0 மி.கிராம்
வைடமின் C	30.0 மி.கிராம்	50.0 மி.கிராம்

இதை ஸ்பூனால் ஊட்டுங்கள். படிப்படியாய், ஒரு நாளைக்கு 2, 3 தடவைகளாக பாலமுலை, பழச்சாறு, பருப்பு, முட்டை, இவைகளோடு கொடுத்து, சுவைத்து இன்புறச் செய்யுங்கள்.

பாலமுல்

பாலுடன் கூடிய தானிய உணவு
ஏறக்குறைய அமுல்ஸ்ப்ரே

கெய்ரா டிஸ்ட்ரிக்ட் கோவாபரேடிவ் மில்க் ப்ரொட்யூஸர்ஸ் யூனியன் லிமிடெட், ஆனந்த்.

இதுவல்லவோ வேலை!

'தாஜா'

"சார்...சார்...!"

"வாருங்கள்..... உட்காருங்கள்.... யார் நீங்கள்?"

"நான் 'காலேத் தூதன்' பத்திரிகையிலிருந்து வருகிறேன். ஆசிரியர் உங்களைப் பேட்டி கண்டு விட்டு வரச் சொன்னார்."

"பேட்டியா?.. அதெல்லாம் எதற்கு சார்.. நான் விளம்பரத்தை விரும்புகிறவனில்லை."



"பரவாயில்லை... உங்களைப் பார்த்தால் நிறைய விஷயங்கள் கிடைக்கும் என்றார் ஆசிரியர். நீங்கள் பெரிய பெரிய சாதனைகளையெல்லாம் நிகழ்த்தியிருக்கிறீர்களாமே? உதாரணமாக, காகிதக் கூழ் பொம்மை தயாரிப்பதில் உங்களை மிஞ்ச இந்த ஊரில் ஆள் கிடையாதாமே?"

"அதென்னமோ வாஸ்தவம்தான். போன மாசம் கூட, கல்கத்தாவிலே போய் என் 'பொம்மை எக்ஸிபிஷன்' ஒன்று நடத்திவிட்டு வந்தேன். பார்த்தவர்கள் அத்தனைபேரும் அயர்ந்து போய் விட்டார்கள். இத்தனைக்கும் பொம்மை செய்வது என் பொழுதுபோக்குத் தான்."

"இது தவிர, படம் கூட நன்றாகப் போடுவீர்களாமே?"

"போடுவேனே! வாட்டர் கலர், ஆயில் பெயிண்டிங், ம்யூரல் — எல்லாம் செய்வேன், நேரம் கிடைக்கிறபோது. அதோ பார்க்கிறீர்களே இயற்கைக் காட்சி, அதுகூட நான் போட்டதுதான். எப்படி இருக்கிறது?"

"இனி கொஞ்சுகிறது! ஆமாம், மர வேலை கூட....."

"தெரியுமே! இதோ இருக்கிறது பாருங்கள், காளிங்கநர்த்தனம் — அது நான் செதுக்கியதுதான்... அசல் சந்தன மரம்!"


"அப்பா! வேலைப்பாடு பிரமாதம்!"

"மரத்தில் மட்டும்தான் செதுக்கத் தெரியும் என்று நினைத்து விடாதீர்கள். மார்பிள்—அதாவது பளிங்கு—இருக்கிறதல்லவா? அதிலேயும் செதுக்குவேன்.... நேரம் கிடைக்கிறபோது."

"என்ன இது, கோவில் மணி மாதிரி சின்னதாகவிலே இருக்கிறதே?"

"இது பஞ்ச உலோகம் சார்! இந்த மணியைத் தயார் செய்ததும் நானேதான். வார்ப்பட வேலைகளும் அத்துப்படி எனக்கு!"

"ஓ!"





சரித்திர ஆராய்ச்சியாளர்தான் கணவனாக வர வேண்டும் என்று ஒரு பெண் ஆசைப்பட்டாள். அவள் கூறிய காரணம்: எனக்கு வயதாக வயதாக அவருக்கு என்னிடம் அக்கறை அதிகமாகும்!

ஒரு வைத்தியக்காரன் கொஞ்சம் வைத்தியம் தெளிந்தவுடன் ஆஸ்பத்திரியிலிருந்து வீட்டுக்கு வந்து சேர்ந்தான். சுவரில் ஆணி அடித்து ஒரு கண்ணாடியை மாட்டி 'ஷேவ்' செய்து கொள்ள நினைத்தான். ஆணி பலமாக அடிக்கப்படாததால், கண்ணாடி ஆணியுடன் கீழே விழுந்து உடைந்தது. வைத்தியக்காரன் சுவரைப் பார்த்துத் திகைத்துப் போனான். என் தலையைக் காணோமே! அவசரத்தில் தவறி வெட்டிக் கொண்டு விட்டேனோ என்று நினைத்தான்.





"அதோ பாருங்கள் இவி!"
"நீங்கள் வளர்க்கிறீர்களா என்ன?"
"ஏமாந்தீர்களா?... அது பஞ்சுப் பொம்மை சார்... அதுவும்..."
"நீங்களே செய்ததாக்கும்... அதிருக்கட்டும் பிளாஸ்டர் ஆஃப் பாரீஸ் – அதாவது வெண் ணைக் களிமண்ணில் ஏதாவது செய்யத் தெரியுமோ உங்களுக்கு?"
"ஏன் தெரியாமல்? வாருங்கள் இந்தப் பக்கம்... பாருங்கள், இந்த நடராஜர் சிலை எப்படி?"
"அற்புதம் சார்!... அசல் வெண்கலம் போலவே செய்திருக்கிறீர்களே? ஆமாம், வேறு என்ன கைவேலைகள் தெரியும்?"
"ஓரிகாமி என்று கேள்விப்பட்டிருக்கிறீர்களா?"
"தெரியுமே! காகிதத்தை மடித்து மடித்துப் பொம்மை செய்வார்களே, அதுதானே?"
"அதுவேதான்! அதுவும் தெரியும்."
"அப்படியா?"
"இன்னும் கேளுங்கள். எந்த மாடல் ரேடியோவாக இருந்தாலும் கொண்டு வாருங்கள். அக்கு அக்காகப் பிரித்துப் போட்டுவிட்டு, மறுபடியும் பூட்டிக் காட்டுகிறேன்."
"......"

"கடிகார ரிப்பேரும் தெரிந்து வைத்திருக்கிறேன்.... மோட்டார் மெகானிஸம் தண்ணீர்பட்ட பாடமாகத் தெரியும்."
"பேஷ், பேஷ்! ஆமாம், நீங்கள் சொல்வதைப் பார்த்தால் இந்த வேலைகளை யெல்லாம் செய்யவே உங்களுக்கு நிறைய நேரம் தேவைப்படுமே?"
"காலையிலே ஆபீஸுக்குப் போய்க் கையெழுத்துப் போட்டுவிட்டு வந்து விட்டேனென்றால் அப்புறம் நாள் முழுதும் ஃப்ரீ தானே?"
"என்னது! ஆபீசுக்கு வேறு போகிறீர்களா? என்ன ஆபீஸ்? என்ன வேலை உங்களுக்கு?"
"எனக்கு அரசாங்க உத்தியோகம்... அப்பர் டிவிஷன் கிளார்க் நான். ஆனால் அட்டெண்டன்ஸில் கையெழுத்துப் போடுவதுடன் சரி."
"ஆபீசில் உங்கள் வேலைகளையெல்லாம் யார் செய்வார்கள்?"
"பக்கத்து வீட்டுக்காரரை இதற்கென்று அமர்த்தியிருக்கிறேன். அவருக்கு நான் மாசம் நூறு ரூபாய் தருகிறேன்...!"
"பிரமாதம் போங்கள்! இதுவரை அடுக்கினீர்களே அந்த வேலைகளை விட உங்களுடைய இந்த வேலைதான் சார் எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. இதைப் பற்றித்தான் பத்திரிகையிலே எழுதப் போகிறேன். வருகிறேன்!"



வித்வான் : தொண்டை சரியாக இல்லை என்று டாக்டரிடம் போனேன். தாராளமா பாடலாம் என்றார்!
ரசிகர் : டாக்டருக்கென்ன, அவர் சொல்லிவிட்டுப் போய் விடுவார். கேட்டு அவதிப்பட வேண்டியவங்க நாங்கதானே!





நட்சத்திரமும் நவநாகரீகமும்

லால்பாய் டெக்ஸ்டைல்ஸ்

உங்களுக்கென ஒரு பாக்ய நட்சத்திரம்... ஒரு நாகரீகம் உண்டு... இரண்டையும் சிறப்புடன் இணைப்பது—லால்பாய் டெக்ஸ்டைல்ஸ். பெருமை மிகு பிரிண்டுகள், அருமையான வண்ணங்கள்—பலவிதத் துணி வகைகள்.

தேர்ந்தெடுக்க 7 மடங்கு வகைகள் வேறு எங்குதான் கிடைக்கும்?



மகரம்:
நீங்கள் அதிவாற்றல் படைத்தவர். அதோடு, உலகில் அறிந்து நடப்பவர். உங்கள் செயலில் விதானமும் ஆழமும் இருக்கும். உங்கள் அதிர்ஷ்ட வண்ணங்கள்—வெளிர் சிவப்பு (பிங்க்), ராயல் நீலம், கரும் பழுப்பு. நாகரீகத்தின் முன்னோடியாக நீங்கள் விளங்கிடும் விளங்கா விட்டாலும், தனித்து நிற்கும் வண்ணம் எடுப்பாக உடுக்கத் தெரிந்தவர்.

மீனம்:
நீங்கள் மிக அடக்கமானவர். மற்றவர்கள் எளிதில் உங்கள் மனதை மாற்றி விடுவார்கள். நீங்கள் பற்பல கற்பனைகளும் திறமையும் நிறைந்தவர். ஆனால் உங்களுக்கே அவை தெரியாது. உங்கள் அதிர்ஷ்ட வண்ணங்கள்—மென் கடற்பச்சை (ஸாஃப்ட் ஸீ கிரீன்), நீல வண்ணங்கள், இளம் பழுப்பு (மாவ்). நாகரீகமாக உடுக்க விரும்புவீர், ஆனால் அதில் எப்போதும் வெற்றி பெறுவதில்லை.

கும்பம்:
நீங்கள் எளிமையானவர். ஆடம்பரமற்றவர். நல்ல தொண்டாற்ற உங்களையே அர்ப்பணித்துக் கொண்டவர். உங்கள் அதிர்ஷ்ட வண்ணங்கள்—கரும் பச்சை, ஊதா வண்ணம், பழுப்பு (ப்ரௌன்). நவ நாகரீகத்தை விட, குறிக்கோளுக்கே அதிக முக்கியத்துவம் கொடுப்பவர் நீங்கள்.

லால்பாய்
அதிர்ஷ்டப் பொருத்தம் அளிப்போர்

லால்பாய் குரூப் துணிகள்
அரவிந்த்
அசோகா
ராஜ்பூர்
சரஸ்பூர்
அருண்
நூதன்
நியூ காட்டன்

ஏழு மில்களின் ஏற்றமிகு துணிகள்

CMLS.38.183 TM


சில்லறை விற்பனையாளர்கள்:
M/s. வெங்கடேஷ், 243, 244, என்.எஸ்.ஸி. போஸ் ரோடு, சென்னை-1.
M/s. ஆனந்த் டெக்ஸ்டைல்ஸ், பெரிய கடை வீதி, திருச்சி-8.
M/s. ஈஸ்வரீஸ், 26-பி, மேற்கு டவர் தெரு; மதுரை-1.



இதோ, வாணிஸ்ரீயிடம் காணுவீர்!

நீங்கள் பெற விரும்பும் அழகு

"லக்ஸ் ஸுப்ரீமின் செழுமையான நுரையில் நான் குளித்தெழுந்தபோது பட்டு ரோஜா விதழ்போன்று என் மேனி மின்னியது. ப்யூடி க்ரீமின் மென்மையான ஸ்பரிசமும் நிகரற்ற நறுமணமும் ஒரு அபூர்வமான அனுபவத்தில் என்னை ஆழ்த்தியது".



இந்துஸ்தான் லீவர் லிமிடெடின் தரமான தயாரிப்பு

லக்ஸ் ஸுப்ரீம்

HT-HLLS-7626 (A)



அதிர்ச்சி!

ஸோமாஸ்

"சாமதி! நீ ஆத்திரப்படக் கூடாது. சிலருடைய சுபாவமே அப்படி. முன் கோபத்தினால் எரிந்து விழுபவர்கள் அடுத்த நிமிஷமே தங்கள் செயலுக்கு வருந்துவார்கள். நீ பொறுமையாய்த்தான் இருக்க வேண்டும். அவ்வளவு பெரிய கம்பெனியின் மானேஜிங் டைரக்டரின் 'ஸ்டெனோ'வாக வேலை செய்ய நீ கொடுத்து வைத்திருக்க வேண்டும்!"

"நான் கொடுத்து வைத்திருப்பவள் தான். இல்லையென்றால் அந்தச் சிடுமூஞ்சியிடம் வேலை செய்யும் பாக்கியம் கிடைக்குமா? ஒவ்வொரு நாளும் எத்தனை வசவுகள், திட்டுகள் வாங்கிக் கட்டிக் கொள்கிறேன் தெரியுமா?"

"சுமதி! உன் ஆத்திரம் எனக்குப் புரிகிறது. நீ மட்டும் கொஞ்சம் முயற்சி செய்து சாந்தத்தை மேற்கொண்டு, அவர் எது சொன்னாலும் புன்னகையுடன் 'மன்னித்துக் கொள்ளுங்கள், ஸார்!' என்று தணிந்த குரலில் சொல்லப் பழகிக் கொள். அப்புறம் நடப்பதை நீயே பார்!"

"ஐயோ, அத்தான்! 'அது'விடம் எத்தனையோ முறை கெஞ்சியாயிற்று. நான் கெஞ்சக்கெஞ்ச 'அது' மிஞ்சுகிறது. ஒரு நாள் நிச்சயம்...!" சுமதிக்கும் அவள் அத்தான் சுந்தரத்துக்கும் இடையே அடிக்கடி நடைபெறும் 'டயலாக்' தான் இது.

சில நாட்களாகச் சுமதியிடம் நல்ல மாறுதல் தெரிந்தது. ஆபீசுக்குப் போவதென்றாலே அவளுக்குக் குஷி. அதனால் அத்தான் சுந்தரத்துக்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை.

சின்ன வயதிலேயே பெற்றோர்களை இழந்த சுமதி தன் அத்தையின் ஆதரவில் படித்துப் பட்டம் பெற்றாள். அத்தான் சுந்தரம் அரும் பாடுபட்டு நல்ல வேலையையும் தேடித் தந்தான். அடிக்கடி தன் அம்மாவிடம் சொல்லுவான்: "சுமதி எனக்குத்தான், அம்மா! கிணற்று ஜலத்தை வெள்ளம் கொண்டு போய் விடுமா? இப்பொழுது அவள் வருமானத்தை அப்படியே பாங்கில் போட்டு வருகிறேன். எல்லாம் எங்கள் வருங்கால நன்மைக்குத்தான்! முன்பெல்லாம் சதா சிடுசிடுத்துக் கொண்டு 'வேலையை விட்டு விடுகிறேன்' என்று சொல்லிக் கொண்டிருந்தாளே, இப்பொழுது எப்படிப் பொறுப்பாக மாறி விட்டாள், பார்த்தாயா?"

"அத்தான்..." சுமதிதான் மிகவும் குழைவாக அழைத்தாள். "என்னம்மா, சுமதி...?" என்று ஆதுரத்துடன் கேட்டான் சுந்தரம். "...இப்பொழுது எப்படியிருக்கிறார் உன்னுடைய 'பாஸ்'? என் திட்டம் எப்படி?"

"...உங்கள் திட்டம் பிரமாதம், அத்தான்! இப்பொழுதெல்லாம் அவர் என்னைக் கோபிப்பதேயில்லை. அத்தான்! ஆனால் வேலையை விட்டு விட்டேன் ... அதைத்தான் உங்களிடம்..."

சுந்தரம் அதிர்ந்தான்.

"...ஆமாம், அத்தான்! கல்யாணத்துக்குப் பிறகும் நான் அவருக்கு 'ஸ்டெனோ'வாக இருப்பதை அவர் விரும்பவில்லை. அடுத்த மாதம் திருப்பதியில் எளிய முறையில் எங்கள் திருமணம் நடக்க விருக்கிறது. உங்களுக்குச் செலவேயில்லை, அத்தான்."

சுந்தரம் ஒரேயடியாக அதிர்ந்து போய் விட்டான். கிணற்று நீரை வெள்ளம் கொண்டுபோய் விட்டால் அதிர்ச்சியாகத்தானே இருக்கும்!



ஸ்கூட்டர் கார்!

பெரும்பாலும் ஸ்கூட்டர் உபகரணங்களைக் கொண்டு சிறிய புதிய விதமான கார் ஆந்திரப் பிரதேசத்தில் தயாரிக்கப்படுகிறது! ரேணிகுண்டாவில் தொடங்கப்பட்டுள்ளது இந்த ஸ்கூட்டர் கார் தொழிலகம்.



'எங்க வீட்டுக்காரரும் கச்சேரிக்குப் போகிறார்' என்று வாய் வார்த்தையாக, வேடிக்கையாகப் பேசுவதுண்டு. ஆனால் மெய்யாகவே கூட உங்கள் கணவர் கச்சேரிக்கு என்று புறப்பட்ட சமயம் அல்லது அவர் கச்சேரி கேட்டுக் கொண்டிருந்த போது ஏதாவது ரசமான அல்லது நகைச் சுவையான சம்பவம் நிகழ்ந்திருக்குமே? அப்படியானால் அதை அவசியம் எழுதி அனுப்புங்கள். பிரசுரமாகும் துணுக்குக்குப் பரிசு உண்டு.


கடைசித் தேதி: நவம்பர், 23

பிரசுரத்துக்கு ஏற்கப் படாதவற்றைத் திருப்பி அனுப்ப இயலாது. கடிதப் போக்குவரத்தும் கிடையாது. உறைமீது "கச்சேரிக்குப் போகிறார்!" என்று குறிப்பிடவும்.

16. தியாக சீலரும் கவிக் கொண்டலும்

முன்னம் விட்ட குறை
வந்து தொட்டாச்சு — சிதம்பரக் கும்மி

சேலம் வக்கீல் ஸி. இராஜகோபாலாச்சாரியாரை, நாலாம் படிவ மாணாக்கன் ஆர். கிருஷ்ணமூர்த்தி, முதல் தடவையாக 1918ஆம் ஆண்டில் பார்த்தான். அப்போது முன்னவர், ராஜாஜி என்ற சுருக்கமான புகழ்ப் பெயருடன் விளங்கவில்லை. அதற்கு நாலு ஆண்டுகளுக்குப் பிறகுதான், கயாவில் நடந்த காங்கிரஸ் மகாசபை கூட்டத்தில், காந்திஜி என்பதைப்போல் ராஜாஜி என்ற பெயரை, வடநாட்டுத் தலைவர்கள் அவருக்குச் சூட்டி அதைப் பிரபலப்படுத்தினார்கள்.



பொன்னியின் புதல்வர்

சுந்தா

அவரைப் பார்த்த மாணாக்கனும் பத்து ஆண்டுகளுக்குப் பிறகுதான் "கல்கி" என்ற பெயரைப் புனைந்து கொள்ளப் போகிறான்.

தமக்கு அருந் தலைவராகவும் நாட்டுக்குப் பெருந் தலைவராகவும் விளங்கப் போகிறவரை அப்படி முதல் முறையாகக் கண்ட விவரம் பற்றி, கல்கியாகி விட்ட கிருஷ்ணமூர்த்தி பதினாறு ஆண்டுகளுக்குப் பிறகு, தம்மை "ஒரு மாணாக்கன்" என்றே குறிப்பிட்டுக் கொண்டு இப்படி எழுதினார்:

ஒரு நாள் திருச்சிராப்பள்ளி டவுன் ஹாலுக்ெதிரில் ஒரு பெரிய பொதுக்கூட்டம் கூடிற்று. வங்காளத்தின் பிரசித்தி பெற்ற தேச பக்தரும், இணையற்ற வாக்கு வன்மையுள்ள பிரசங்கியுமான ஸ்ரீ விபின சந்திர பாலர் அன்று பிரசங்கம் செய்யவிருந்தார். அவரைப் பார்க்கவும், அவருடைய பேச்சைக் கேட்கவும் வந்து கூடியவர்களில் ஒரு ஹைஸ்கூல் மாணாக்கனும் இருந்தான். மேடையில் விபின சந்திர பாலருக்குப் பக்கத்தில் மற்றொரு நாற்காலியில் உட்கார்ந்திருந்த தமிழர் யார் என்று அறிந்துகொள்ள அவனுக்கு ஆவல் உண்டாயிற்று. கூட்டத்தில் அருகில் உட்கார்ந்திருந்தவரிடம் "அவர் யார் தெரியுமா?" என்று கேட்டான்.

"அவர்தான் சேலம் ஸி. இராஜகோபாலாச்சாரியார்" என்று பக்கத்திலிருந்தவர் கூறினார்.

அந்தப் பெயரை அப்போதுதான் முதன் முதலாக அவ்விளைஞன் கேட்டான். மேடையில் விபின சந்திர பாலருக்கு அருகில் நாற்காலியில் உட்காரும்படி அவருக்கு இருந்த சிறப்பு என்ன என்று அறிய அவனுக்கு ஆவல் ஏற்பட்டது.

"சேலத்தில் அவருக்கு என்ன வேலை?"

"பெரிய வக்கீல்; முனிசிபல் சேர்மன்!"

இதனால்கூட அவன் திருப்தி அடையவில்லை. பாலருக்குப் பக்கத்தில் உட்காருவதற்கு இந்தக் காரணம் போதாதென்று தோன்றிற்று. பணத்துக்குப் பேயாய்ப் பறக்கும் பெரிய வக்கீல்களும் உதவாக்கரை முனிசிபல் சேர்மன்களும் நாட்டில் எவ்வளவோ பேர் இருக்கிறார்கள்.

"தேசிய இயக்கத்தில் இவருக்கு என்ன சம்பந்தம்?" என்று கேட்டான்.

பக்கத்தில் இருந்தவர் மிகவும் தெரிந்தவராய்க் காணப்பட்டார். "தேசத்துக்கு உழைப்பவர்களுக்குப் பணம் கொடுத்து உதவி செய்வார்."

இது பாதகமில்லை; கொஞ்சம் திருப்தியாயிற்று.

"இன்னும் ஏதாவது உண்டா?"

"பெரிய ஆசார சீர்திருத்தக்காரர். தீண்டா வகுப்பினருடன் சமபந்தி போஜனம் செய்தார். அதற்காக அவரைச் சேலத்தில் சாதியை விட்டுத் தள்ளி வைத்திருக்கிறார்கள்."

அவ்விளைஞனுக்கு முதன் முதலில், ஸ்வாமி விவேகானந்தரின் பிரசங்கங்களைப் படித்தது தன் பயனாகச் சாதி வேற்றுமைகளிலும் தீண்டாமையிலும் வெறுப்பு உண்டாகியிருந்தது. "வைதிகர்கள்" என்று சொல்லப்படுவோரின் போலி ஆசாரங்கள், பாஷாண்டித்தனங்கள், சுயநலச் செய்கைகள் முதலியவை

களைப் பார்க்கப் பார்க்க அவ்வெறுப்பு அதிகமாயிற்று. பாரதியின் கீதங்களும் ஓரளவு இவ்வெறுப்பை வளர்த்து வந்தன.

ஆனால் காரியாம்சத்தில் சாதி வேற்றுமைகளையும் தீண்டாமையையும் ஒழித்திருந்த தமிழர் ஒருவரை அதுவரையில் அவ்விளைஞன் பார்த்ததில்லை. எனவே அவனுடைய கண்களுக்கு ஆச்சாரியார் பெரிய வீர புருஷராக அப்போது தோற்றம் அளித்ததில் வியப்பில்லை அல்லவா?

இந்தத் தலைமுறையைச் சேர்ந்த வாலிபர்கள், அக்காலத்தில் சமூக சீர்திருத்த முயற்சிகள் எவ்வளவு கஷ்டமாயிருந்தன வென்பதை அறிந்து கொள்வதே கஷ்டமாகும். எதற்கெடுத்தாலும் அப்போது சாதிப் பிரஷ்டம்தான். கப்பல் பிரயாணம் செய்தால் சாதிப் பிரஷ்டம், சமபந்தி போஜனம் செய்தால் சாதிப் பிரஷ்டம்; பிராமணனல்லாதான் பார்க்கப் பிராமணன் சாப்பிட்டால் சாதிப் பிரஷ்டம்; கீழ்ச் சாதியாரிடம் தண்ணீர் வாங்கிக் குடித்தால் கூடச் சாதிப் பிரஷ்டம். சுருங்கச் சொன்னால், சிறை புகுவதை விட அக்காலத்தில் சமூகச் சீர்திருத்தம் செய்வதில் கஷ்டம் அதிகம் இருந்தது. (ஆ. வி. — 1-10-32)

ராஜாஜியைக் கல்கி இரண்டாம் தடவையாகப் பார்த்து — பார்த்தது மட்டும் அல்ல, சந்தித்துப் பேசியது— அவர் முதல் தடவையாகச் சிறைத் தண்டனை அனுபவித்து விடுதலையாகி வந்த பிறகு. இதையும் கல்கியே சொல்லட்டும்:

1922-ஆம் வருஷம் முழுவதும் சிறை வாசம் செய்துவிட்டு, 1923 ஆம் வருஷ ஆரம்பத்தில் நான் விடுதலை அடைந்தேன். ''ஐயோ! விட்டு விட்டார்களே! இனிமேல் என்ன செய்வது?'' என்ற கவலை உண்டாயிற்று. அந்தக் கவலையை அப்போது தமிழ் நாட்டுக் காங்கிரஸ் கமிட்டியின் காரியதரிசி









''நோபல் பரிசு பெற்று உலகப் புகழ் சூடிய கவிஞர். மகாத்மா காந்தியை குருதேவ் என்று வணங்கிய உத்தமர். அவரைத் தரிசனம் செய்யப் போகிறோம்...''

காந்தி ஆசிரமத்தை அப்போது கம்மா பார்த்துவிட்டுப் போன கல்கி, சுமார் ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு அதிலேயே வசித்துத் தொண்டாற்றச் சென்றார்.

''காந்தி மகானிடம் எனக்கு இருந்த பக்தி ராஜாஜியிடமும் இருந்தது. ஒரு படி அதிகமாகவே இருந்தது.''

''எதற்காக உமக்கு அதிகச் சம்பளம் என்று ஆச்சாரியார் கேட்டார். மௌனமாயிருந்தேன்.''

யாயிருந்த ஸ்ரீமான் எஸ். ராமநாதன் தீர்த்து வைத்தார். மேற்படி கமிட்டியின் காரியாலயம் அப்போது திருச்சினாப்பள்ளியில் இருந்தது. அந்தக் காரியாலயத்தில் எனக்கு அவர் குமாஸ்தா வேலை கொடுத்தார். முப்பது ரூபாய் சம்பளம்.

காங்கிரஸிலே கூடச் சம்பளம் உண்டு என்று அறிந்து என்னுடைய பந்துமித்திரர்கள் சந்தோஷித்தார்கள். ஆனால் எனக்கு மட்டும் திருப்தி இல்லை. ஏன் தெரியுமா?

அதே காரியாலயத்தில் மற்றொரு குமாஸ்தா இருந்தார். அவரும் நானும் ஒரே வகுப்பில் படித்தவர்கள். ஒத்துழையாமை இயக்கத்தை முன்னிட்டு நான் கலாசாலையை விட்டபோது அவர் விடவில்லை. படிப்பிலும் அவர் பிரகஸ்பதியாயில்லை. அவர் காங்கிரஸ் தொண்டு செய்து சிறை செல்லவும் இல்லை. உண்மையில் நான் சிறையில் இருந்தபோது அவர் இந்தக் காரியாலயத்தில் உத்தியோகத்துக்கு வந்து இப்போது நாற்பது ரூபாய் சம்பளம் வாங்கிக் கொண்டிருந்தார்.

என் மனத்தில் உறுத்திக் கொண்டிருந்தது இதுதான். ''தியாகம் செய்து சிறை சென்றெல்லாம் வந்த எனக்கு முப்பது ரூபாய் சம்பளம்; ஒன்றும் செய்யாத இவருக்கு நாற்பது ரூபாய் சம்பளமா?'' என்ற எண்ணம் வேரூன்றி விட்டது. எனவே சில மாதங்களுக்கெல்லாம் ''சம்பளம் உயர்த்த வேண்டும்'' என்று மனுப் போட்டேன். என் பேரில் பெரிதும் அபிமானம் உடையவரா யிருந்த ஸ்ரீமான் எஸ். ராமநாதன் இந்த விஷயத்தை அடுத்த காரியக் கமிட்டிக் கூட்டத்தின் ''அஜண்டா''வில் சேர்த்தார்.

தாசில்தாரின் சமையற்காரன் அவர் சந்தோஷமா யிருக்கும் சமயம் பார்த்துச் சம்பளம் ஒசத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்பானே, அந்த மாதிரி நான் கேட்கவில்லை யென்பதைத் தெரிவிக்கும் பொருட்டு, ஒரு விஷயம் இங்கே சொல்ல வேண்டும்.

கயா காங்கிரஸில் ''மாறுதல் வேண்டாதார்'' கட்சி ஜயமடைந்து சட்ட சபைப் பகிஷ்காரத் தீர்மானம் ஊர்ஜிதம் ஆயிற்றல்லவா? தேசபந்து (சித்தரஞ்சன் தாஸ்) முதலியவர்கள் அத்தீர்மானத்தை மீறி சுயராஜ்யக் கட்சியை ஸ்தாபித்தார்கள். இந்த நிலைமையைப் பற்றி ஆலோசிப்பதற்காகக் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் சட்டசபை சம்பந்தமாக நடுநிலைமை வகிப்பதென்றும், பகிஷ்காரப் பிரசாரம் செய்ய வேண்டியதில்லை என்றும் தீர்மானம் ஆயிற்று. இந்தத் தீர்மானம் கயா காங்கிரஸ் தீர்மானத்துக்கு முரண்பட்டதென்று கருதி, சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார், வல்லபாய் பட்டேல், இராஜேந்திர பிரசாத் முதலிய மாறுதல் வேண்டாத் தலைவர்கள் காரியக் கமிட்டியிலிருந்து ராஜிநாமாச் செய்தார்கள். இவர்களுடைய நிலையை விளக்கவும், கயா காங்கிரஸ் தீர்மானத்துடன் அகில இந்தியக் கமிட்டித் தீர்மானம் எவ்வாறு முரண்படுகிறது என்பதைக் காட்டவும், சட்டசபை பகிஷ்காரத்தின் அவசியத்தை வற்புறுத்தவும், தமிழில் ஒரு துண்டுப் பிரசுரம் தயாரிக்குமாறு சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் பம்பாயிலிருந்து ஸ்ரீமான் ராமநாதனுக்கு எழுதியிருந்தார். அவர் என்னிடம் சொன்னார். நான் ஒரு துண்டுப் பிரசுரம் எழுதினேன். அது ஆச்சாரியாருக்கு அவருடைய அங்கீகாரத்துக்காக அனுப்பப் பெற்றது.

மாகாணக் காரியக் கமிட்டிக் கூட்டத்துக்காக ஆச்சாரியார் திருச்சிக்கு வந்து ரயிலை விட்டிறங்கியதும், ஸ்ரீமான் ராமநாதனை முதல் கேள்வியாக ''நீங்கள் அனுப்பிய துண்டுப் பிரசுரம் யார் எழுதியது?'' என்று கேட்டார். ராமநாதன் பக்கத்திலிருந்த என்னைச் சுட்டிக் காட்டினார்.

''இவர் என்ன செய்கிறார்?''

''மாகாணக் கமிட்டிக் காரியாலயத்தில் தான் இருக்கிறார்.''

ஆச்சாரியாரின் முகத்தில் சந்தோஷத்தின் சிறு அறிகுறி புலப்பட்டதாக எனக்குத் தோன்றியது. அந்தக் துண்டுப் பிரசுரத்தில், கையெழுத்து உள்பட எல்லாம் தமக்குப் பிடித்திருக்கிறது என்றும், ரொம்ப நன்றாய் எழுதியிருக்கிறது என்றும் ஆச்சாரியார் சில நிமிஷ நேரம் அதைப் பற்றியே சொல்லிக் கொண்டிருந்தார்.

''சரி, எஜமான் சந்தோஷமாகத்தான் இருக்கிறார். நமக்குச் சம்பளம் ஒசத்திக் கொடுப்பார்'' என்று என் மனத்துக்குள் எண்ணிக் கொண்டேன்.

கமிட்டிக் கூட்டத்தில் இந்த விஷயம் வந்தபோது, காரியதரிசி ராமநாதன் ''குமாஸ்தாவின் சம்பளம் ஐந்து ரூபாய் உயர்த்த வேண்டும்'' என்று பிரேரேபணை செய்தார். நான் பள்ளிக்கூடத்தை விடக் காரணமாயிருந்தவரும், என்பேரில் விசேஷ அபிமானம் கொண்டவருமான டாக்டர் ராஜன் அதை ஆர்வத்துடன் ஆதரித்தார். மற்றவர்களும் ''சரி'' என்றார்கள். ராமநாதன் அதை எழுதப் போன சமயம், அதுவரையில் வேறு ஏதோ கவனமா யிருந்த ஆச்சாரியார் ''யாருக்கு அதிகச் சம்பளம்?'' என்று கேட்டார். ராமநாதன் தெரிவித்ததும் ''எதற்காக?'' என்று கேட்டார். எனக்கு என்னமோ போலிருந்தது.

மற்றவர்கள் பேசாமலிருக்கவே, ஆச்சாரியார் என்னைப் பார்த்து ''எதற்காக உமக்கு அதிகச் சம்பளம்?'' என்றார். மௌனமாய் இருந்தேன். பிறகு கேள்விகள் போட ஆரம்பித்தார்.

''கல்யாணமாகி யிருக்கிறதா?''

''இல்லை.''

''தாயார் தகப்பனார் இருக்கிறார்களா?''

''தாயார் இருக்கிறாள்.''

''அவள் உம்முடன் வசிக்கிறாளா?''

''இல்லை; தமையனாருடன் வசிக்கிறாள்.''

''நீர் காப்பாற்ற வேண்டியவர் வேறு யாரேனும் உண்டா?''

''இல்லை.''

''நீர் தன்னந் தனியாக இருப்பதற்கு மாதம் முப்பது ரூபாய் போதாதா?''

''போதும்.''

'டெபிலைஸ்ட்'

துணிகளுக்கு ஒரு மகத்தான பலனைச் சேர்க்கிறது— சுருக்கம் விழாமலிருக்கின்றன

சுத்தமான பருத்தி துணிகளுக்கும் அல்லது காட்டன் சிந்தடிக் கலந்த துணிகளுக்கும் ''டெபிலைஸ்ட்'' ஒரு மகத்தான பலனைச் சேர்க்கிறது. சுருக்கம் விழாத தன்மைக்கென சோதிக்கப்பட்டது உங்கள் துணிகளுக்கு மிகக் குறைவான இஸ்திரி செய்வதுடன் பார்ப்பதற்கும் மிக அழகாக உள்ளது.

''டெபிலைஸ்ட்'' எனும் வியாபாரச் சின்னம் உலகப் புகழ் பெறுவதுடன் இந்தியாவில் உள்ள முதன்மையான மில்களான அரவிந்த், பின்னி, டி ஸி எம், பாம்பே டையிங், ஸ்ரீ அம்பிகா தாகர்ஸே, மற்றும் டாட்டா, மபத்லால் தயாரிக்கும் தரமான துணிகளுடன் திகழ்கின்றது.

நீங்கள் வாங்கும் ஒவ்வொரு மீட்டர் துணியிலும் **TEBILIZED**® மார்க் இருக்கிறதா என்று பார்த்து வாங்கவும்.



TESTED CREASE RESISTANCE

TEBILIZED®

MINIMUM IRONING • DURABLE GOOD LOOKS

TEBILIZED® சுருக்கம் விழாத தன்மைக்கென சோதிக்கப்பட்டது.

® ரெஜிஸ்டர்ட் டிரேட் மார்க்கின் உரிமையாளர்கள்
மேட்டூர் பியர்ட்ஸெல் லிட்.
தபால் பெட்டி எண், 7, சென்னை-1.

SISTA'S-MBT-190-TAM-A



''பின் எதற்காகச் சம்பளம் கேட்கிறீர்?''

மௌனம்தான் பதில். மனத்திலிருந்த காரணத்தைச் சொல்ல முடியாதல்லவா? அப்போது ராமநாதன் என்னுடைய சகாயத்துக்கு வந்து. ''இவர் ரொம்பக் கெட்டிக்காரர்; மிகவும் உபயோகமாக இருக்கிறார்'' என்றார். டாக்டர் ராஜன் அதை ஆமோதித்தார்.

''நான்கூடத்தான் இன்று காலையில், இவர் எழுதியிருக்கும் துண்டுப் பிரசுரம் நன்றாயிருக்கிறதென்று சொன்னேன். அதற்காகச் சம்பளம் அதிகம் கொடுப்பதா? காங்கிரஸில் அது முடியாது. கெட்டிக்காரத்தனத்துக்குத் தகுந்த சம்பளம் வேண்டுமானால் இவர் வேறு உத்தியோகத்துக்குப் போயிருக்க வேண்டும்'' என்றார் ஆச்சாரியார்.

விஷயம் இவ்வாறு தீர்ந்தது. எனக்கு வந்த கோபத்தைச் சொல்லி முடியாது. நாளடைவில் அந்தக் கோபம் பக்தியாக மாறியது. என்னுடைய சம்பள விஷயத்தில் அவர் காட்டிய கண்டிப்புத்தான் அவரிடம் எனக்குப் பக்தி உண்டானதற்கு விதையாயிற்று என்றே சொல்லலாம்.

(பின்னர் ஒரு சமயம் திருச்செங்கோடு) காந்தி ஆசிரமத்துக்கு நான் சென்றிருந்தபோது, ஆச்சாரியார் தமது குழந்தைகளுடன் பனை ஓலைக் கூரை போட்ட குடிசையில் வசிப்பதைப் பார்த்ததும், ''ஓ! இவர் பிறருக்கு உபதேசிப்பவர் மட்டுமல்ல; தமது வாழ்க்கையில் மகத்தான தியாகம் செய்திருப்பவர்'' என்று உணர்ந்தேன்.

(ஆ.வி. 5-5-35, வெள்ளிமணி 12-12-47)

காந்தி ஆசிரமத்தில் அப்போது கல்கி ஒரு வாரம் தங்கினார். அதைப் பற்றி முன்பு தம்மை ஒரு மாணாக்கனுக்க் குறிப்பிட்டுக் கொண்ட கட்டுரையில் இன்னும் விரிவாகச் சொல்லி யிருக்கிறார்:

அங்கே ஒரு தென்னந் தோப்பில் பனை ஓலை வேய்ந்த ஒரு குடிசையில், தரையில் விரித்திருந்த பாயின்மேல் உட்கார்ந்து ஆச்சாரியார் ஏதோ எழுதிக்கொண்டிருந்தார். இந்தக் காட்சி, ஆசிரமம் பார்க்கப் போன இளைஞனுக்கு அளவில்லாத ஆச்சரியத்தை உண்டாக்கிற்று. தீண்டா வகுப்புச் சிறுவர்களும் மற்ற வகுப்புச் சிறுவர்களும் கலந்திருந்த பள்ளிக்கூடத்தில் ஆச்சாரியார் சந்தோஷமாக அரிச்சுவடி பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருப்பதைப் பார்த்தபோது, அவனுடைய ஆச்சரியம் இன்னும் அதிகமாயிற்று. சாப்பாடு நேரத்தில் ஆசிரமத் தொண்டர்களும் ஆச்சாரியாரும், அவருடைய புதல்வியும் மற்றொரு பெண்மணியும் சமபந்தியாக உட்கார்ந்து, கவுண்டர் பையன் ஒருவன் சமைத்த எளிய உணவைச் சாப்பிட்டபோது, அவ்விளைஞன் ஆச்சரியக் கடலில் ஆழ்ந்து போனான். அங்கு உட்கார்ந்து உணவருந்திய தொண்டர்களில் ஆதித்திராவிட இளைஞர் இருவரும் இருந்தார்கள்.

அப்போது ஆசிரமத்தைச் சும்மா பார்த்துவிட்டுப் போன கல்கி, சுமார் ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு அதிலேயே வசித்துத் தொண்டாற்றச் சென்றார். அந்த ஐந்து வருட இடைவேளையில், ராஜாஜியுடன் சில சமயங்களில் மட்டுமே கல்கிக்கு நேர்முகத் தொடர்பு இருந்தது. ஆயினும் அந்தத் தொடர்பே ராஜாஜியை அவர் எம்மட்டில் மதிக்க வைத்தது என்பதை இந்த வாக்கியங்கள் புலப்படுத்தும்:

காந்தி மகானிடம் எனக்கு இருந்த பக்தி அப்போது ராஜாஜியிடமும் இருந்தது; ஒரு படி அதிகமாகவே இருந்தது. ராஜாஜியின் தோற்றம், பேச்சு, அவருடைய ஒழுக்கத்தையும் தியாக வாழ்க்கையையும் பற்றி நான் தெரிந்து கொண்டிருந்த விவரங்கள் எல்லாம் அத்தகைய பக்தியை எனக்கு உண்டாக்கி இருந்தன.

காந்தி மகாத்மா எவ்வளவோ பெரிய மகாத்மாதான். ஆனாலும் அவர் தமிழ் அறியாத குஜராத்திக்காரர்தானே? எனவே, அவருடைய போதனை உள்ளத்தில் ஒட்டுவது கொஞ்சம் கஷ்டமா யிருந்தது. ஆனால் ராஜாஜியோ, நமது சொந்தத் தமிழ் நாட்டவர். நமது தாய்மொழியில் நமது உள்ளத்தில் ஒட்டும்படி பேசக் கூடியவர்.

(வெள்ளிமணி—15-8-47)

''என் பூர்வாச்ரமம்'' என்ற தலைப்புக் கொண்ட ஒரு கட்டுரையில் வரும் இந்த வாக்கியங்கள், காந்தி ஆசிரமத்தில் சேரவிருந்த தருவாயில் கல்கி கொண்டிருந்த உணர்ச்சியைத்தான் வெளியிடுகின்றன. சேர்ந்து தொண்டாற்றிய காலத்திலோ, ராஜாஜியின்பால் கல்கியின் தொடர்பு, ஒரு சொந்தமாகவும் பந்தமாகவும் பரிணமித்தது.

தமது வாழ்க்கையில் ஏற்பட்ட சில அதிசயத் தொடர்புகளைக் கல்கி, முன்பு விட்ட குறை வந்து தொட்டதினால் நிகழ்ந்தவைகளாய் எண்ணி, அப்படியே வெளியிட்டுச் சொன்னதுண்டு. ராஜாஜியின் தொடர்பும் அத்தகைய நிகழ்ச்சிகளில் ஒன்று எனலாம். அந்தத் தொடர்பின் பயனாகவும் எத்தனை அரிய நிகழ்ச்சிகள்!

அவற்றில், ''முற்பிறப்பில் செய்த புண்ணியத்தின் பயனாகும் இந்தப் புனித யாத்திரை'' என்று கல்கி குறிப்பிட்டது ஒன்றாகும். அந்தப் புனித யாத்திரையை அவர் ராஜாஜியின் [illegible]

சைகை ஒன்றின் காரணமாக, கவி தாகூரின் சாந்திநிகேதனுக்குத் தமிழ் நூல்களைப் பரிசளிப்பதற்காக, 1947ல் மேற்கொண்டார். அதன் விவரத்தைப் பின்னால் ஓர் அத்தியாயத்தில் காணலாம். இந்த அத்தியாயத்தில், கீதாஞ்சலிக் கவிஞரை முதன் முதலாகக் கல்கி தரிசித்த விவரத்தை மட்டும் காண்போம்.

அபூர்வமாய் இசைந்ததொரு செயலாய், ராஜாஜியை முதன் முதலாகக் கண்ட அதே திருச்சி நகரில், சுமாராய் அதே காலத்தில் வங்கக் கவிக் கொண்டலையும் பள்ளி மாணக்கன் கிருஷ்ணமூர்த்தி கண்டான்.

ஒரு நாள் மாலை அவன் பள்ளிக்கு வெளியே சென்றபோது கவி ரவீந்திர நாத தாகூர் நகருக்கு வருகை புரியப் போவது பற்றிய விளம்பரம் ஒன்றைப் பார்த்தான். நோபல் பரிசு பெற்று உலகப் புகழ் சூடிய கவிஞர்! மகாத்மா காந்தியே ''குருதேவ்'' என்று வணங்கிய உத்தமர்! அப்பேர்ப்பட்டவர் தன் ஊருக்கு வருகிறார் என்றால்! இளைஞனின் உள்ளத்தில் வியப்பும் ஆவலும் பொங்கி எழுந்தன. ஆனால் அந்த விளம்பரத்தின் அடிப் பாகத்தில் இருந்த ஒரு விவரத்தைப் பார்த்ததும் சோர்ந்தது அவன் மனம். கவிஞரின் உரையைக் கேட்பதற்குக் கட்டணம் உண்டு என்பதே அந்த விவரம்! அதுவும் எவ்வளவு? ஐந்து ரூபாய்! சாந்திநிகேதன் நிதிக்காக அந்தக் கட்டணமாம்!

அந்தக் காலத்தில் ஐந்து ரூபாய் என்பது பண வசதி உள்ளவர்களுக்கே பெரிய தொகை. ஓர் ஏழை மாணவனுக்கோ அசாத்தியமானது. எவ்வளவு அசாத்தியமாயிருந்தாலும், எப்படியாவது அந்த வண்ணக் கவிக் கொண்டலைப் பார்த்துவிட வேண்டும், அந்தக் கொண்டலின் சொற்பொழிவைக் கேட்டுவிட வேண்டும் என்று துடித்தான் இளைஞன். கைச்செலவுக்காகக் கிராமத்திலிருந்து அண்ணா அனுப்பியிருந்த சிறுதொகையில் ஐந்து ரூபாய் மீதம் இருந்தது. இன்னும் பல நாட்களுக்குக் கையில் காசில்லாமல் திண்டாடினாலும் பாதகம் இல்லை என்று எண்ணி, தன் கையிருப்பு முழுவதையும் கொடுத்து ஒரு நுழைவுச் சீட்டை வாங்கிக் கொண்டான். ஓர் ஆங்கிலச் சொலவடையை யொட்டிக் கல்கியே பின்னர் சொன்னது போல், தன்னைத் தானே திருடிக் கொண்டான்!

பல நாட்களுக்கான சுக சௌகரியங்களைத் துறந்து கவி தாகூரைத் தரிசனம் செய்ததைப் பற்றி, சுமார் முப்பது ஆண்டுகளுக்குப் பிறகு கல்கி எழுதினார்:

> ரவீந்திரர் எந்த வழியாக அந்த மண்டபத்தில் பிரவேசித்துப் பிரசங்க மேடைக்குச் செல்வார் என்று விசாரித்துத் தெரிந்து கொண்டு, அந்த வழியை ஒட்டினாற்போல் இருக்க நாற்காலியில் உட்கார்ந்துகொண்டேன்.
>
> நான் ஏமாந்து போகவில்லை. அந்த வழியாகவே சற்று நேரத்துக்கெல்லாம் டாக்டர் டாகூர் முன்னும் பின்னும் உள்ளூர்ப் பிரமுகர்கள் புடைசூழ மேடைக்குச் சென்றார். டாகூர் என் பக்கமாய்ச் சென்றபோது, அவர் உடுத்தியிருந்த வெண்பட்டு வஸ்திரத்தைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொண்டேன்.
>
> (கல்கி தீபாவளி மலர்—1947)

ஆசைக் கண்களுடன் கவிஞரைக் கிருஷ்ணமூர்த்தி கண்டபோது, நீல வானிலே மிதக்கும் வெண்மேகம் ஒன்று, மண்ணிலே உலவ இச்சை கொண்டு இறங்கி வந்தது போல் தோன்றியிருக்கும். செம்பொன் திருமுகம், புரளும் வெண் தாடி, தோள் முதல் பாதம் வரை தொங்கிய வெண்பட்டு அங்கி. அழகிய அந்தக் கவியுருவை வணங்குவதற்காகத்தான் கைகளைக் கூப்பினான் இளைஞன். ஆனால் தன்னையும் அறியாமல் அதைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொண்டான். அப்படி ஒற்றிக் கொள்கையில் அது என்ன மணம்? கற்பூர மணமா? கமலப் பூ மணமா? கவி மணமா, புகழ் மணமா?

சிறு வயதிலிருந்தே எத்தனை எத்தனையோ புத்தகங்களைப் படித்திருந்த கிருஷ்ணமூர்த்தி, தாகூரின் புத்தகம் எதையும் அதுவரையில் படித்ததில்லையாம். தாகூரைப் பற்றிக் கேட்ட புகழே அவர் மீது கொண்ட வியப்புக்கும் ஆவலுக்கும் காரணமாய் இருந்ததாம்:

> பிற்பாடு, டாக்டர் டாகூரின் வெண்பட்டு வஸ்திரத்தைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டதன் பலனாகத்தானோ என்னவோ அவருடைய கவிதைகளைப் படிக்க வேண்டும் என்ற ஆசை எனக்கு உண்டாயிற்று. 'கீதாஞ்சலி', 'கார்டனர்' முதலிய நூல்களையும், 'ஹங்ரி ஸ்டோன்ஸ்' முதலிய சிறுகதைகளையும் படிக்கத் தொடங்கினேன். படிக்கப் படிக்க அவற்றின் மீது மோகமே உண்டாகி விட்டது. டாகூரின் கவிதையிலும் வசனத்திலும் ஒரு தனிப்பட்ட சுகம் காணப்பட்டது. வெண்பட்டைத் தொட்டபோது கரத்துக்கு ஏற்பட்ட சுகம் மனத்துக்கும் ஏற்பட்டது.
>
> (கல்கி தீபாவளி மலர் — 1947)

(தொடரும்)

நேற்றுவரை குழந்தைகளுக்குக் கிட்டாதது

இன்று உங்கள் குழந்தைக்கு—

புதிய டெண்டெர் கேர்

பேபி பவுடர் மென்மையான சருமத்திற்கென சரியாக பஃப்பர் செய்யப்பட்டது



மென்மையான சருமத்திற்கென சரியாக பஃப்பர் செய்யப்பட்டது. உங்கள் அன்பும், ஆதரவும்தான் உங்கள் குழந்தைக்குக் கிட்டும் பெறும் பேறு. எதிலுமே மிகச் சிறந்தவற்றைத்தானே உங்கள் குழந்தைக்குத்தருகிறீர்கள்.

இதோ, உங்கள் அன்புக்கு ஒரு புதிய சின்னம்—டெண்டெர் கேர். புதிய பேபி பவுடர் இன்றைய விஞ்ஞான வளர்ச்சி தரும் பரிசு. நேற்று வரை வந்த பஃப்பர் செய்யப்படாத பவுடர்கள் குழந்தையின் மேனியைப் புண்படுத்தக் கூடும். ஆனால் புதிய டெண்டெர் கேர் சரியாக பஃப்பர் செய்யப் பட்டது. குழந்தையின் சருமம் சிவந்து போய் சில நேரங்களில் லேசாக புண்படுவது கூட உண்டல்லவா? இதெல்லாம் நேராமல் உங்கள் குழந்தையை டெண்டெர் கேர் பாதுகாக்கிறது. அதன் நிகரற்ற வியர்வை உறிஞ்சும் சக்தி உங்கள் குழந்தையை எப்போதும் வசதியாக, மகிழ்ச்சியுடன் இருக்கச் செய்கிறது.

பட்டுப் போன்ற டால்க், மிதமான நறு மணம்—எல்லாமே அதில் கவனமாக சேர்க்கப் பட்டுள்ளன. உங்கள் குழந்தைக்காக. அதை 'டெண்டெர் கேர்' என்று அழைப்பதே அதனால்தானே.



CTC.G.I.TM



இடி இடிக்கிறது; மழை பொழிகிறது!

நாடோடி

"நான் ஒரு பெரிய மனிதன்; என் பெயர் பெரிய மனிதர்கள் வரிசையில் ஒருநாள் கட்டாயம் சேர்க்கப்படும்" என்று நினைத்துக் கொண்டிருந்த எனக்கு, திடீரென்று நேற்று ஓர் ஏமாற்றம் ஏற்பட்டது. உலகத்தின் பெரிய மனிதர்களைப் பற்றிய குறிப்புக்களைக் கொடுக்கும் ஒரு பெரிய புத்தகத்தை நேற்று நான் ஒரு வாசகசாலையில் புரட்டிக் கொண்டிருந்தேன். என்ன அக்கிரமம்! ஒவ்வொரு பெரிய மனிதரைப் பற்றிய குறிப்பின் கடைசியிலும் அவருடைய பொழுது போக்கு (hobby) என்ன என்று குறிப்பிடப்பட்டிருந்தது! மீன் பிடிப்பது, பழைய புத்தகங்களைச் சேகரிப்பது, பழைய கால நாணயங்களைச் சேகரிப்பது, தபால் தலைகள் சேகரிப்பது, பெரிய மனிதர்களின் கையெழுத்துக்களைச் சேகரிப்பது என்று இப்படி ஒவ்வொருவருக்கும் ஒரு பொழுது போக்கு குறிப்பிடப்பட்டிருந்தது!

ஆனால் நானோ இப்படி ஒரு பொழுது போக்கையும் எனக்கு என்று வைத்துக் கொள்ளவில்லையே! என் பெயர் எப்படிப் பெரிய மனிதர்களின் வரிசையில் சேர்க்கப்படும்! கவலையாக இருக்கிறதே!

கட்டுரைகள் எழுதுவதுதான் என் பொழுது போக்கு என்று சொல்லலாமோ என்றால் அதுவும் முடியாது. ஏனெனில் பொழுது போக்கு என்றால் அது ஜீவனத்திற்காகச் செய்யும் வேலையாக இருக்கக் கூடாது என்று ஒரு சட்டம் இருக்கிறது. ஆனால் என் கட்டுரைகளுக்குக் கிடைக்கும் சன்மானத்தைக்கொண்டு நான் ஜீவனம் நடத்த முடியாது என்பது சன்மானம் அனுப்பும் ஆசிரியர்களுக்கே தெரியும். இருந்தும் மாமனாரிடமிருந்தும், இன்னும் மற்ற உறவினர்களிடமிருந்தும் கடன் வாங்குவதைத் தவிர, நான் வேறு ஒரு வழியையும் ஜீவனத்துக்காக வைத்துக் கொள்ளவில்லையாதலால், கட்டுரைகள் எழுதுவதை என் "பிழைப்பு" என்றுதான் கொள்வார்கள், "பொழுதுபோக்கு" என்று எண்ண மாட்டார்கள்.


அப்படியானால் எனக்கு என்னதான் பொழுது போக்கு?


நான் முன்னொரு சமயம் வேலை செய்த பத்திரிகாலயத்தில் ('வேலை செய்த' என்று சொல்வது தவறு; 'சம்பளம் வாங்கின' என்று சொல்வது தான் சரி. அது எனக்கும் தெரியும், அந்த நல்ல பத்திரிகாசிரியருக்கும் தெரியும்!) காரியாலய நேரத்திலேயே பக்கத்துக் கொட்டகையில் நடக்கும் ஆங்கிலப் படங்களைப் பார்க்கச் செல்வேனே, அதை என் பொழுதுபோக்கு என்று சொல்ல முடியுமா? முடியாது. ஏனெனில் அந்தப் படங்களைப் பற்றிய விமரிசனத்தை நான் சில சமயங்களில் அந்தப் பத்திரிகையில் எழுதுவேன். ஆகவே அதை வேலை என்று












ரோஷமான ஞாபக சக்தி!

ஞாபக மறதிக்காகச் சிகிச்சை பெறச் சென்ற அந்தக் குத்துச் சண்டைக்காரர் மனத் தத்துவ நிபுணரின் சிகிச்சை நிலையத்தை விட்டு வெளியேறினார். அப்போது ஒரு மனிதர் வந்து அந்தக் குத்துச் சண்டைக்காரரின் கையைக் குலுக்கினார்!" "ஹல்லோ ஜாக்!" என்றார். உடனே குத்துச் சண்டைக்காரர், "நீங்கள் சொல்ல வேண்டாம்! எனக்கே ஞாபகம் வந்துவிட்டது. உங்களோடு டோல்டோவில் 1931ம் வருஷம் குத்துச் சண்டையிட்டேன்! உங்கள் நிறை 156½ பவுண்ட். உங்கள் இடது கண்ணில் அடிபட்டுவிட்டது! நீங்கள் பச்சை உடை அணிந்திருந்தீர்கள்! வலது சட்டைப் பையில் ஒருபொத்தல் இருந்தது!" என்று விளாசித் தள்ளினார்!

"ஜாக்!" என்று அந்த மனிதர் கதறினார்: "என்னை நினைவில்லையா? நான் உன் தந்தை சாம்!"



சொல்ல வேண்டுமேயொழிய, பொழுது போக்கு என்று சொல்ல முடியாது.

மாலை வேளைகளில் நாடகங்களுக்குச் செல்வது எனக்கு மிகவும் பிடிக்கும். ஆனல் நாடகங்களைப் பற்றியும் எப்பொழுதாவது பத்திரிகையில் எழுத வேண்டி வருமாதலால், அதையும் என் பொழுதுபோக்குஎன்று சொல்லமுடியாது.

அப்படியானல் என் பொழுதுபோக்குத்தான் என்ன?

ஆங்கிலத்தில் hobby என்று அழைக்கப்படும் இந்தப் பொழுதுபோக்குக்கு என்னதான் அர்த்தம் என்று பழைய அகராதிகளைப் புரட்டிப் பார்க்க விரும்பினேன். நல்லவேளையாக அங்கு இரண்டு கடிஅகராதிகள், நூறு வருடங்களுக்கு முன்னர் அச்சடிக்கப்பட்டவை, கிடைத்தன.

hobby என்ருல் 'குட்டிக்குதிரை' என்று அர்த்தம் போடப்பட்டிருந்ததைப் பார்த்ததும் நான் குட்டிக் குதிரையைப் போல் துள்ளிக் குதித்தேன். பிறகு மேலே படித்த பிறகு தான் அந்த வார்த்தைக்கு இன்னேர் அர்த்தமும் இருக்கிறது என்று தெரிந்தது. "பொம்மைக் குதிரையின் மீது உட்கார்ந்து மேலும் கீழும் ஆடும்போது என்ன ஆனந்தம் உண்டாகுமோ, அதைப் போல் ஆனந்தம் அளிக்கும் பிடித்த விஷயம் அல்லது வேலை" என்று இரண்டாவது அர்த்தம் இருக்கது.

சரி, அடுத்த அகராதி என்ன சொல்லுகிறது என்று அதைப் பார்த்தேன். அதிலும் "குட்டிக்குதிரை" என்று அர்த்தம் கொடுக்கப் பட்டிருந்தது. ஆனல் இந்தத் தடவை நான் குட்டிக் குதிரையைப் போலத் துள்ளிக் குதிக்கவில்லை. மேலே என்ன அர்த்தம் கொடுத்திருக்கிறது என்று பார்த்தேன். "தம் எண்ணத்திலோ, பேச்சிலோ, காரியத்திலோ அடிக்கடி அளவுக்கு மீறித் தலைதூக்கும் விஷயம்" என்று கொடுக்கப்பட்டிருந்தது.

ஆக, அகராதிப்படியும் எனக்கு ஒருபொழுது போக்கு இருப்பதாகச் சொல்ல முடியாது. ஆனல் என் மனைவி சரசு பொழுதுபோக்கு என்று ஒரு காரியம் வைத்துக் கொண்டிருக்கிருள். பொழுதுபோக்கு வைத்துக் கொண்டிருப்பதற்காக அவளைப் பெரிய மனிதர்களின் வரிசையில் சேர்ப்பார்களானல், என்னை அவளுடைய கணவன் என்று குறிப்பிடும்படி அப்போதைக்கு இப்போதே சொல்லி வைக்கிறேன்.


கல்யாணத்துக்கு நின்ற பெண்ணுக இருந்த சமயத்திலிருந்தே என் மனைவி சரசு தனக்கென்று பொழுதுபோக்குகள் வைத்துக் கொண்டிருந்திருக்கிருள்.

இந்தக் காலத்துப் பெண்களுக்கு, 'கல்யாணத்துக்கு நிற்கும் பெண்கள்' யார் என்பதே தெரியாது. இப்பொழுதெல்லாம் எங்கே பெண்கள் கல்யாணத்துக்கு நிற்கிருர்கள்? இடம் கிடைக்காமல் பஸ்ஸில்தான் நிற்கிருர்கள். அதுதான் படிப்பு முடிந்ததும் உடனே வேலைக்குப் போய் விடுகிருளே!



யாரோ? இவர் யாரோ?

பஸ்ஸில் பிரயாணம் செய்து கொண்டிருந்தேன். "சௌக்கியமா?" என்று கேட்டபடி எதிர்ச் சீட்டில் அமர்ந்தார் ஒருவர். என்னுல் அவரை அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை... அவரோ விடுவிடுவென்று என்னைப் பற்றிய மற்ற விவரங்களையும் கேட்க ஆரம்பித்தார். நம்மைப் பற்றி இவ்வளவு தெரிந்து வைத்திருக்கும் ஒருவரை இன்னுர் என்று தெரியாமல் இருக்கிறேமே என்று எனக்கு என்னவோ போல் இருந்தது. 'இவர் யார்?



என்று எப்படித் தெரிந்து கொள்வது என்று யோசித்துப் பார்த்ததில் ஒரு வழி புலப்பட்டது. அவர் தற்சமயம் எங்கே வசிக்கிருர் என்பதைத் தெரிந்து கொண்டால் ஒருவாறு ஊகித்துக் கொள்ளலாம் என்று எண்ணியபடியே, அவரைப் பார்த்து, "இப்போ எங்கே ஜாகை?" என்று கேட்டேன். அதற்கு அவர், "இன்னும் அதே இடத்திலேதான் இருந்துண்டிருக்கேன்" என்ருரே பார்க்கலாம்! என் முகத்தில் ஏதோ-ஒன்று வழிந்தது.

—கே. சீனிவாசன்



ஆனால் முன்காலத்தில் அப்படியில்லே. படிப்பு முடிந்ததும், கல்யாணம் ஆகும்வரை கல்யாணத்துக்கு நிற்க வேண்டும். அந்தப் பொழுதைக் கழிக்க வேண்டுமே! அதற்காகத்தான் நிறைய பொழுதுபோக்கில் ஈடுபட்டார்கள்.

ஆனால் இந்தப் பொழுதுபோக்கு வேலைகள் அவர்களுடைய கணவன்மார்கள் அவர்கள் கையைப் பிடிக்கும் வரையில்தான் நடக்கும்.

வாழ்க்கை முழுவதும் தொடர்ந்து செய்யாமல் இப்படி நடுவில் நிறுத்துவதை அகராதிக்காரர்கள் பொழுதுபோக்கு என்று ஒப்புக்கொள்ள மாட்டார்கள். ஆனால் நல்ல வேலையாகச் சரசு தனக்கென்று ஒருபொழுதுபோக்கை வைத்துக் கொண்டிருக்கிறாள். அது எங்கள் தாம்பத்திய வாழ்க்கை நீடிக்கும் வரையில் நிச்சயமாகத் தொடர்ந்து நடக்கும்! அது என்ன தெரியுமா? என்னே வீண் சண்டைக்கு இழுப்பதுதான் அந்தப் பொழுதுபோக்கு!

காலேயில் நான் சாய்வு நாற்காலியில் சாய்ந்துகொண்டு பத்திரிகை படிக்க ஆரம்பித்தால் போதும், "என்ன, உங்களேத்தானே! இப்படியே பேசாமல் பத்திரிகை படித்துக் கொண்டிருந்தால், என்ன ஆகிறது!" என்று சரசு தன் பல்லவியை ஆரம்பிப்பாள்.

பத்து வருடங்களுக்கு முன்னர் ஆரம்பித்த இந்தப் பல்லவி இன்னும் நடந்து கொண்டிருக்கிறது. "ஏன்னு, உங்களேத்தானே! இப்படியே பேசாமல் படித்துக் கொண்டிருந்தால் என்ன ஆகிறது: பெண்ணுக்கு ஒரு நல்ல வரனைப் பார்க்க வேண்டாமா!" என்று நான் முதலில் இந்தப் பல்லவி ஆரம்பித்தது. பெண்ணுக்கு வரனும் பார்த்து, கல்யாணமும் ஆகி, நான் தாத்தாவும் ஆகி விட்டேன். இருந்தும் பல்லவி முன்மாதிரி இன்னும் மாறாமல் இருக்கிறது. பின்ப்ருதி மாத்திரம் தினம் மாறுகிறது. அன்று, "பெண்ணுக்கு வரன் பார்க்க வேண்டாமா?" என்று கேட்டவள், இப்பொழுது, "கடைக்குப் போய் ரேஷன் அரிசி வாங்கிக் கொண்டு வர வேண்டாமா?" என்று கேட்கிறாள்.

இதில் பொழுது போவதற்கு என்ன இருக்கிறது என்று விஷயம் அறியாதவர்கள் தான் கேட்பார்கள். ஆனால் தினம் சரசு இந்த மகா வாக்கியத்தைக் கொண்டு தான் தினம் அரை மணி நேரம் தன் பொழுதைப் போக்குகிறாள்.

நான் பழைய காலத்தைச் சேர்ந்தவன். பெண்களுக்குத் துளி இடம் கொடுத்தால் முழு இடத்தையும் பிடுங்கிக் கொண்டு விடுவார்கள் என்கிற நம்பிக்கையை உடையவன். ஆகவே அவள் கேட்கும் கேள்விக்கு நான் கொடுக்கும் பதில் ஒரு சீறலாகத்தான் இருக்கும். அதற்குப் பிறகு இடி இடிக்கும். கடைசியில் மழை பெய்யும்; ஆம்; சரசுவின் கண்களிலிருந்துதான் மழை பெய்யும். என்ன தான் நவநாகரிகப் பெண்களாக இருந்தாலும், இடி இடிக்கும் விஷயத்திலும் மழை பெய்யும் விஷயத்திலும் எல்லாப் பெண்களும் ஒன்றுதான் என்று நீங்கள் அனுபவ மூலமாகத் தெரிந்து கொண்டிருப்பீர்கள்.

ஆகவே, பொழுதுபோக்கு இல்லே என்பதற்காக என்னேப் பெரிய மனிதர் வரிசையில் சேர்க்கா விட்டாலும், என் மனேவியையாவது சேர்க்கும்படி கேட்டுக் கொள்கிறேன்!



அறுவைக்கு அறுவை!

கிரிக்கெட் ஆட்டத்தின்போது சிறுவனுக்கு அந்தப் பெரியவர், "எந்தப் பந்தை எப்படி அடிப்பது என்று ஒவ்வொரு நிமிஷமும் குறுக்கிட்டுச் சொல்லிக் கொண்டிருந்தார்!

ஆட்டம் முடிந்ததும் அந்தச் சிறுவன் பெரியவரிடம், "மாமா! உங்கள் உதவிக்கு நன்றி! நீங்கள் எங்கே வேலை செய்கிறீர்கள்? உங்கள் பெயர் என்ன?" என்று வினவினான்.

"எதற்குக் கேட்கிறாய்?" என்றார் அவர்.

"இல்லே! நான் நாளே உங்கள் முன்னால் வந்து நிற்கப் போகிறேன்! உங்கள் காரியங்களை நீங்கள் எப்படிக் கவனித்துக் கொள்ள வேண்டும் என்று அட்வைஸ் தரப் போகிறேன்!"



"சத்தம் போடாதீங்க. ஆசாமி எழுந்து விடப் போறான்!"




சோர்வா?
பலவீனமா?
சாப்பிடுங்கள்
வாட்டர்பரீஸ் விட்டமின் டானிக்—
விட்டமின்களும், இரும்புச் சத்தும், தாதுப்பொருட்களும்
அடங்கிய பரிபூரண டானிக்
சில டானிக்குகளில் விட்டமின்கள் மட்டுமே உள்ளன. சிலவற்றில் தாதுச் சத்துக்களோ அல்லது இரும்புச் சத்தோதான் உள்ளன. வாட்டர்பரீஸ் விட்டமின் டானிக் பரிபூரணமானது. அதில் விட்டமின்களும், இரும்புச் சத்தும், தாதுச்சத்துக்களும் சமசீராக இணைந்துள்ளன—
தினமும் உற்சாகமும், சக்தியும், வலிமையும் கொடுக்கிறது.
விட்டமின்கள் நிரம்பியது
Waterbury's
VITAMIN
Tonic
வாட்டர்பரீஸ்
விட்டமின் டானிக்
சுறுசுறுப்பான ஆரோக்கியத்திற்கு
பரிபூரணமான டானிக்
Grant 9 TH

உங்களுக்காக பிலிப்ஸ் வழங்கும் இந்த அபூர்வமான மியூஸிக் ஸிஸ்டம் பல அரிய சிறப்புகள் கொண்டது...



OBM 2444 TM

மெயின்ஸ்- பாட்டரி ஸிஸ்டம் ஜீ.எ:ப் 533



இந்த பிலிப்ஸ் ஜீ.எ:ப் 533 செய்து காட்டுவதை வேறெந்த ரெகார்டு பிளேயரும் செய்யமுடியாது.


ஒரு கோஷ்டி இசைத்தட்டு மிகப் பிரமாதமாக இருக்கும்; [illegible] கூடத்தான். இது ஸ்டீரியோ சாக்கெட் மற்றும் [illegible] கொண்டது. இதை ஸ்டீரியோ ரேடியோவுடன் இணைத்துப் [illegible], என்ன ஆச்சரியம்! [illegible] தயார்.



ஸ்டீரியோவாகவும் [illegible]

[illegible] டேப்-ரெகார்டர் செய்யவும், புதிய [illegible] திருப்பிக் கேட்கவும் [illegible]. ரேடியோ, [illegible]!

மெயின்ஸில் இயக்குங்கள்; அல்லது பாட்டரிகளில். மின்விசை நின்று விட்டால், இது தானாகவே பாட்டரிகளில் இயங்குகிறது.



இது எப்பொழுதும் ஒரு சீரான வேகத்தில் இயங்குகிறது என்பதை நம்பலாம். இதை உறுதிப்படுத்து சிறந்த விசேஷ 'எலெக்ட்ரானிக் ஸ்பீட் 'கவர்னர்'

இசைத்தட்டின் ஒலி முடிந்ததும், இது தானாகவே நின்றுவிடுகிறது. இது மட்டுமா? இதில் வால்யூம் மற்றும் தொனிக் கட்டுப்பாடுகளும், வெவ்வேறு 3-ஸ்பீட்களும் உள்ளன.

இதை வீட்டிலும், வெளியிலும் இயக்கலாம். (இன்பமாகப் பொழுது போக்க, வசதியாக வெளியில் எதேனும் செல்லலாம் என்பதை எண்ணிப் பாருங்கள்!)

இதன் அழகிய தோற்றமே உங்களைக் கவர்ந்துவிடும்! மரம், டெரிலின்டெரீன் மற்றும் அலங்கார அலுமினியத்தில் அழகான அமைப்பு கொண்டது.

இத்தனை சிறப்புகளும் கொண்ட பிலிப்ஸ் மெயின்ஸ்-பாட்டரி ஸிஸ்டம் ஜீ.எ:ப் 533–ஐ, இவ்வளவு குறைந்த விலையில், பிலிப்ஸ் தொழில் நுட்பத் திறன் மட்டுமே உங்களுக்கு வழங்க முடியும்.

இன்றே உங்கள் பிலிப்ஸ் வியாபாரியைக் காண்க.


பிலிப்ஸ்

பேசும் படிமங்கள்

ஏராளமான ஸ்டாம்புகள் சேகரித்து அவற்றைப் பல விதமாகவும் வகைப்படுத்தி உலகப் புகழை பெற்றிருப்பவர் சுபலக்ஷ்மி சுப்பிரமணியம். சுப்ரமணியம் தம்பதிக்கு மற்றோர் ஆர்வமும் உண்டு. அது அபூர்வமான படிமங்களைச் சேகரிப்பது தான். சேகரித்து வைப்பதுடன் நின்றுவிடாமல் அவை பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டு ஒவ்வொரு படிமம் பற்றியும் ஒரு சிறு கட்டுரை தயாரிக்கிறார்கள். இக்கட்டுரையைப் படிமத்தின் படத்தோடு அச்சிட்டு அபூர்வப் படிமங்கள் பற்றி அறிவதில் ஆசையுள்ளவர்களுக்குத் தபாலில் அனுப்பி வைக்கிறார்கள்!

நமது காரியாலயத்துக்கு வந்து சேர்ந்த சில புகைப்படங்களைக் குறிப்புகளுடன் இங்கு வெளியிடுகிறோம்.

(1) ராமர் — ஆசன மூர்த்திகள். அமர்ந்திருக்கும் பாணியில் ராமர் படிவங்கள் அபூர்வம். வசிஷ்ட ராமாயணம் யோக ராமர்பற்றிப் பேசுகிறது. தத்துவார்த்தமான விஷயங்களை அவர் தமது பட்டாபிஷேகத்தின் போது வசிஷ்டர் உள்ளிட்ட முனிவர்களுக்கு உபதேசித்தார்.



முதல் படிமம் பத்மாசனத்தில் உபதேச முத்திரைக் கரத்துடன் காணப்படுகிறது. இவர் யோக ராமர். இரண்டாவதில் கரம் 'உன்னை நீயே அறிந்து கொள்' என்ற பாவத்தில் நெஞ்சைத் தொட்டுக் காட்டுகிறது. இது ஆத்மராமர். மூன்றாவது வீராசனத்தில் வியாக்யான முத்திரையுடன் உள்ளது. இது பட்டாபிராமர்.

2. மிக அழகான சாஸ்தா விக்ரகம் விஜயநகர காலத்தியது. 13—14ம் நூற்றாண்டைச் சேர்ந்தது.

3. சங்கு சக்கரம் இருந்தாலும் இது பார்வதி [illegible]. நாராயண சகோதரி என்பதால் சங்கு சக்கரத்துடன் நாராயணியாகத் தெரிகிறாள் இங்கே. இடக்கரம் கொடுக்கிறது (வரம்) வலக்கரம் அபயமளிக்கிறது.


4. காளிங்க நர்த்தனம் [illegible] [illegible] [illegible]. இது [illegible] நிலை நமக்கு வரவில்லையா?







நாங்கள் காட்டும் அத்தாட்சி இதோ:



இதோ நீங்கள் காட்டும் அத்தாட்சி:



ஸிக்னல் ஃப்ளூரைடு ஒன்றுதான் பற் சிதைவையும் வாய் நாற்றத்தையும் தடுத்துநிறுத்திக் காட்டுகிறது

ஒப்பற்ற பல்சுத்திகரிப்பு மூலப் பொருளின் அடிப்படையிலே.

பற்சிதைவை நிறுத்துகிறது ஸிக்னலில் உள்ள ஃப்ளூரைடு

ஜெர்மனியிலே பல்டாக்டர்கள் கிக்கல், ஸ்டோல்டே...400 குழந்தைகளைக் கொண்டு பரிசோதனைகள் நடத்தி நிரூபித்தனர்: பற்சிதைவை 33 சத விகிதம் குறைத்தது ஸிக்னல் ஃப்ளூரைடு (ஆதாரம்: DAS DEUTSCHE ZAHNARZTEBLATT, 1968, 9, 445 460). எப்படி நிரூபித்தது ஸிக்னலின் ஃப்ளூரைடு? பல்எனுமலோடு அது ஒருங்கிணைகிறது: பற்கள் அரித்துப் போகவும், முடிவில் சிதைவுபடவும் முக்கிய காரணமான அமிலத் தாக்குதலை வலுவாக எதிர்த்து நிற்கிறது. ஸிக்னல் தேய்க்கும் சிறுவர்கள் பல்வலி என்றால் இன்னதென்றே அறியார். உங்கள் குடும்பத்தினருக்கும் இதுவன்றோ நற்காப்பு: ஸிக்னல் சிகிச்சையே முற்காப்பு.

வாய்நாற்றத்தை நிறுத்துகிறது ஸிக்னல் உள்ள எஸ்-14


அமெரிக்காவிலே டாக்டர் ஹாவர்டு E. விண்டு மருத்துவப் பரிசோதனைகள் நடத்தி நிரூபித்தார்: துலக்கிய 15 நிமிடங்களில் வாய்நாற்றக் கிருமிகளிலே 95 சத விகிதத்தை ஒழித்துக் கட்டியது ஸிக்னலின் எஸ்-14. 10 மணி நேரம் ஆனபின்னரும் வாய்நாற்றம் 75 சத விகிதம் குறைந்திருந்தது (ஆதாரம்: U.S.A., கார்த் வெஸ்டர்ன் யூனிவர்ஸிட்டி அறிக்கை 23 அக் 1968)

ஸிக்னலுக்கே உரிய சுத்திகரிப்பு மூலப் பொருளால் பற்களுக்கு மருத்துவப் பரிசுத்தம்

ஸிக்னலின் ஒப்பிலா மூலப் பொருளான அலுமினியம் டிரைஹைட்ரேட், பல் டாக்டரே துலக்கித் தந்தது போல தூய்மை அளிக்கிறது. பல் எனுமலைப் பாதிக்காமலே (ஆதாரம்: கிளார்ச் சிவிடு 7 கவ 1969, வெளியிட்டோர் U.R. லெபாரட்டரீஸ், நல்வொர்த், U.K.) ஒப்பில்லாச் சுத்திகரிப்பு மூலப் பொருளிலே ஃப்ளூரைடு, எஸ்-14 – இம் மூன்றிலும் இணையிடம்; ஸிக்னல் ஒன்றுதான் இன்னொரு பற்பசை இவ்வளவு செய்யாது.


அத்தாட்சி காட்டுவது

ஸிக்னல் ஃப்ளூரைடு ஒன்றே–கேளுங்களேன் பல் டாக்டரை.



லின்டாஸ்-SGF 63-140 TM

மடியில் கனம் வழியில் பயம்!



வ.சா.நாகராஜன்

பம்பாயிலிருந்து வந்த மாப்பிள்ளைக்கு மத்தியான விருந்து பிரமாதம். பாயசம், வடை, இன்னும் சித்திரான்னம்....

ஒரு பிடி பிடித்த மாப்பிள்ளை, சாப்பாட்டின் நடுவில் "இப்போதெல்லாம் பம்பாயில் அரிசி அவ்வளவாகக் கிடைக்கவில்லை. கோதுமைதான். காலையிலும் கோதுமை, மத்தியானமும் கோதுமை, ராத்திரியும் அப்படியே! ஆதலால் இப்போது அரிசியே ஒத்துக்கொள்ளாமல் போய்விட்டது. சப்பாத்தி என்றால் எத்தனை சாப்பிட்டாலும் ஒத்துக்கொள்கிறது..." என்று சொல்லி வைத்தான்.

'ஏண்டாப்பா அப்படிச் சொன்னோம்' என்பதைப் பிற்பகல்தான் அவன் உணர்ந்தான். மாலை டிபனுக்கு அவன் அறைக்குக் கொண்டு வந்து வைக்கப்பட்டது ஓர் அடுக்குச் சப்பாத்தி, உருளைக்கிழங்கு — வெங்காயம்!

மத்தியானச் சாப்பாடே இன்னமும் வயிற்றில் இருக்கது. போட்டதை எறிந்து விடக் கூடாதே என்று ஒரு வழியாகச் சப்பாத்திகளைச் சாப்பிட்டு வைத்தவன் தட்டில் மேலும் இரு சப்பாத்திகள் விழுவே அமர்ந்து விட்டான்.

இனிமேல் ஒரு விள்ளல்கூட உள்ளே போகாது என்ற நிலையில் யாருக்கும் தெரியாமல் கொல்லையில் எறிந்துவிடுவது என்று தீர்மானித்துக் கொண்டு யாரும் பார்க்காதபோது மடியில் இரு சப்பாத்திகளையும் கட்டிக் கொண்டான். கொல்லை செய்துகொண்டிருந்த




கூந்தல் வளர்ச்சிக்கு ஆசைப்பட்டுக் கண்ட தைலங்களைச் செலவு செய்து வாங்காதீர்கள்! பின்னால் தலைக்குச் சவுரியே வாங்கும்படியாகும்.

★

'துரதிர்ஷ்டசாலி' என்று தன்னைச் சதா நொந்துகொள்ளும் பிரகிருதி ஒரு நாள் சொன்னான்: தெருவில் எனக்குப் பத்து ரூபாய் நோட்டு கிடந்து கிடைத்தது. நான் துரதிர்ஷ்டக்காரன். வேறொருவனாக இருந்திருந்தால் நூறு ரூபாய் கிடைத்திருக்கும்!

ஓர் ஆண் மகனுடன் தகராறு வந்தால் தவறு உன்னதானாலும் கூசாமல் அவனிடம் மன்னிப்புக் கேள்.

ஒரு பெண்மணியிடம் தர்க்கம் என்றால் உன் கட்சி சரி என்று பட்டால்கூட அவளிடம் மன்னிப்புக் கேட்டு விடு!



வேலைக்காரி அவனேயே பார்க்கவே காரியம் நிறைவேருமல் அறைக்குத் திரும்பினுன்.

வெளியே கொண்டு போய் விட்டெறிந்தால் போயிற்று என்று வந்தவனேக் கும்பகோணத் துத் தெருவில் உள்ள அத்தனே கழுகுக் கண் களும் நோக்கின. எனவே, தெரு முனேக்கு வந்தான். டவுன் பஸ் ஒன்று வந்தது. ஊரை விட்டு ஒதுக்குப்புறம் போய்விடலாம் என்று அதில் ஏறிக் கொண்டான்.

''அடேடே.... மாப்பிள்ளேயா? என்ன... உப்பிலியப்பன் கோவிலா? நான்கூடத்தான். அந்தக் கோயிலே இதற்கு முன் பார்த்திருக் கிறேளோ? தென் திருப்பதி என்று சொல் வார்கள்....'' — வக்கீல் மாமனுரின் குமாஸ்தா.

தரிசனம் முடிந்து, வெளியில் வந்து, அவனேப் பத்திரமாக வீடு சேர்க்கும்வரை குமாஸ்தா அவனேத் தனியாக விடவில்லே.

மாமியார் காப்பித் தம்ளரைக் கொண்டு வந்து வைத்துவிட்டு ''இன்னெரு சப்பாத்தி வேணுமானுல் கொண்டு வரட்டுமான்னு கேளுடி'' என்று பெண்ணேக் கேட்கிற மாதிரி கேட்டாள்.

''ஐயையோ!'' என அலறினுன்.

மடியிலுள்ள சப்பாத்தி மீண்டும் ஒருமுறை முயற்சி செய்யத் தூண்டியது. சட்டையைப் போட்டுக் கொண்டான். தாழ்வாரத்து ஈஸிசேரில் மாமனுர் மாத்திரம் உட்கார்ந்து கொண்டிருந்தார். ''கொஞ்சம் இப்படிக் கடைத் தெரு வரை போய்விட்டு வருகி றேன்'' என்று வாசல் பக்கம் காலடி எடுத்து வைத்தான்.

''கடைத் தெருவுக்கா? நானும் வரேனே! வெற்றிலே வாங்க வேண்டும்'' என்று ஒரே பாய்ச்சலில் வந்து அவனுடு சேர்ந்து கொண்டு கொண்டு விட்டார் மாமனுர்.

கடைத் தெருவெல்லாம் கூடவே சுற்றிவிட்டு வெங்கடா லாட்ஜுக்குள் இழுத்துச் சென்ருர்.

சர்வர் வந்தான். ''இவர் என் மாப்பிள்ளே, பம்பாய். சப்பாத்தி கொண்டு வா'' என்ருர்.

''எனக்குச் சப்பாத்தி வேண்டாம்.. வேண் டாம்'' என்று ராமன் அலறினுன்.

''சாப்பிட்டுப் பாருங்களேன். மத்தியானம் நம்ம வீட்டிலேயும் பண்ணினுளே, வரட்டி மாதிரி! நீ கொண்டாப்பா.''

சப்பாத்தி வந்தது. எப்படியோ விழுங்கி வைத்தான்.

மறுபடியும் வீடு. வந்தவுடனே சாப்பிடக் கூப்பிட்டார்கள். மடியிலேயே சப்பாத்தி உறங்கியது!

இரவு... சீதா வந்தாள். அவனுக்கோ ஒரே கோபம். ''சீதா இது என்ன தெரி யுமா?'' என்று பிற்பகலிலிருந்து மடியிலிருந்த சப்பாத்தியையும் உருளேக் கிழங்கையும் பிய்த் தெடுத்தான். தண்ணீர்ப் பகுதி வேஷ்டியில் ஒட்டிக்கொள்ள, கோதுமைப் பகுதி மாத்திரம் பேப்பர் மாதிரி வந்தது. அதனுடு உருளேக் கிழங்கும் வெங்காயமும் ஒட்டிக் கொண்டு ஒன்ருக ஒரு தனிக் கலவையாக ஆகியிருந்தன.

''என்ன இது...?'' என்று கேட்டாள் சீதா.

''என்னவா? நீயே தின்று பாரு...''

சீதா ஒரு விள்ளலே விண்டு வாய்க்குள் போட் டுக்கொண்டாள். ''என்ன இது?... கவிங் கமா? ரொம்ப ஜோரா இருக்கே... என் அம்மாவுக்குச் கவிங்கம் பிடிக்கும்னு உங்க ளுக்கு எப்படித் தெரியும்? இதோ இருங்கள், இப்பவே கொடுத்துவிட்டு வருகிறேன்'' என்று அவன் பதிலுக்குக் கூடக் காத்திராமல் ஓடினுள்.

மறுநாள்...

''மாப்பிள்ளே... நேற்று ராத்திரி சீதாவிடம் கொடுத்தனுப்பிச்சேளாமே, கவிங்கம்... ராத் திரி முழுக்க இவள் வாயிலே வைத்துக் குழப் பிக்கொண்டிருந்தாள். என்னத்தைச் சொல் கிறது போங்கோ! ஆயிரம் இருந்தாலும் பம் பாய் பம்பாய்தான். அங்கே பண்ணுகிற பண்டங்களும் ஒஸ்திதான். அடுத்த தடவை வரும்போது பெட்டி நிறைய வாங்கி வாங்கோ...''

''கண்ணேக் கட்டிப் போட்டால் கூட நான் என் நாவலே 'டைப்' அடிப்பேன்!''

''ஓ! அப்படியா? கையைக் கட்டிப் போடுகிறேன். என்ன செய்கிறும் பார்க்கலாம்!''

★

மானேஜர்: இந்தக் கம்பெனியில் எல்லாம் மின்சாரத்தினுல் இயங்குகிறது!

சிப்பந்தி: சம்பளத்தைப் பார்த்து என் மனைவி 'ஷாக்' அடிக்கிறது என்கிருள்!

''என்ன பயங்கரம், என்ன வேதனே! ஒரு பிரபல சங்கீத வித்வானுக்குத் தம்முடைய சாரீரம் போய்விட்டது என்பதை அவர் உணரும்போது!''

''அதைவிடப் பயங்கரம், சாரீரம் போய் விட்டதை அவர் உணராதிருந்தால்!''



தமிழ்ப் படத்துக்குத் தங்கப் பதக்கமா?

இந்த 'வறுமை' லேபின் நம்ப பாரத நாட்டைப் பற்றி வெளிநாட்டவர்கள் ஒரு மாதிரியாகப் பார்க்கத்தான் உதவிக்கிட்டு வருது. ஒரு கடவை நான் ஜெர்மனி நாட்டிலே இருந்தபோது ஒரு கடை வாசலிலே, ஓர் ஏழை இந்தியச் சிறுவன் ஒரு பாம்பை அப்படியே பிடிச்சுக் கடிச்சுத் தின்கிறதுபோலே ஒரு படம் ஒட்டியிருந்ததைப் பார்த்தேன். எனக்கு ரொம்ப வருத்தமாகவும் இருந்தது. கோபமாகவும் இருந்தது. ''எங்க நாட்டைப் பற்றி எப்படியெல்லாமோ நினைக்கத் தூண்டக் கூடிய படத்தை யெல்லாம் நீங்க இப்படி ஒட்டியிருக்கீங்களே!'' என்று அந்தக் கடைக்காரர்கிட்டே சண்டைக்குக்கூடப் போனேன். ''அது எங்க தயாரிப்பு இல்லே. ஓர் அமெரிக்க போஸ்டர்'' அப்படின்னு பதில் வந்தது. எப்படி இருக்கு?

எப்பவோ, யாரோ 'ரியலிஸம், ரியலிஸம்' என்று இந்தியாவோட ஏழ்மையைப் படம் எடுத்துக் காண்பிக்கப் போக அது இப்போ ஃபாஷனாகவே ஆகிப்போச்சு!

நான் ஸின்ஸியராச் சொல்றேன். அவார்டாவது, இவார்டாவது? நமக்கு உண்மையான 'அவார்டு' கொடுக்கிறவங்க படம் பார்க்கிற பொதுமக்கள்.

'உனக்கு இந்தக் கடவை, அவனுக்கு அடுத்த வருஷம், அந்த ஆளுக்கு அதுக்கு அடுத்த வருஷம்'னு பிளான் போட்டு 'கீசன்' பண்றவங்க கிட்டேயிருந்து நியாயமான 'அவார்டை' எதிர்பார்க்கிறதே தப்பு, இல்லையா?



திரு சிவாஜி கணேசன்

எங்கோ பத்துப் பேர் 'கூடி', பரிசிலனேக்கு வந்த பல படங்களைப் பார்க்காமலேயே ஏதோ ஒரு முடிவு எடுத்து 'இதுக்குத்தான் பரிசு' என்கிறபோது நமக்கு வேதனையாகவும் இருக்கு; நம்ப பொறுமைக்குச் சோதனையாகவும் இருக்கு!

வறுமையும், சோரம் போறதும்தான் 'அவார்டு' கொடுக்க முக்கியமான தேவைன்னு அவங்க நினைக்கிறாங்களா? தொடர்ந்து பரிசு வாங்கின மூன்று படங்களிலேயும் இந்த அம்சங்கள் இருக்கிறதாலே அப்படியும் இருக்குமோன்னு நான் ஸந்தேகிக்கிறேன்!


நம்ப வாழ்க்கையிலே வேறே கோணங்களே இல்லையா? அவைகளை நாம் திரும்படக் கையாளவில்லையா? இதையெல்லாம் அந்தப் பரிசுக் கமிட்டி கவனிக்கலேன்னே தெரியலியே!





திரு கே. எஸ். கோபால கிருஷ்ணன்


திரு சண்முகம்



''ஹவர் டைம் செல்லனும்னு கல் உடைப்பதில் அதைச் செலவழிக்கப்படாதா?''

புடவைக் கடைக்காரர்:
நீங்க கொடுக்க வேண்டிய பணம் ரொம்ப நாட்களாகப் பாக்கி நிக்கறதே...!

'உட்கார்ந்து சொல்லுங்க!'



திருமதி ஷீலா

தமிழ்த் திரைப்படத்துக்கு ஜனாதிபதியின் 'அவார்டு' வாங்குகிற விஷயம் அவ்வளவு ஒண்ணும் பிரமாதமான விஷயம் இல்லே. ரொம்பச் சாதாரண சமாசாரம். ஆனால் ஒரு சிக்கல். அந்தக் கமிட்டியிலே தெரிஞ்சவங்க அல்லது உறவுக்காரங்க இருக்கணும். அட்லீஸ்ட் பணமாவது நிறைய இருக்கணும். இதை நான் ஒன்றும் புதுசாச் சொல்கிறதாக நினைத்துவிட வேண்டாம். இந்தப் பேச்சு இப்போ ரொம்ப சகஜமா திரையுலக வட்டாரத்திலே அடிபடறதுதான்!

ரியலிஸம், அதாவது யதார்த்தத் தன்மை, பிராந்தியத்துக்குப் பிராந்தியம் மாறி யிருக்கும்கிறதை இந்த யதார்த்தவாதிகள் புரிஞ்சுக்கிட்டு இருக்காங்களா என்பது எனக்குச் சந்தேகமாகத்தான் இருக்கு.

படங்களுக்கு எப்படிப் பொருத்தமில்லாமல் 'அவார்டு' கொடுக்கப்படுகிறதோ, அதே நிலையில்தான் நடிக நடிகையருக்கும் வருடா வருடம் விருதுகள் வழங்கப்படுகின்றன. இரண்டாவது தடவையிலும் ஒரே நபரை அதே விருதால் கௌரவப்படுத்த வேண்டிய அளவுக்கு நம்மிடையே திறமைப் பஞ்சம் வந்துவிட்டதா?

'கோஷிஷ்' படத்தில் அற்புதமாக நடித்த ஜெயாபாதுரிக்கு அந்தப் பட்டம் கிடைக்கவில்லே. தமிழ்ப் படங்களில் நடிப்புக்கும் திறமைக்கும் இலக்கணம் வகுத்தாற்போல் சிறந்து விளங்கும் சிவாஜி கணேசன், பானுமதி, சௌகார் ஜானகி முதலியவர்கள் இந்த விருதை விட்டு வெகு தூரம் தள்ளியே இருக்கிறார்கள். இதிலிருந்தே பரிசளிக்கும் கமிட்டி எவ்வளவு அழகாகத் தன் பரிசீலனையைச் செய்கிறது என்று தெரியவில்லையா?

நான் நினைக்கிறது இதுதான்: அரசாங்க ஃபிலிம் பைனான்ஸ் கார்ப்பரேஷனிடமிருந்து கடன் வாங்கிப் படம் தயாரிப்பவர்களுக்கு இந்தப் பரிசைக் கொடுத்தால் வழங்கிய கடனில் கொஞ்சமாவது சர்க்காருக்குத் திரும்பி வரும் என்ற நம்பிக்கையில் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

திரு கே. எஸ். கோபாலகிருஷ்ணன்
டைரக்டர்

ஜனாதிபதி பரிசு தானாகக் கிடைக்கக் கூடிய விஷயமில்லே. வாதாடிப் பெற வேண்டிய சமாசாரம். அந்த வித்தையில் பல காலம் வங்காளிகள் ரொம்பக் கெட்டிக்காரர்களாகச் சமீப காலம்வரை இருந்தார்கள். நடுவிலே ஒரு 'செம்மீனு'க்குத் தங்கப் பதக்கம் கிடைத்தது என்றால், அதில் ஒரு சலில் சௌதிரியும் ஒரு ரிஷிகேஷ் முகர்ஜியும் சம்பந்தப்பட்டிருந்தார்கள். நினைவிருக்கட்டும்!

'ரீ மேக்' (Re-make) இல்லாமல் 'ஒரிஜினல் கிரியேஷ'னாக (Original Creation) இருக்கும் படங்களுக்குத்தான் பரிசு என்கிறார்கள்! தாராளமாக அப்படியே செய்யட்டும்! தமிழில் அப்படி ஒரிஜினல் கிரியேஷனான படங்கள் வரவில்லையா? நான் தேசிய ஒருமைப்பாட்டை மையமாக வைத்துக் 'கை கொடுத்த தெய்வம்' எடுத்தேன்! அந்தப் பரிசுக் குழுவின் கண்களுக்கு அது தென்பட்டதா, இல்லையே?





பெரியவர்: 'என்டா மாங்கனா நிக்கறேள்?'

'ஒண்ணுமில்லே மாமா! சும்மா வேடிக்கை பார்க்கிறோம்!'



தீபாவளி வருவது வருஷத்துக்கு ஒரு நாள். அதற்காக வருஷம் முழுதும் கடன் அடைக்க வேண்டியிருக்கிறது!

ஃப்யூராடான் உபயோகித்தால் அதிக நெல் விளைச்சல்

டாடா ஃபைஸன் ராலிஸ் வழங்கும் புதிய ஃப்யூராடான் 3ஜீ மருந்து

நெற்பயிரைத் தாக்கும் பூச்சிகளைக் கொல்லுகிறது. இது பயிர் முழுவதும் பரவி செயலாற்றுவதோடு, அதிக பச்சையான நெற்பயிரைத் தருகிறது; ஹெக்டேருக்கு மற்ற பூச்சிக் கொல்லிகள் தருவதை விட 3 மெட்ரிக் டன்னுக்கும் அதிகமாக விளைச்சல் தருகிறது.

உலகெங்குமுள்ள நெற்பயிர் விளையும் பிரதேசங்களில் மிகச் சிறந்த பூச்சிக் கொல்லி என்று போற்றப்படுகிறது ஃப்யூராடான் 3ஜீ. இது பயிர் முழுவதும் பரவும் நச்சியல்பு கொண்ட மருந்தாகும். இதை நிலத்திலும், நெல் வயலிலுள்ள நீரிலும் போட்டால் பயிர்கள் வேர்கள் மூலம் அதை உறிஞ்சி, பயிர் முழுவதும் பரப்புகின்றன. இதனால் பயிரைக் கடித்து மெல்லும், துளைக்கும் மற்றும் அதன் சாற்றை உறிஞ்சும் பூச்சிகளைக் கட்டுப்படுத்துகிறது.

உங்கள் நெற்பயிருக்கு சிக்கனமான புதிய முறை. அதாவது விதைகள் / நாற்றுக்களைத் நோய்த்தடுக்கும் முறைப்பற்றி உங்கள் வியாபாரியைக் கேளுங்கள். அதை ஒரு முறை கையாண்டு பாருங்கள். வியப்பூட்டும் பலன்களைக் கண்டு நீங்கள் அதிசயிப்பீர்கள்.

வியாபார விவரங்களுக்கு எழுதுக:
ராலிஸ் இந்தியா லிமிடெட்
ஃபெர்டிலைஸர்ஸ் & பெஸ்டிஸைட்ஸ் டிவிஷன், 21, ரேவலின் ஸ்ட்ரீட், பம்பாய் 1.

மற்ற இடங்கள்: சென்னை, கல்கத்தா, லக்னௌ.

விசேஷ சிறப்பம்சங்கள்

ஃப்யூராடான் 3ஜீ, வேறெந்த [illegible]

- [illegible]
- [illegible]
- [illegible]
- [illegible]
- [illegible]
- [illegible]
- [illegible]



RALLIS TATA FISON PESTICIDES

fmc furadan
IS A REGISTERED TRADEMARK OF FMC CORPORATION

PATENT NUMBER 97302 OF FMC CORPORATION

அதிக நெல் விளைச்சல் பெற... ஃப்யூராடான் 3ஜீ

OBM-3131 FM

தேசிய, தார்மீக, முன்னேற்ற உணர்ச்சிகளுக்கு மதிப்புக் கொடுத்து, தமிழ்ப் படங்களுக்கு அந்த அவார்டு கமிட்டி தங்கப் பதக்கம் கொடுப்பதாக இருந்தால், எப்போதோ 'நெஞ்சில் ஓர் ஆலயம்' 'சாரதா' 'வீரபாண்டிய கட்டபொம்மன்' 'கை கொடுத்த தெய்வம்' 'கப்பலோட்டிய தமிழன்' முதலிய படங்கள் கௌரவிக்கப்பட்டிருக்க வேண்டும்.

ஆனல் நாட்டின் நிர்வாகத்தில் எத்தனை அபத்த ஊழல்கள் இருக்கின்றனவோ, அத்தனையும் இந்த அவார்டு கமிட்டி செயல்படுவதிலும் இருக்கிறது. அரசாங்கம் தியாகிகளை மட்டும் புறக்கணிக்கவில்லை. தியாகிகளைப் பற்றிப் படம் எடுத்தவர்களையும் புறக்கணிக்கிறது!

திரு சண்முகம், ('மதி ஒளி') திரைப்படப் பத்திரிகை ஆசிரியர்; விமர்சகர்.

நம் திரைப்படங்களுக்கு ஜனதிபதி பரிசு ஏன் கிடைக்கவில்லை என்று ஆராய்ந்து பார்ப்பதற்கு முன் இந்த ஆண்டு ஜனதிபதி பரிசுகள் எந்தெந்தப் படங்களுக்கு வழங்கப் பட்டிருக்கின்றன? அவற்றில் யார் யார் சம்பந்தப்பட்டிருந்தார்கள் என்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். மற்ற விஷயங்கள் சுலபமாகவே புரிந்து விடும்.


முதல் பரிசான தங்கப் பதக்கத்தை 'நிர்மால்யம்' என்ற மலையாளப் படம் பெற்றதல்லவா? இந்தப் படத்தை உருவாக்கிய திரு எம். டி. வாசுதேவன் நாயர் ஃபிலிம் பைனான்ஸ் கார்ப்பரேஷனில் ஓர் அங்கத்தினர். பரிசளிப்புக் குழுவிலும் ஓர் அங்கத்தினர். பூனா திரைப்படக் கல்லூரியில் சிறப்பு ஆசிரியர். மேலும் மத்திய அரசின் செய்தி ஒலிபரப்பு இலாகாவுக்குத் தொடர்புள்ள நிறுவனங்கள் பலவற்றிலும் அங்கம் வகிப்பவர். இவருடைய படத்துக்குத் தங்கப் பதக்கம். அதே படத்தில் முதல் தடவையாக நடித்தவருக்கு 'பாரத்' பட்டம்! போதுமா?

இரண்டாவது பரிசான வெள்ளிப் பதக்கத்தை 'காடு' என்ற கன்னடப்படம் பெற்றது. இதைத் தயாரித்தவர் யார் தெரியுமா? கிரீஷ் கார்னாட்! இவர் பூனா திரைப்படக் கல்லூரியோடு இணைந்தவர். பரிசளிப்புக் குழுவில் அங்கத்தினர். செய்தி ஒலிபரப்புத் துறை நிறுவனங்களுடன் தொடர்புள்ளவர். இவருடைய 'காடு' படக் கதாநாயகி நந்தினிக்கு 'ஊர்வசி' பட்டம். இந்த ஊர்வசியின் கணவரும் பரிசுக் குழுவைச் சேர்ந்தவராம்! போதுமா? இன்னும் ஆராய்ச்சி தேவையா?

'கான் வித் தி விண்ட்' 'மை ஃபேர் லேடி' 'பென்ஹர்', 'டென் கமாண்மென்ட்ஸ்', 'பிரிட்ஜ் ஆன் தி ரிவர் குவாய்', 'டாக்டர் ஷிவாகோ' போன்ற படங்கள் மேல்நாடுகளில் எத்தனையோ பரிசுகளையும் பாராட்டுக்களையும் பெற்றுள்ளன. இந்தப் படங்கள் சம்பந்தப்பட்ட கிளார்க் கேபிள், ஆட்ரி ஹெப்பர்ன், ரெக்ஸ் ஹாரிசன், சார்லஸ் ஹெஸ்டன், ஓமர் ஷெரீப், அலக் கெய்ன்ஸ் போன்றவர்களெல்லாம் அமெச்சூர்களா?... அத்தனை பேரும் உலகப் பிரசித்தி பெற்ற கமர்ஷியல் ஆர்ட்டிஸ்டுகள். பரிசு பெற்ற அத்தனை படங்களும் 'பாக்ஸ் ஆபீஸ் ஹிட்'டுகள். அப்படி யிருக்க இங்கே மாத்திரம் வியாபார ரீதியில் இல்லாத படங்களுக்குப் பரிசு கொடுப்பது என்ற பட்சபாதம் ஏன்?

கலை, கலாசாரம், நடிப்பு, தொழில் நுணுக்கம், கதையமைப்பு, பண்பாடு இவைகளை எடுத்துக்காட்டும் பல நல்ல படங்கள் நம் தமிழ் நாட்டில் தயாரிக்கப் பட்டிருக்கின்றன. ஆனல் நட்சத்திர ஆதிக்கத்தை அமுக்க வேண்டும் என்ற ஆத்திரத்தினல் பரிசுக் குழு அந்தப் படங்களுக்குக் 'கமர்ஷியல் ஃபிலிம்' என்ற லேபிளை ஒட்டி ஒதுக்குகிறது.

தமிழ்ப் படங்களுக்கு ஜனதிபதியின் முதல் பரிசு கிடைக்கவில்லையே என்று நாம் கவலைப் படவில்லை. அந்தப் பரிசுக் குழுவின் விவேகமற்ற போக்கைக் கண்டுதான் வேதனைப் படுகிறோம். பேட்டி : கோமதி சுவாமிநாதன்



'என்ன ஆடம்பரக் கல்யாணங்கள்! அழைப்பில்லாதவர்கள் கூடக் கலந்து கொண்டால் தெரியாது. உதாரணமாக நானே அழைக்கப்படாதவன்தான். யாரும் என்னைக் கண்டு கொள்ளவில்லை.'

'நான்கூட அழைக்கப்படாதவன் தான்!'

'நீங்கள் யார்?'

'நான்தான் கல்யாணப் பெண்ணின் தகப்பனர்!'

'.......!'

பொழுது போக்கு

ஆல்பத்தின் பலன்!

★ என்னுடைய மருமான் சுந்தரம் எஸ். எஸ். எல். ஸி. படிக்கும்பொழுதே பத்திரிகைகளில் வரும் தலைவர்களின் படங்களையும், சுதந்திர நாளன்று வெளியான சுதந்திர வரலாறு பற்றிய படங்களையும் ஒரு பெரிய நோட்டுப் புத்தகத்தில் ஒட்டி வந்தான். மகாத்மா காந்தி இறந்தவுடன் பத்திரிகைகளில் வெளியான மகாத்மாவின் படங்களையும் ஒன்றுசேர்த்து அவருடைய பால பருவம் முதல் அவருடைய அஸ்தியைப் பல புண்ணிய நதிகளில் கரைப்பது வரை வரிசைப்படுத்தி ஒட்டினான். இப்படியே எம். ஏ. படித்து முடிக்கும் வரை தொடர்ந்து படம் ஒட்டும் வேலையில் ஈடுபட்டிருந்தான். நானும் மற்றும் வீட்டில் உள்ள அவனுடைய பெற்றோர்களும் அவனை நேரத்தை வீணடிப்பதாகக் கோபித்துக் கொண்டோம்.

சுந்தரம் தன்னுடைய பி. டி. கோர்ஸை முடித்துவிட்டு மிகவும் சந்தோஷத்துடன் என்னிடம் வந்தான். "மாமா! இப்பொழுது அந்த 'ஆல்பத்தின்' பலனைப் பாருங்கள். எல். டி. கோர்ஸில் ஆல்பத்திற்கு மார்க் போட்டிருக்கிறார்கள். எனக்கு 50க்கு 50 மார்க். இப்பொழுது என்ன சொல்கிறீர்கள்?" என்றான்.

சி. ஆர். திருவேங்கடத்தான் - டால்மியாபுரம்





வாழ்க்கையோடு கலந்த கலை!

★ இரண்டு வருடங்களுக்குமுன் நடந்தது. இன்றைக்கு நினைத்துப் பார்த்தாலும் இனிக்கத் தாக்கூடிய நிகழ்ச்சி. மதுரைக் கோவில் கோபுர உச்சியை அடைந்து மதுரையின் அழகை ரசிக்கலாம் என்று எண்ணிக் கோபுரத்தின் படிகளில் ஏறி விட்டேன். ஆனால் மேலே செல்லச் செல்லப் படிகள் குறுகி கடைசியில் இரண்டு மிகச் சிறிய மரப் பலகைகளில் முடிவடைந்தது. அந்த இடம் எனக்கு மிகப் பயங்கரத்தை உண்டாக்குவதாக இருந்தது. சுழன்றடிக்கும் பயங்கரக் காற்று; தவறி விழுந்தால் பிடித்துக் கொள்ளக்கூட வசதியில்லாத இடம் - ஒரே ஒரு கும்பத்தைத் தவிர! இருந்தாலும் தைரியத்தைக் கைவிடாமல் புகைப்படம் எடுத்துக் கொண்டு கீழேவந்து சேர்ந்தேன். அந்தப் படம் உண்மையிலே அழகாகவும் சிறப்பாகவும் அமைந்திருந்தது.

நான் எந்த ஊருக்குப் புறப்பட்டாலும் முதலில் பெட்டியில் எடுத்து வைப்பது காமிராவைத்தான். அது இல்லையென்றால் என்னுடைய ஒரு கையே உடைந்து விட்டது போன்ற உணர்வு ஏற்படும்.

இவ்விதம் என் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்த புகைப்படக் கலை, எனக்கு ஒரு சிறந்த பொழுது போக்காக இருப்பதோடு மட்டுமின்றி, உள்ளத்துக்கு மகிழ்ச்சியையும் பெருமிதத்தையும் அளிக்கிறது.

ஜே. நஜிமுதீன், - திருச்சி-8

பிட் பேப்பர் சம்பத்!

★ என் கணவர் பல பத்திரிகைகளைப் படித்து அவற்றிலிருந்து உபயோகமான பல விஷயங்களையும் சேகரித்து, அந்தந்த விஷயங்களுக்கேற்பத் தனித் தனியாக அடுக்கி வைத்திருக்கிறார். ஒரு 'பல்கலை நூற்களஞ்சியமே' வீட்டில் இருக்கிறது, போங்களேன். ஆனால் இவருக்கு வீட்டில் மற்றவர்கள் வைத்திருக்கும் செல்லப் பெயரோ, 'பிட் பேப்பர் சம்பத்!'

- லலிதாசுந்தர், காரைக்கால்

வாடா மலர்கள்

★ எனக்குச் சிறு வயதிலிருந்தே ஆன்றோர்தம் பொன் மொழிகளைச் சேகரிப்பதில் அதிக ஆசை. அவ்வப்போது அவற்றை அழகாகத் தனி நோட்டில் எழுதி வைத்துக் கொள்வேன்.


கல்லூரியில் நான் படிக்கும் பொழுது தரமான கட்டுரைகளை எழுதுவதற்கு, நான் சேர்த்து வைத்த பொன்மொழிகள் பயன்பட்டன.

தோல்வியின் நிழல் என்னை வருத்தும் பொழுது, யாரும் இல்லா நேரங்களில், எனது உற்சாகத்தை மீட்டுத் தருவது ஆன்றோர்தம் அறிவுரைகளே.

நான் சேர்த்த வாடாமலர்கள் என் மனத்தில் ஒரு புரட்சியையே ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. என் வாழ்க்கையைப் பயனுள்ள நல்ல வாழ்க்கையாக அமைத்துக் கொள்ள உதவுகின்றன.

இரா. வசந்தகுமாரி, முன்னீர் பள்ளம்





பொம்மைக் கலை !

★ போன நவராத்திரி கொலுவின்போது எனது சிநேகிதியின் வீட்டுக்குப் போனேன். அவர்கள் வீட்டில் இருந்த Wire doll என்னைக் கவர்ந்தது. வீட்டுக்கு வந்து செய்து பார்த்தேன். இருப்பிமாக இருந்தது. இப்படி நான் கையால் பண்ணுவதையே என் தோழிகளுக்கு Greeting Card ஆக அனுப்புவேன். இப்பொழுது நிறைய Wire dolls பண்ணிக் கடைக்குக் கொடுத்து வருகிறேன். எனவே எனக்குப் பாக்கெட் மணியைப் பற்றிக் கவலை இல்லை!

இத்துடன் ஒரு ஜவர் பொம்மை மாதிரிக்கு அனுப்பியிருக்கிறேன். ஜெ. தோ, சென்னை - 18

தபால் தலை தேடித் தரும் நட்பு

★ என் அண்ணன் காஞ்சிபுரத்தில் ஏகாம்பரேசுவரர் சந்நிதியில் குடியிருக்கிறார். அது வெளி நாட்டுப் பயணிகள் வரும் மைய இடம். தனது ஓய்வு நேரங்களில் அத்தகைய பயணிகளை, அனுமதி என் அண்ணன் மகன் சந்திரமௌலி தன் விருப்பத்தைத் தெரிவித்திருக்கிறான். சிறுவனின் நல்ல ஆங்கிலத்தால் கவரப்பட்ட அவர்கள் விலாசத்தைக் குறித்துக் கொண்டு தம் நாடு சென்றதும் கடமை உணர்வோடு மறக்காமல் தபால் தலைகளை அனுப்பத் தொடங்கினர். பற்பல நாடுகளிலிருந்து இப்போதும் அவனுக்குத் தபால் தலைகள் வருகின்றன.

ஜானகி மணாளன், மன்னார்குடி.





வண்ண மலர்க்குப் பரிசு !

★ நான் சிறு வயதிலிருந்தே காகிதத்தைக் கிழித்துக் கிழித்து விதம் விதமாய்க் கப்பல், பொம்மை எல்லாம் செய்வேன், வீடு நிறைய குப்பையாகிறதே என்று என் பெற்றோர்கள் கோபித்துக் கொள்வார்கள்.

படிப்பெல்லாம் படித்த பிறகு, பொழுது போக்குக்காக, "இந்தோ—நிப்பன்" கூட்டுறவு சங்கத்தில் சேர்ந்து, உயர்ந்த ரகக் காகிதங்கள் வாங்கி விதம் விதமாய் வண்ண மலர்கள் செய்யக் கற்றுக் கொண்டேன். 73ம் ஆண்டு நடந்த கண் காட்சியில், என் காகித மலருக்கு, முதல் பரிசாக ஜப்பான் பிரிண்டட் நைலக்ஸ் புடவை கிடைத்தது.

குமாரி ஜோதி கிருஷ்ணமூர்த்தி, தங்கநல்லூர்

□ □ □ □ □ □ □ □ □

தோட்ட வேலை

★ சிறு வயது முதலே தோட்டவேலையை எனது ஹாபியாக ஏற்றுச் செய்து வந்தேன். நானே தோட்டமிட்டுக் காய்கறிச் செடிகளையும் பூச்செடிகளையும் பயிரிட்டு இருக்கிறேன். அவைகளுக்கு நீர் ஊற்றுதல், களை யெடுத்தல், உரமிடுதல் ஆகியவை என் பொழுது போக்குகள். காய்கறிச் செடிகளும், பூச்செடிகளும் நல்ல பலனைக் கொடுக்கின்றன. தோட்டத்திலிருந்து கிடைக்கும் காய்கறிகளிலும், பூக்களிலும் பழங்களிலும் தேவையானவை போக, மற்றவற்றை விற்றுப் பணமாக்கிச் சேமிக்கிறேன். இதன் மூலம் வீட்டின் உற்பத்தியை மட்டுமின்றி, நாட்டின் உற்பத்தியையும் அல்லவா பெருக்குகிறோம்?

ப. சீதாலட்சுமி, கரூர்.





கத்தாழைப் பிரியர்

★ எனது அலுவலக நண்பர் திரு எம். பி. ராவ் பல 'ஹாபி'களைக் கொண்டிருந்தாலும் எல்லாவற்றையும்விட மிகவும் விரும்புவது காக்டஸ் என்னும் பாலை நிலச் செடிகளை வளர்ப்பதுதான். இவற்றைக் கவர்ச்சியாக வைத்திருக்கிறார். பிக்னிக், மற்ற வெளி இடங்களுக்குச் செல்லும் போது புது மாதிரியான காக்டஸ் கிடைக்காதா என ஏங்குவார்.


வி. ஏ. பத்மநாபன், பூனா.

□ □ □ □ □ □

கடிகார ரிப்பேர்

★ எனக்குத் தெரிந்த ஒருவர் மோட்டார் கம்பெனியில் வேலை பார்க்கிறார். அவர் ஒரு கண்டக்டர். அவருக்கு ஒரு நாள் லயனில் போனால் மறுநாள் ஓய்வு. இம்மாதிரி ஓய்வு தினங்களில் தமது நண்பரின் கடிகார ரிப்பேர் கடையில் போய் அவர் பொழுது போக்குவது வழக்கம். அவருக்கு உதவி செய்யும் வகையில் இவ்வூரில் கிடைக்காத கடிகாரச் சாமான்களை வெளியூரிலிருந்து வாங்கி வந்து கொடுப்பது வழக்கம். நாளடைவில் தான் கண்டக்டராக லயனில் சென்ற நாள் தவிர மற்ற ஓய்வு தினங்களில் கடிகார ரிப்பேர் செய்து கொடுத்து இதன் மூலம் மாதம் நூற்றைம்பது இருநூறு சம்பாதிக்கிறார்.

என். சித்ரா, பெரியகுளம்


தினசரி உங்கள்
உடலுக்குத் தேவை
இந்த 23 அத்தியாவசிய
ஊட்டச் சத்துக்கள்.
பருகுவீர்
காம்ப்ளான்®
போஷாக்குப்
பற்றுக்குறையிலிருந்து
உங்களைப்
பாதுகாக்கவே
OMGC-6-216 TH

காம்ப்ளான்
இந்த 23-ஐயும் தருகிறது.

புரதம்
திசுக்களையும் செல்களையும் உருவாக்க, பாதுகாக்க
லிப்பிடுகள்
பொங்கிப் பெருகும் சக்திக்கே
கார்போஹைடிரேட்
சக்தி மிகுந்த உடல் வலிமைக்கே
கால்ஷியம்
ஆரோக்கியமான பற்கள், எலும்புகளுக்கு
பாஸ்பரஸ்
உடல் சுரப்பிகள், பற்கள் எலும்புகளுக்கு
சோடியம்
இரத்தம் நன்முறையில் செயலாற்ற
குளோரைடு (Cl வடிவில்)
தசை இயக்கத்திற்கு, பிடிப்புகளைத் தவிர்க்கும்.
பொட்டாஷியம்
மனத் தளர்ச்சி, தசை அயர்ச்சிக்கெதிராகப் போராட
இரும்புச் சத்து
ஆரோக்கியமான ரத்தத்திற்கே
அயோடின்
தைராய்டு சுரப்பி தரமாக இயங்க
வைட்டமின் ஏ
ஆரோக்கியமான கண்களுக்கு
வைட்டமின் பி1
வளர்ச்சி, உறுதியான நரம்புகள், 'பெரி-பெரி' நோய் பிடிக்காதிருக்க



ரிபோஃப்ளேவின்
ஆரோக்கியமான வாய், நாக்கு, உதடுகள், கண்களுக்கு
நிகோடினமைடு
ஒளிவீசும் ஆரோக்கியமான சருமத்திற்கே
கால்ஷியம் பென்டோதெனேட்
நரம்புகளையும் தசைகளையும் வலுப்படுத்த
கோலின்
கல்லீரல் ஆரோக்கியமாக இயங்க
பைரிடாக்ஸின் (B6)
தசைகளை இளைப்பாற்ற
வைட்டமின் பி12
இரத்த சோகை பீடிக்காதிருக்க
ஃபாலிக் அமிலம்
புதிய இரத்த செல்களை உருவாக்க
வைட்டமின் ஸி
நோயெதிர்ப்புச் சக்தியைப் பெருக்கி, ஸ்கர்வி நோய் வராதிருக்க
வைட்டமின் டி
உறுதியான பற்கள், எலும்புகளுக்கு
வைட்டமின் ஈ
கரு வளர்ச்சிக்கு
வைட்டமின் கே
இரத்தம் இயற்கையான முறையில் உறைய உதவும்
இதர சிறு சிறு பொருட்கள்
வைட்டமின்களை உடல் உறிஞ்சிக்கொள்ளவும், சுரப்பிகள் நன்கு இயங்கவும் உதவும்.

பால் சேர்க்காமலேயே பருகலாம்!

காம்ப்ளான் வளரும் குழந்தைகள்,
சுறுசுறுப்பான இல்லத்தரசிகள்,
பரபரப்புடன் இயங்கும் அலுவலாளர்கள்,
கருத்தரித்த தாய்மார்கள், பாலூட்டும் அன்னையர்,
வயது முதிர்ந்தோர், பிணியாறுவோர்
முதலியவர்களுக்கு சாலச் சிறந்தது.



பாலையும் விட இன்னும் அதிகமான வைட்டமின்கள், புரதம், கால்ஷியம், இரும்புச் சத்து மற்றும் இதர ஊட்டச் சத்துக்களை காம்ப்ளான் அளிக்கிறது.

ஒப்பிட்டுப் பாருங்கள்:
ஒரு கோப்பை காம்ப்ளான் (33 கிராம்),
ஒரு கிளாஸ் பால் (200 மி.லி.)

உலகெங்கும் உபயோகிக்கப் படுவது—
கிளாக்ஸோ
ஆராய்ச்சியில் உருவானது.



குழந்தைகள் காப்பகம்

[illegible] சுதந்திரம் [illegible] பலன் என்னவென்றால், ஒருவன் சம்பாதித்தால் குடும்பம் நடத்த முடியாது என்ற நிலை. கணவனும் மனைவியும் சம்பாதித்தால்தான் குடும்பம் நடத்த முடியும் என்ற நிலை. இருவருமாக ஆபீசுக்கும், தொழிற்கூடத்துக்கும் போய் விட்டால் குழந்தைகளை யார் பார்த்துக் கொள்வது? எங்கே விட்டு விட்டுப் போவது?

மேலநாடுகளில் பல ஸ்தாபனங்கள், ஒரு சிறு தொகை கட்டணமாக வசூலித்து "நீங்கள் காரியாலயம் போய் வாருங்கள். நாங்கள் குழந்தைகளைப் பார்த்துக் கொள்கிறோம்!'' என்கின்றன.

இன்னும் சில தம்பதியர் ஜோடியாக சினிமாவுக்கோ, நாடகத்துக்கோ, நண்பர் வீட்டு விருந்துக்கோ போய்வர வேண்டியிருந்தால்—அந்த இரண்டு மணி நேரமோ, மூன்று மணி நேரமோ பார்த்துக் கொள்ளப் பல பேர் மேலநாடுகளில் பேபி ஸிட்டர்ஸ் (Baby sitters) என்று கிடைக்கிறார்கள். ஒரு சிறு தொகை கட்டணமாகப் பெற்றுக் கொண்டு குழந்தைகளைப் பார்த்துக் கொள்கிறார்கள். பெற்றோர்களுக்குக் குழந்தைத் தொந்தரவின்றி நிம்மதியாக ஒரு சில மணி நேரம் பொழுதுபோக்க முடிகிறது.

"இந்த மாதிரி வசதி நம் நாட்டில் இல்லையே?" என்று நம்மில் பலர் பல சமயம் நினைத்திருப்பார்கள்.

சென்ற வாரம் அடையாறு காந்தி நகர் பக்கம் போய்க் கொண்டிருந்த போது, ஸ்ரீமதி மணிமேகலை கணேசன் எம்.ஏ.,பி.எல்லி. என்றும், ஆங்கிலத்தில் Baby Sitter - Baby Care Centre) என்றும் எழுதப்பட்டிருந்த பெயர்ப் பலகையைப் பார்த்தேன். தமிழ்ப் பலகை மட்டும் இருந்திருந்தால் எனக்குப் பொருள் விளங்காமல் போய் இருக்கும். ஆங்கிலப் பலகை பொருளை விளக்கிவிடவே ஆச்சரியம் அடைந்தேன். அப்போது ஒரு சிறுவன் ஓடிவந்து என் கையில் ஒரு துண்டுப் பிரசுரத்தைக் கொடுத்துவிட்டுச் சென்றான்.

"வேலைக்குச் செல்லும் தாய்மார்களே !
விருந்துக்குச் செல்லும் பேரவையீர் !
கடைகளுக்குச் செல்லும் கட்டினாட்சுகர் !
திரைப்படமா ? நாடகமா ?
களிப்பு நிகழ்ச்சிகளா ?
கவலைப்படாதீர், உம் குழந்தைகளைப் பற்றி!''


என்று விளம்பி மிகக் குறைந்த கட்டணத்தில் குழந்தைகளைக் காப்பதாக — பார்த்துக் கொள்வதாக — அந்தத் துண்டுப் பிரசுரம் கூறியது. இப்பணியை ஏற்று நடத்தித் தருவதாகக் கூறுபவர் சர்வகலாசாலைப் பட்டங்கள் இரண்டு பெற்ற ஸ்ரீமதி மணிமேகலை கணேசன் எம்.ஏ., பி.எல்லி.

திருமதி மணிமேகலை, சென்னை அரசினர் மகளிர் கல்லூரியில் உதவிப் பேராசிரியராக இருந்தவர். அவர் பெயரை, திருமணத்துக்கு முன்பு மணிமேகலை அரசாமி என்று கையெழுத்திட்டு வந்தாராம். திருமணத்துக்குப்பின், மணிமேகலை கணேசன் என்று கையெழுத்திட்டாராம். இதை ஆட்சேபித்து, அவர் தாற்காலிகப் பேராசிரியராக இருந்தமையால் வேலை நீக்கம் செய்துவிட்டார்கள். இதற்குப் பிறகு பல இடங்களிலிருந்து வேலைக்கு அழைப்பு வந்தவண்ணம் இருக்கின்றன. ஆனால் யாவும் சென்னையைவிட்டு, கணவனையும் குழந்தைகளையும் விட்டு வெளியூர்களில் தங்கிச் செய்யும்படியான வேலைகள். அதனால் யார் தயவையும் நாடாமல், குழந்தைகளைப் பெற்ற தாய்மார்களுக்கு உதவும்படியான இந்தக் குழந்தை காப்பகத்தைத் தொடங்கியிருக்கிறார். இப்பணிக்கு உறுதுணையாக இருப்பவர் அவர் கணவர் திரு கணேசன் பி. ஈ. (ஆனர்ஸ்) எம். எஸ்ஸி. (இன்ஜினீயரிங்). இவர் சென்னை ஏ. ஸி. கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றி வருகிறார். தீவிர தமிழ்ப் பற்றும், புதுக் கலைகள் யாவும் தமிழில் விளக்கப்பட வேண்டும் என்ற ஆர்வமும் கொண்டவர். ஆங்கிலத்திலும் மின் பொறி இயலைப் பற்றிக் கல்லூரி மாணவர்களுக்கும், பேராசிரியர்களுக்கும் பயன்படக் கூடிய நூல்கள் இயற்றியிருக்கிறார்.


இந்தக் குழந்தைகள் காப்பகம் பற்றி அவர்கள் வெளியிட்ட துண்டுப் பிரசுரம் முழுவதும் ச.வெ.ரா.வின் எழுத்துச் சீர்திருத்த முறைப்படி அச்சடிக்கப்பட்டிருக்கிறது. திருமதி மணிமேகலை — இல்லை — மணிமேகலை !

இந்த ஒரு "லை'' திரு கணேசன் தம்பதி ஈ. வெ. ரா.வின் கொள்கைகளையெல்லாம், பச்சிளம் குழந்தைகளுக்குப் புகுத்தின்டு வார்களோ என்ற அச்சத்தை அல்லவா ஏற்படுத்திவிடுகிறது !

—எஸ்.வி.எஸ்.



குவாலியர் ரேயானின் மகத்தான 26 ஆண்டு காலப் பணி



தன்வலிமை பெறும் கனவை நனவாக்கி வரும் பணி.

ரேயான் இழைகள், ஸ்டேபிள் இழை, ரேயான்-கிரேடு பல்ப் (கூழ்), ரேயான் ஸ்டேபிள் நூலிழைத் தொழிற்சாலைகளுக்கான எந்திர சாதனங்கள் ஆகிய எல்லாவற்றையும் நம் நாட்டிலேயே உற்பத்தி செய்து கொள்வதற்கென குவாலியர் ரேயான் செய்துவரும் முயற்சிகள், நாடு சுதந்திரம் எய்திய நாளிலேயே தொடங்கிவிட்டன.

மூங்கில் மற்றும் இதர கெட்டி மரங்களிலிருந்து கனா திறனுள்ள ரேயான்-ரகக் கூழ் தயாரிப்பு, மற்றும் ரேயான், பல்ப், இவை சார்ந்த தொழிற்சாலைகள் ஆகியவற்றுக்கான நுட்பமிகமான எந்திர சாதனங்களின் உற்பத்தி முதலியவற்றிலே குவாலியர் ரேயான்முன்னோடியாக விளங்குவதனும், ரேயான் தொழிலிலே நம் நாடு தன்வலிமை பெற வழியமைத்துள்ளது.

இன்று, குவாலியர் ரேயானின் ஸ்டேபிள் நூலிழை உற்பத்தியளவு, 520 லட்சம் பேருக்கு ஆடை வழங்கப் போதுமானதாக உள்ளது. மரக் கூழ் உற்பத்தியோ, ஆண்டு தோறும் ஒரு லட்சம் டன்களுக்கு மேல்; இது செல்லுலோஸ் இழையளவிலே கணக்கிட்டால், 5.2 லட்சம் பருத்தி பேல்களுக்கு ஈடாகும்.

கடந்த பத்தாண்டுகளில், குவாலியர் ரேயான் நம் நாட்டின் பொக்கிஷத்திற்கு, வரிகளும் தீர்வைகளுமாக ரூ. 90 கோடி செலுத்தியுள்ளதோடு, அதே காலத்தில் ரூ. 360 கோடி அந்நியச் செலாவணியை மிச்சப்படுத்தியுள்ளது. இதை நோக்கும்போது, தன்வலிமை வாய்ந்த பொருளாதார அமைப்புக்கு குவாலியர் ரேயான் செலுத்திவரும் மகத்தான பணியின் பெருமை தெளிவாக விளங்கும்.

குவாலியர் ரேயான்—

தேச முன்னேற்றமே முதன்மை எனக் கருதுவோர்.

தி குவாலியர் ரேயான் ஸில்க் மானுபாக் (வீவிங்.) கோ. லிட்., பிர்லாகிராம், நாக்தா (ம.பி.



19. சிலந்தி வலை பின்னுகிறது!

அன்று வெளியான 'நவரசம்' பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்தார், நீதிபதி நாகசுந்தரம். பக்கத்தில் ஒரு சோபாவில் அமர்ந்திருந்த கோமளம், ஓர் ஆங்கிலப் பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்தாள்.

நவரசம் பத்திரிகையின் உள்ளே, ஒரு மடத்தின் அதிபரும், பக்தர்களின் மரியாதைக்குப் பாத்திரமானவருமான ஒரு மகானுடைய படம், முழு பக்க அளவில் இருந்ததைக் கண்டு நீதிபதியின் முகம் மலர்ந்தது. மடத்து சுவாமிகளின் முகத்தில் தெரிந்த அருள் தேஜஸும், ஆன்மிக உணர்வும், ஞான ஒளியும் நீதிபதியை மெய்சிலிர்க்க வைத்தன. ஒன்றிரண்டு நிமிடங்கள் படத்தைக் கண்கொட்டாமல் பார்த்தார். பிறகு மறு பக்கத்தைப் புரட்டினார். தெருவின் ஓரத்தில் நடக்கும்போது திடீரென்று அசிங்கத்தை மிதித்துவிட்டால் ஏற்படுவது போன்ற அருவருப்பு தோன்றியது. முகத்தைச் சுளித்தார். ஒரு திரைப் படத் துணை நடிகையின் முக்கால் நிர்வாணப் படம் அந்தப் பக்கத்தில் இருந்தது.

''பெரிய மகான்களை இப்படி அவமதிக்க வேண்டாம்'' என்று முனகினார். கோமளம் தலை நிமிர்ந்து அவரைப் பார்த்தாள்.

''என்ன?''

''ஒரு சமயத் தலைவரை இப்படியா அவமதிப்பது?'' என்று கூறிக் கொண்டே பத்திரிகையிலிருந்த மகானின் படத்தையும், மறு பக்கத்திலிருந்த சினிமா நடிகையின் படத்தையும் காட்டினார், நாகசுந்தரம்.

கோமளம் பத்திரிகையை வாங்கிப் பார்த்து விட்டுத் திருப்பிக் கொடுத்தாள். அவளுடைய முகமும் அருவருப்பினால் சுருங்கியது.

''ஒரு மகானின் படம் வரும் இதழையாவது கொஞ்சம் புனிதமாக அச்சிட்டிருக்கலாம்'' என்றார் நாகசுந்தரம்.

''பத்திரிகை விற்பனையாக வேண்டாமா?'' என்றாள் கோமளம்.

''அப்படியானால் இந்த ஞானியின் படத்தைப் போடாமல் இருந்திருக்கலாமே? இந்த மகானின் படத்துக்காகவா பத்திரிகை விற்பனையாகிறது?'' என்று நாகசுந்தரம் கூறிக் கொண்டிருந்தபோது வாசலில் சந்தானத்தின் கார் வந்து நின்றது.

'' அதோ எடிட்டரே வந்து விட்டார். நீங்களே அவரிடம் கேளுங்கள்'' என்றாள் கோமளம்.

சந்தானம் உற்சாகத்துடன் சிரித்தவாறு காரிலிருந்து இறங்கி வந்தார். ''நேற்று விழாவில் எடுத்த படங்கள் பிரமாதம்'' என்று கூறியவாறு ஒரு பெரிய உறையை நீதிபதியிடம் கொடுத்தார். கோமளம் பரபரப்புடன் பாய்ந்து சென்று நீதிபதியின் பின்னால் போய் நின்றுகொண்டு படங்களைப் பார்க்கத் தொடங்கினாள்.

அவளைப் பல கோணங்களில் பல சந்தர்ப்பங்களில் எடுக்கப்பட்ட முப்பது படங்கள் இருந்தன. படங்களைப் பார்த்துப் பூரித்தாள் கோமளம். ஆனந்தத்தால் மனம் துள்ளியது. பக்கத்துச் சோபாவில் அமர்ந்திருந்த சந்தானத்தை மிகுந்த நன்றிப் பெருக்கோடு பார்த்தாள். அவருடைய பார்வையும் அவள் மீதுதான் இருந்தது. அவளுடைய நன்றியை ஏற்றுக் கொள்வதுபோல் அவருடைய இதழ்களில் குறுநகை தோன்றியது. இருவருடைய பார்வையும் சில விநாடிகள் ஒன்றை ஒன்று எதிர்த்தன.

''அடுத்த இதழில் இதிலிருந்து ஐந்து படங்களைப் போடலாம் என்றிருக்கிறேன். ஒரு படத்தை அட்டைப் படமாகப் போடப் போகிறேன்'' என்று கூறிவிட்டுச் சந்தானம் பார்வையை இன்னும் தீவிரமாக்கினார்.

தன்னுடைய படம் அட்டைப்படமாக வரப் போகிறது என்ற நினைவில் ஏற்பட்ட ஆனந்தப் பரவசத்தைத் தாள முடியாமல் கோமளம் திணறினாள். அதை நன்கு புரிந்து கொண்டார் சந்தானம். அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு, தம் பார்வையை மிக அழுத்தமாக அவளுடைய விழிகளோடு கலந்தார். ஒரு கணம் கோமளம் தடுமாறினாள். பார்வையைத் திசை திருப்பிக் கொண்டாள்.

''படத்தை அட்டையில் போட வேண்டாம்'' என்றார் நாகசுந்தரம்.

''அட்டையில் போடுவதுதான் பெருமை'' என்று கூறிக் கடைக்கண்ணால் கோமளத்தைப் பார்த்தார் சந்தானம்.

''விழா நிகழ்ச்சிப் படங்களை உள் பக்கம் அச்சிடுங்கள். அட்டையில் எதற்கு?'' என்றார் நாகசுந்தரம் மீண்டும்.

'' எடிட்டர் இஷ்டப்படி செய்து கொள்ளட்டுமே !'' என்றாள் கோமளம்.

நாகசுந்தரம் சோபாவிலிருந்து நிமிர்ந்து, தமக்குப் பின்னால் நின்று கொண்டிருந்த மனைவியைப் பார்த்தார். அவளுடைய பார்வையிலிருந்த கெஞ்சல், அவரை நெகிழ வைத்தது. அவளுடைய விருப்பத்தைத் தடுக்க மனம் இல்லாமல் தவித்தார். பதில் ஏதும் கூறாமல் கையிலிருந்த படங்களைப் பார்ப்பதில் ஈடுபட்டார். பிறகு, படங்களைக் கோமளத்திடம் கொடுத்தார். கோமளம் படங்களை வாங்கிக் கொண்டு சற்றுத் தள்ளியிருந்த சோபாவில் அமர்ந்தவாறு அவைகளைப் பார்த்து ரசிப்பதில் ஈடுபட்டாள்.

''இதென்ன பெரிய மகானின் படத்தைப் பத்திரிகையில் போட்டுக் கேவலப்படுத்தியிருக்கிறீர்கள் ?'' என்று கூறிய நீதிபதி, நவரசம் பத்திரிகையைச் சந்தானத்திடம் கொடுத்தார்.

''ஐயோ, அபசாரம், அபசாரம் ! அப்படிச் சொல்லாதீர்கள். சுவாமிகளுக்கு அவமானம் செய்வதாவது ? பக்திக் காணிக்கையாக அல்லவா சுவாமிகளின் திருஉருவத்தைப் போட்டிருக்கிறேன்! சுவாமிகளின் திருஉருவத்தைத் தாங்கி வர இந்தப் பத்திரிகை என்ன புண்ணியம் பண்ணியதோ?'' என்று சந்தானம், கைகள் இரண்டையும் கூப்பிக் கும்பிட்டவாறு சொன்னார்.

நாகசுந்தரத்துக்கு உள்ளூறக் கோபம் எழுந்தது. சந்தானத்தின் பேச்சும் அபிநயமும் எரிச்சலை ஊட்டின.

''சுவாமிகளின் மீது உண்மையிலேயே உங்களுக்குப் பக்தியும் மரியாதையும் இருக்குமானால், அவருடைய படத்தைப் பூஜை அறையில் வைத்துப் பூஜிக்க வேண்டுமே தவிர இப்படிப் பத்திரிகையில் போடுவது மரியாதை அல்ல'' என்றார்.

''நம்முடைய ஜனங்களுக்குப் பக்தி குறைந்து கொண்டு வருகிறது. இந்துக் கலாசாரத்தின் மீதே நம்பிக்கை இல்லை. ஆன்மீகத் துறையில் யாருக்கும் அக்கறை இல்லை. இந்த மாதிரி பெரிய ஞானிகளின் படங்களை அடிக்கடி பார்த்தாவது இந்த ஜனங்கள் உய்யட்டும் என்பதற்காகத்தான் பத்திரிகையில் போடுகிறோம்'' என்றார் சந்தானம் அடக்கமாக.

''ஓஹோ! பத்திரிகைக்காரர்களுக்கு நம்முடைய கலாசாரத்தின் மீதும், ஆன்மீகத் துறையிலும் அவ்வளவு அக்கறை இருக்கிறதா ? அப்படியானால் இந்தப் படமும் நம்முடைய கலாசாரத்தைக் காப்பாற்றுகிறதோ ? இதையும் பார்த்து ஜனங்கள் உய்ய வேண்டுமோ ?'' என்று கேட்டவாறு சந்தானத்தின் கையிலிருந்த பத்திரிகையை வெடுக்கென்று பிடுங்கி, மகானின் படத்துக்கு மறு பக்கத்தில் இருந்த திரைப்பட நடிகையின் முக்கால் நிர்வாணப் படத்தைக் காட்டினார் நீதிபதி.

சந்தானம் அதிர்ந்துவிட்டார். முகத்தில் அசடு வழிந்தது. எல்லாம் ஒரு கணம்தான். மறுகணம் சமாளித்துக் கொண்டார். புன்முறுவல் பூத்தார்.

''நம்முடைய கலாசாரமே ஆன்மீகமும் லௌகீகமும் கலந்த ஒன்றுதானே! அதனால்தானே பெரியவர்கள் நம்முடைய கோயில்களில் தெய்வ உருவங்களோடு சேர்த்து ஆபாசமான சிலைகளையும் அனுமதித்தார்கள். அதே தத்துவத்தில்தான் இன்றைய பத்திரிகைகளும் இயங்குகின்றன. மகானின் திருஉருவத்துக்கு மறு பக்கத்தில் இப்படி ஒரு படம் இருப்பதில் தவறே இல்லை'' என்றார்.

சந்தானத்தின் சாமர்த்தியம் நீதிபதியைத் திகைக்க வைத்தது. சைத்தான் வேதம் ஓதுகிறது என்பார்களே அது போலல்லவா இவன் கோயில்களைப் பற்றிப் பேசுகிறான் ! கலாசாரத்தின் தர்மகர்த்தாவாகத் தன்னைப் பறைசாற்றிக் கொள்ளும் சந்தானத்தின் பாசாங்கையும், திருட்டுத்தனத்தையும் எண்ணி வருந்தினார். அந்த மாதிரிப் பத்திரிகையின் மூலமாகச் சமுதாயம் சீரழியும் போக்கை



எண்ணி மறுகினார். சினிமா போதாதா, கெடுக்க? இந்த மாதிரி பத்திரிகைகளுமா வரிந்து கட்டிக்கொண்டு சமுதாயத்தைப் பழி வாங்க வேண்டும்?.....

அப்போது நீதிமன்றச் சுருக்கெழுத்தாளர் வரவே நீதிபதி தம்முடைய சோபாவிலிருந்து எழுந்தார். ''இரண்டு தீர்ப்புக்கள் எழுத வேண்டியிருக்கிறது'' என்று கூறியபடி தம் அலுவல் அறையை நோக்கி விரைந்து சென்றார்.

நீதிபதி சென்றதும் சந்தானம் எழுந்து கோமளத்தை அடுத்திருந்த சோபாவில் அமர்ந்தவாறு அவள் பார்த்துக் கொண்டிருந்த படங்களைத் தாமும் பார்த்தார்.

''எல்லாப் படங்களும் பிரமாதமாயிருக்கின்றன'' என்றாள் கோமளம்.

''இதற்கென்று பிரத்தியேகமாக ஒரு போட்டோகிராபரை நியமித்திருந்தேன்'' என்றார் சந்தானம். பிறகு சொன்னார்: ''இதிலிருந்து ஐந்து படங்களைப் பொறுக்கி எடுக்க வேண்டும். அட்டைப்படத்துக்கும் ஒரு படம் தேவை.''

''எந்த ஐந்து படங்களைப் போடப் போகிறீர்கள்?''

''சாவதானமாகத்தான் பார்த்துப் பொறுக்க வேண்டும். நாம் இருவரும் சேர்ந்து பொறுக்கி எடுக்கலாம்!''

''அட்டைப் படத்துக்கு ஏற்றதாக எதுவும் இல்லையே!'' என்றாள் கோமளம்.

''ஒன்று செய்யலாம். இங்கட்டிமுறை மத்தியானம் பத்திரிகை ஆபீஸுக்கு வருகிறீர்களா? உங்களைத் தனியாக ஒரு போட்டோ எடுத்துவிடலாம்.''

''ஓ! கட்டாயம் வருகிறேன்!'' என்றாள் கோமளம் உற்சாகமாக. பிறகு, ''இங்கட்



வெற்றி இரகசியம் !

பாகிஸ்தான் ஒவ்வொரு சர்வதேச ஹாக்கிப் பந்தயத்துக்கு முன்பும் நாலைந்து நூறு 'கார்னர் ஷாட்' அடித்துப் பழகிக்கொண்டு மைதானத்துக்குள் இறங்குகிறது. அதன் வெற்றிகளுள் பல இந்த 'கார்னர் ஷாட்'களால் கிடைப்பதன் இரகசியம் இதுதான்!

கிழமை உங்கள் பத்திரிகை ஆபீசுக்கு விடுமுறை ஆயிற்றே !'' என்றான்.

''அதனால்தான் அன்று வரச் சொன்னேன். யாருடைய தொந்தரவும் இருக்காது. நாம் நிம்மதியாகச் சாவதானமாகப் படங்களைத் தேர்ந்தெடுக்கலாம். உங்களையும் தனியாகப் போட்டோ எடுத்து விடலாம்'' என்றார் சந்தானம்.

கோமளம் சம்மதம் தெரிவித்துத் தலையை ஆட்டினாள். சந்தானத்தின் மனம் உற்சாகத்தில் துள்ளியது. ''ஐட்ஜுக்கு உங்கள் படம் அட்டையில் வருவது பிடிக்குமில்லே'' என்றார்.

''நான் சொன்னால் சம்மதித்துவிடுவார்.''

பக்கத்து அறையில் குருக்கெழுத்தாளரிடம் நீதிபதி தீர்ப்பை 'டிக்டேட்' செய்தது கேட்டுக் கொண்டிருந்தது.

''நேற்று நீங்கள் என்னை வானளாவப் புகழ்ந்து விட்டீர்களே!'' என்றாள் கோமளம்.

''உள்ளதைத்தானே சொன்னேன். புகழ் பெற்ற எழுத்தாளரைப் பாராட்டுவது தவறு?'' என்று கேட்டுவிட்டுக் கனிவோடு அவளைப் பார்த்தார் சந்தானம்.

''இருந்தாலும் நீங்கள் என்னை ரொம்பப் புகழ்ந்து விட்டீர்கள். எனக்கு வெட்கமாகக் கூட இருந்தது'' என்று கூறிப் பற்கள் தெரியச் சிரித்தாள் கோமளம்.

அந்தச் சிரிப்பில் லயித்தார் சந்தானம்.

''உங்களைப் புகழ்வதில் எனக்கு ஓர் உற்சாகம். உண்மையைச் சொல்லட்டுமா ? உங்களுடைய பெருமையெல்லாம் ஒரு நீதிபதியின் மனைவி என்பதால் அல்ல. சிறந்த எழுத்தாளர் என்பதால்தான். கோமளத்தின் கணவர் என்பதால் இன்று மிஸ்டர் நாகசுந்தரத்துக்குப் புகழ். அந்த அளவுக்கு உங்கள் புகழ் பரவிவிட்டது. என்னுடைய ஆசை என்ன தெரியுமா ? உங்களுடைய புகழ், இந்தியா முழுவதும் பரவ வேண்டும் என்பதுதான்.''

கோமளம் நெகிழ்ந்தாள். நன்றிப் பெருக்குடன் அவரை ஏறிட்டுப் பார்த்தாள்.

''உங்களுடைய கதைகளை ஹிந்தியில் மொழிபெயர்க்க ஏற்பாடு செய்யப் போகிறேன். இந்திப் பத்திரிகைகளிலும் உங்களுடைய பெயர் பிரபலம் அடையும்'' என்றார்.

''நேற்று என்னை எழுத்துலகில் ஒரு நட்சத்திரம் என்றே புகழ்ந்து விட்டீர்களே!''

''உண்மையில் அப்படித்தானே ? எழுத்துலகில் மட்டுமா நீங்கள் நட்சத்திரம்....? அழகிலும் நீங்கள் ஒரு நட்சத்திரம்தான்!'' என்று சந்தானம் கூறியதும், கோமளத்தின் முகம் நாணத்தால் சிவந்தது. குறுநகை இதழ்களில் மின்ன, ஓரக் கண்களால் அவரைப் பார்த்தாள். அவளிடமிருந்து எதிர்ப்பு எதுவும் இல்லாததால் தைரியம் அடைந்த சந்தானம், ''அன்று வந்த பெண்களில் உங்களைவிட அழகுள்ள பெண் வேறு யார் இருந்தார்கள் ? மேடையில் நீங்கள் இருந்தது அந்த விழாவுக்கே அழகைக் கொடுத்தது'' என்றார்.

சந்தானத்தின் சொற்களால் கோமளத்தின் மனம் பொங்கிப் பரவசம் அடைந்தது.

''நாழியாகிவிட்டது. நான் வரட்டுமா? இங்கட்கிழமை மத்தியானம் மூன்று மணிக்கு உங்களுக்காகக் காத்திருப்பேன்......''

''இந்தப் படங்கள்?''

''உங்களுக்காகத்தான் கொண்டு வந்தேன். உங்களிடமே இருக்கட்டும். வரட்டுமா?''

சந்தானம் விடைபெற்றபோது அவளுடைய கண்களை உற்றுப் பார்த்தார். அவளுடைய பார்வையில் தெரிந்த உற்சாகமும், சந்தோஷமும் அவருக்குத் தெம்பை அளித்தன.

காருக்குள் அமர்ந்தபோது கைக்குட்டையால் அழுத்தி முகத்தைத் துடைத்துக் கொண்டார். கைக்குட்டையிலிருந்து வீசிக் கொண்டிருந்த மணம், அவரைப் பரவசப்படுத்தியது. கலெக்டரின் மனைவி கனகாவின் முகம் நினைவில் படர்ந்தது. அவள் கொடுத்த சிறுகதை யொன்று காரின் டாஷ்போர்டில் கிடந்தது.

அன்று காலையில் அவரைத் தேடிக் கனகா வந்ததையும், கதையையும் சென்டையும் கொடுத்ததையும், கதையைப் பிரசுரிப்பதாக அவர் கூறியதையும் அவளுடைய முகத்தில் தோன்றிய மலர்ச்சியையும் எண்ணியபடியே காரைச் செலுத்தினார்.

சந்தானத்தை அனுப்பிவிட்டுச் சோபாவில் சாய்ந்த கோமளம், கண்களை மூடிக் கொண்டாள். ஆனந்தமிகுதியினால் மனம் குறுகுறுத்தது. ஆசிரியரின் புகழ்ச்சி, அவளுடைய காதுகளில் ஒலித்துக் கொண்டிருந்தது. ஆரம்ப காலத்தில் அவருடைய புகழ்ச்சி அவளுக்கு விரசமாகத் தோன்றியது. இப்போது அதே வார்த்தைகள் தேனாக இனித்தன. ஒரு பெண்ணின் அழகை அவளிடமே ஓர் அந்நியன் புகழ்வதில் உள்ள விரசத்தைக் கூட உணர முடியாத அளவுக்குப் புகழ்ச்சிப் போதையில் இறங்கியிருந்தாள். பிராந்தியோ விஸ்கியோ முதலில் பருகும்போது கசக்கும். தொண்டையில் தீயாக எரியும். ஆனால் பருகப் பருகக் கசப்பும் எரிச்சலும் மறைந்துவிடும். போதையில் அந்தக் கசப்பும் எரிச்சலும்கூட இதமாகத் தோன்றும். அதே போன்றுதான் புகழ்ச்சிப் போதையில் ஆழ்ந்து விட்ட கோமளம், சந்தானத்தின் சொற்களிலும், பார்வையிலும் பொதிந்திருந்த விரசத்தையும் திருட்டுத்தன்மையையும் உணரும் சக்தியை இழந்து விட்டாள்.

''கோமளத்தின் கணவர் என்பதால் இன்று மிஸ்டர் நாகசுந்தரத்துக்குப் புகழ்....''

இந்தச் சொற்களின் போதை, அறிவையும் மயக்கிக் கொண்டிருந்தது.

பக்கத்து அறையில் நாகசுந்தரம் தீர்ப்பை 'டிக்டேட்' செய்யும் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது.

'நீதிபதி பதவியில் என்ன உயிர் இருக்கிறது? இன்று தமிழ் நாட்டில் என்னைத் தெரிந்த அளவுக்கு இவரைப் பற்றித் தெரியுமா......?' கோமளத்தின் மனம் பல எண்ணங்களை அசை போட்டுக் கொண்டிருந்தது. பக்கத்து அறையில் நீதிபதி தம் கடமையில் மூழ்கியிருந்தார். (தொடரும்)





பெண்ணென்று சொன்னாலே பெருந்துன்பம்
சில நாளில்; கம்ஃபிட் ஒன்றுதான் கவலையை
மறக்கச் செய்யும். பத்துமடங்கு ஈரத்தைப்
பாங்காக உறிஞ்சும்...மற்றவற்றைவிட
ஐந்துமடங்கு அதிவிரைவில். மென்மையோ
மென்மை...முன்னே முட்டி நிற்காது, பின்னால்
களைந்தெறியும் தொல்லையில்லை—காரணம்,
நீரிலே கரைந்து விடலாம் நிம்மதியாக.
அதுவே கம்ஃபிட்!
கம்ஃபிட் சானிடரி டவல் கவலையை மறந்து
களிப்புடன் இருக்கச் செய்யும்!

கிறிஸ்டியன் ஹோடன் (இந்தியா) லிட்., கோத்தாரிஸ், கோவா கம்பெனியின் தயாரான தயாரிப்பு.

AIYARS-CH,4 TM

Printed and published by V. Vaidyanathan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600031. Editor: K. Rajendran


வெள்ளைத் துணிகள் பழுப்பேறுவானேன்?
New
Rinso
WASHES DAZZLING WHITE
பழுப்புக்கு மூடுவிழா,
வெளுப்புக்குத் திறப்பு விழா:
புது ரின்ஸோ பவுடர்
சோப்புப் போடப் போட வெள்ளைத் துணிகள் பழுப்பேறி அழுதுவடிகிறது அல்லவா? அதைத் தாக அகற்றப் பிறந்தது ரின்ஸோ. டிட்டர்ஜெண்ட் சலவைக் கலையிலே ஒரு முன்னேற்றப் புத்தேடு. விழி திறந்த விடிவெள்ளி. உரித்தெடுத்த ஒளிவெண்மைக்கு: ரின்ஸோ. ஓகோ என்னும் தரம் --- வாகான விலைநயம்.
வெண்மை பளிச்சிட வெளுப்பது ரின்ஸோ
லின்டாஸ்-RINSO-1-140 TM
இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு

Registered No. M. 4092
Registered as a Newspaper in Ceylon

அம்கோ பவர் ப்ளஸ் உதவியால் நின்றுவிடாமல் போங்கள்

காரோட்டிகளே! அம்கோ பவர் ப்ளஸ் துணையோடு முன்னேறுங்கள். அதுவே உங்களை என்றும் கைவிடாத பாட்டரி.

அம்கோவின் இணையற்ற சில்வர் கோபால்ட் தயாரிப்பு முறை, குறை பாடுகள் எதுவுமின்றி பாட்டரியைக் காக்க தொடர்ந்து செயலாற்றுகிறது. உண்மையில் அது 3 மடங்கு அதிகமாக நீடித்துழைக்கிறது.

ஒவ்வொரு அம்கோ பாட்டரியும் மிகவும் முன்னேறிய தொழில் நுணுக்கத்திலும் தயாரிக்கப்பட்டது. நாற்பது ஆண்டுகளின் அனுபவமும் கடுமையான தரநிர்ணயக் கட்டுப்பாடும் அதற்கு உதவுகின்றன.

ஆம், அம்கோ ஆற்றல் இழக்காத பாட்டரி. எல்லா வித வாகனங்களுக்கும், எல்லா பருவங்களுக்கும் தட்பவெப்ப நிலைகளுக்கும் சிறந்த பாட்டரி அம்கோ.





அம்கோ பாட்டரீஸ் லிமிடெட், பெங்களூர்.

MAC-(B)-AM-110 TAM